விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 15 வெள்ளிக்கிழமை (29.06.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 193

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

## சில மணி நேரம் மட்டும் மேனன் கொழும்பில் இருப்பார்

(கொழும்பு)

ஜனாதிபதி ராஜபக்ஷவையும், பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவையும் தனித்தனியாக சந்தித்துப் பேசுவதற்காக, கொழும்பு வரும் இந்தியப் பிரதமரின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் சில மணித்தியாலங்களே இலங்கையில் தங்கியிருப்பார்என்றுதகவல்கள்தெரிவிக்கின்றன.

இன்று பிற்பகல் கொழும்பு வரும் சிவ்சங்கர் மேனன் ஜனாதிபதியையும், பாதுக்காப்புச் செயலரையும் தனித்தனியாக, உதவியாளர் துணையின்றிச் சந்திக்கவுள்ளார். இந்தச் சந்திப்புக்கள் முடிந்ததும் அவர் உடனடியாகவே புதுடில்லிக்குப் புறப்பட்டுச் செல்வார் என்று கூறப்படுகிறது. இதனால், ஏனைய வேறு சந்திப்புக்கள் எதற்கும் வாய்ப்புக்கள் இல்லை என்று கருதப்படுகின்றது.

றியோ பிளஸ் 20 மாநாட்டில், ஜனாதிபதி மகிந்தவை இந்தியப் பிரதமர் சந்தித்துப் பேசியதையடுத்து இந்திய வெளிவிவகாரச் செயலாளர் ரஞ்சன் மத்தாய், பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பாக சிவ்சங்கர் மேனனின் கொழும்பு பயணத்தின் போது ஆராயப்படும் என்று கூறியிருந்தார். (20ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரனின் புலிகள் இயக்கம் போன்றே மகிந்தவின் அரசாங்கம் செயற்படுகிறது

### ரணில் விக்கிரமசிங்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் வேறுபாடு கிடையாது என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

வேலுப்பிள்ளை பிரபாகரனின் தலைமையிலான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் போன்றே அரசாங்கமும் செயற்பட்டு வருகின்றது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஜனாதிபதியினால் வாக்குறுதி அளிக்கப்பட்டதற்கு இணங்க முதலில் வட மாகாணசபைத் தேர்தல்களை அரசாங்கம் நடத்தியிருக்க வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தம் நிறைவடைந்துள்ளதாகவும், ஜனாதிபதி வாக்குறுதி அளித்ததனைப் போன்று வடக்கில் தேர்தல்களை நடத்த வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்கள் நடத்தப்பட்டுள்ள (19ஆம் பக்கம் பார்க்க)

## வெடி பொருட்கள் முல்லையில் மீட்பு


(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, மூங்கிலாறு பகுதியில் நிலத்தின் கீழ் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் ஆறு அதிசக்தி வாய்ந்த தொலை தொடர்பு கருவிகள், கிளைமோர் குண்டு ஒன்று, 10 பரல் டீசல் என்பன வவுனியா மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேக நபர் ஒருவரிடம் விசாரணை செய்த போது அவர் வழங்கிய வாக்கு மூலத்தின் அடிப்படையில் வவுனியா மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரி எஸ்.ஐ.பராக்கிரம தலைமை (20ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு மாகாண சபைத் தேர்தல் தற்போதைக்கு சாத்தியம் இல்லை

## அமைச்சர் ஹெகலிய தெரிவிப்பு



(கொழும்பு)

வடமாகாண தேர்தலை நடத்துவதில் சில நடைமுறைச் சிக்கல்கள் உள்ளதால் தேர்தலை தற்போதைக்கு நடத்த முடியாதென அரசாங்கம் நேற்று அறிவித்துள்ளது. இருப்பினும் வடக்கில் தேர்தலை நடத்துவதற்கான உரிய காலம் வந்தவுடன் அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்கும் என்று அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர்கள் மாநாட்டின் போது அமைச்சரவை பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## ஆளுநர்கள் மாநாடு இம்முறை யாழ்ப்பாணத்தில்

(கொழும்பு)

2012ஆம் ஆண்டிற்கான ஆளுநர்களின் மாநாடு இம்முறை யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

இலங்கையில் உள்ள 9 மாகாணங்களினதும் ஆளுநர்கள் பங்கேற்கும் இம் மாநாடு எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் யாழ்ப்பாணத்தில் இடம்பெறும். (ந)

## 4ஆம் மாடியில் 4 மணிநேரம் சிறிதரன் எம்.பி.மீது விசாரணை

(கொழும்பு)

வெளிநாட்டு தமிழ் இணையத்தளங்கள் சிலவற்றில் வெளியாகியிருந்த சமகால அரசியல் நிலைமைகள் குறித்த செவ்வியொன்று தொடர்பாக கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் நேற்று விசேட குற்றப் புலனாய்வுத் துறையினரால் விசாரிக்கப்பட்டுள்ளார்.

நேற்று நண்பகல் குறித்த பிரிவினரிடமிருந்து அழைப்பு வந்ததையடுத்து நாலாம் மாடிக்குச் சென்றிருந்த பாராளுமன்ற உறுப்பினர் சுமார் 3 தொடக்கம் 4 மணி நேரம் தொடர் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

இதன்போது குறித்த செவ்வி தொடர்பாகவும், கடந்தகாலத்தில் புலிகளுக்கும் அவருக்கும் ஏதேனும் தொடர்பிருந்ததா என்பது குறித்தும் விசாரிக்கப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் உறுதிப்படுத்தியுள்ளார்.

இதேவேளை இந்த விசாரணை தொடரும் என தெரிவிக்கப்பட்டிருப்பதுடன் குறித்த செவ்வியின் (20ஆம் பக்கம் பார்க்க)

## 2000ற்கும் மேற்பட்டவர்களுக்கு பட்டதாரிப் பயிலுநர் நியமனம்

### 2010,2011 இல் வெளியேறியோருக்கும் வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

பட்டதாரி பயிலுநர் தேர்வில் தோற்றிய 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பட்டதாரிகளுக்கு யாழ்.மாவட்டத்தில் நியமனம் வழங்கப்படவுள்ளது. இவர்களில் 2010, 2011 ஆண்டுகளில் பட்டம் பெற்றவர்களும் இணைத்துக் கொள்ளப்படுவர்.

தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விபரம் இன்னும் ஒரு சில தினங்களில் வெளியிடப்படும் எனவும் யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்திலுள்ள பட்டதாரிகளுக்கு அரசாங்க திணைக்களங்களில் வேலை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட பட்டதாரி பயிலுநர் நேர்முகத் தேர்வில் தோற்றியவர்களில் 2 ஆயிரத்துக்கும் அதிகமான பட்டதாரிகளுக்கு நியமனம் (20ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் அரசியல் கைதிகளுக்கு சுயவிருப்பின் பேரில் புனர்வாழ்வு!

## சிறைச்சாலைகள் அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு அவர்களின் சுய விருப்பத்தின் பேரில் புனர்வாழ்வளிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன் பிரகாரம், தாங்கள் புனர்வாழ்வுக்கு தயார் என கடிதம் மூலம் விருப்பத்தை தெரிவிக்கும் தமிழ் கைதிகள், நீதிமன்ற அனுமதியுடன் இந்த புனர்வாழ்வு திட்டத்திற்கு உள்வாங்கப்படுவர் என்று புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறு சீரமைப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்த புனர்வாழ்வு சுமார் ஒருவருடகாலத்திற்கு வழங்கப்படவுள்ள நிலையில் அதன் பின்னர் புனர்வாழ்வளிக்கப்பட்டோர் சமூகமயப்படுத்தப்படவுள்ளனர் என்றும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

நீண்டகாலமாக சிறைத்தண்டனை அனுபவிப்போர், (20ஆம் பக்கம் பார்க்க)

## வவு.சிறைக் கைதிகள் உண்ணாவிரதம்

(வவுனியா)

வவுனியா சிறைச்சாலையைச் சேர்ந்த தமிழ்க் கைதி ஒருவர் அனுராதபுரம் சிறைச்சாலையில் தனி அறை ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பதைக் கண்டித்தும் அவரை மீண்டும் வவுனியாவுக்கு மாற்ற நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியும் வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகள் 38 பேரும் உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 67 வருடங்கள் பேணிய பட்டத்துக்கு ஆப்பு வைத்துவிட்டது அரசாங்கம்

## உயர் தொழில்நுட்ப நிறுவன பழைய மாணவர்கள் சங்கம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கும் நடவடிக்கையில் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் சகல மாவட்டங்களிலும் பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டு நேர்முகப் பரீட்சை மேற்கொள்ளப்பட்டு நியமனம் வழங்கப்பட்ட போதிலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் உயர் தேசிய டிப்ளோமா பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்படவில்லை.

அரசின் இவ் நடவடிக்கை பட்டப்படிப்பினை நிறைவு செய்து விட்டு வேலை வாய்ப்புக்காக பல வருடங்கள் காத்திருந்த பட்டதாரிகளுக்கு பெரும் ஏமாற்றமாக உள்ளது.

உயர் தேசிய கணக்கியல், உயர் தேசிய வர்த்தக/முகாமைத்துவ பாட நெறியானது 67 வருடங்களை பூர்த்தி செய்துள்ள நிலையில் உயர் தேசிய கணக்கியல், உயர்தேசிய வர்த்தக, முகாமைத்துவ பட்டம் பெற்ற பட்டதாரிகள் ஓரம் கட்டப்பட்டுள்ளனர் என யாழ். உயர் தொழில்நுட்பவியல் நிறுவன பழைய மாணவ சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பில் அவர்களின் அறிக்கையில் உள்ளதாவது,

உயர் தேசிய கணக்கியல், உயர் தேசிய வர்த்தக/ முகாமைத்துவ பட்டமானது பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்களின் அமைச்சின் 30.10.1990 ஆம் திகதிய 46/90 சுற்று நிருபத்தில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழக வணிகமாணி பட்டத்திற்கு சமனான தகைமை என குறிப்பிடப்பட்டுள்ளது.

கற்கை நெறி ஆரம்பித்த நிலையில் இருந்து இன்று பட்டதாரி நியமனத்தில் எவ்வித பாகுபாடுமின்றி உயர் தேசிய கணக்கியல், உயர் தேசிய வர்த்தக/ முகாமைத்துவ பட்டதாரிகள் உள்வாங்கப்பட்டனர்.

தற்போது வழங்கப்பட்டு வரும் நியமனத்தில் ஏனைய மாவட்டங்களில் உயர் தேசிய கணக்கியல், உயர் தேசிய வர்த்தக/ முகாமைத்துவ பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டு வருகின்றது.

பல அரச நிறுவங்கள், பாடசாலைகள் என்பவற்றில் பெரும்பாலான உயர் தேசியக் கணக்கியல்,உயர்தேசிய வர்த்தக/முகாமைத்துவ பட்டம் பெற்ற பட்டதாரிகள் பெரும் பதவிகளில் கடமையாற்றி வருகின்றனர்.

உயர் தேசிய கணக்கியல், உயர் தேசி வர்த்தக/ முகாமைத்துவ பட்டதாரிகளையும் உள்வாங்கி நியமனம் வழங்குவதற்கு ஆவன செய்வது இன்றியமையாத கடமையாகும்.

இப்பட்டதாரிகளை ஒதுக்கி விடுவது சுற்று நிருபத்தை மீறும் நடவடிக்கை மட்டுமின்றி மேற்போன்ற கல்வி நிறுவனங்களில் 4 வருடங்கள் செலவு செய்து கல்வி கற்கின்ற மாணவர்களையும் வெறுப்படையச் செய்துள்ளது.

சுமார் ஐந்து வருடங்களுக்கு மேல் எவ்வித வேலை வாய்ப்புக்களையும் பெறாது காத்திருந்தவர்களுக்கு இறுதியில் ஏமாற்றமே மிஞ்சியுள்ளது.

எனவே உயர் தேசிய டிப்ளோமா பட்டதாரிகளுக்கு உடனடியாக நியமனம் வழங்க அரசு முன்வர வேண்டும் என அவர்களின் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ)

# நவநீதம்பிள்ளைக்கான வசதிகளை செய்து கொடுக்க இலங்கை தயார்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமை பிரதிநிதிகள் இலங்கைக்கு வரத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்கத் தயார் என இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ள ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கையிடம் அனுமதி கோரியுள்ளார்.


இலங்கையின் அபிவிருத்தி குறித்து ஆராய தமது பிரதிநிதிகளுக்கு இலங்கை வர வேண்டியுள்ளதாக நவநீதம்பிள்ளை கோரியுள்ளார் என வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்த கோரிக்கைக்கு சாதகமான பதில் ஒன்றை வெளிவிவகார அமைச்சு ஐ.நாவிடம் தெரிவித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

அதன்படி, இலங்கைக்குள் அவர்களை அனுமதிக்க, வசதி செய்து கொடுக்க இலங்கை தயார் எனவும், விஜயம் செய்யவுள்ளவர்களின் விபரம், அவர்களின் நோக்கம் என்பவை குறித்து வெளிவிவகார அமைச்சு ஐ.நா. மனித உரிமை பேரவையிடம் தகவல் கோரியுள்ளது.

அது குறித்த தகவல் கிடைத்ததும் ஐ.நா.பிரதிநிதிகள் இலங்கைக்கு வருவதற்கானவசதி கள் செய்து கொடுக்கப்படும் என இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-11)

# நுவரெலியாவில் விமான நிலையம் பணிகளை துரிதப்படுத்துமாறு ஜனாதிபதி உத்தரவு



நுவரெலியாவில்விமானநிலையம்அமைக்கும்பணிகளை துரிதப்படுத்துமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

உத்தேச உள்ளக விமான நிலையத்தை அமைக்கும் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்பட வேண்டுமென ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

உத்தேச விமான நிலையம் அமைக்கும் பணிகள் தொடர்பில் அலரி மாளிகையில் நேற்று விசேட கூட்டமொன்று நடைபெற்றது.

சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் பயணம் செய்யும் நுவரெலியாவில் விமான நிலையம் அமைப்பது சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தும் என ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். இந்த ஆண்டு இறுதிக்குள் விமான நிலையத்தை அமைக்கும் பணிகளை ஆரம்பிக்குமாறு பணிப்புரை விடுத்துள்ளார். (எ-11)

# மூதூரில் பௌத்த விகாரை தடுக்கக் கோருகிறார் யோகேஸ்வரன்

(திருகோணமலை)

திருகோணமலை, மூதூர் பிரதேசத்தில் உள்ள 3 ஆம் கட்டை மலை அருகாமையில் பௌத்த விகாரை அமைக்கப்படுவதை தடுக்குமாறு, பாராளுமன்ற உறுப்பினரான சீனித்தம்பி யோகேஸ்வரன் பௌத்த மத விவகார அமைச்சரும், பிரதமருமான தி.மு ஜயரத்னவுக்கு அவசரமாக கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தற்போதைய அரசாங்கத்தில் வடக்கு கிழக்கு மண்ணில் இவ்வாறான பௌத்த மத வணக்கஸ்தலங்கள் திட்டமிட்டு ஸ்தாபிக்கும் நடவடிக்கை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இது குறித்து தங்களுக்கு மகஜர் மூலமும், பாராளுமன்றத்திலும், பாராளுமன்ற விவகார அமைச்சின் கூட்டத்திலும் தங்கள் கவனத்துக்கு கொண்டு வந்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை.

ஆகையால், ஆசியாவில் ஆச்சரியமிக்க நாடாக இலங்கையை மாற்றுவதாக கூறும் தங்கள் அரசாங்கம் ஒரு போதும் சிங்கள மக்கள் வாழாத இடத்தில் சிறுபான்மை மக்களை வேதனைப்படுத்தும் வகையில் சிறுபான்மை மக்களின் மத வழிபாட்டை கொச்சப்படுத்தும் வகையில் திட்டமிட்டு பௌத்த மதம் ஸ்தாபிப்பது இலங்கை நாட்டின் வரலாற்றில் பெரும் ஆச்சரித்தைத் தான் ஏற்படுத்தி வருகின்றது.

ஆகவே தயவு செய்து உடனடியாக தங்களது ஆதரவு கட்சியான ஹெல உறுமயவின் நிகழ்ச்சி நிரலில் அடங்கி உள்ள வடக்கு கிழக்கு மண்ணில் இத்திட்டமிட்ட பௌத்த மத தாபிப்பை தடுத்து நிறுத்துமாறு அன்பாக கேட்டுக் கொள்கிறேன்.

இந்நிலை தொடருமாக இருந்தால், இது குறித்து இந்து மக்களை எழுச்சிப்படுத்த வேண்டிய சூழல் உருவாகும். இலங்கை வரலாற்றிலே தற்போதைய ஆட்சியில் தான் சிறுபான்மை மக்களின் வாழ்விடங்களில் பௌத்த மதம் ஸ்தாபிக்கும் செயற்பாடும் சிறுபான்மை மக்களின் வணக்கஸ்தலங்களை திட்டமிட்டு அழிக்கும் செயற்பாடு தொடர்ந்த வண் ணமே இருக்கிறது.

இவ் ஜனநாயக நாட்டில் நடைபெறும் இச்செயற்பாடு தடுத்து நிறுத்த வேண்டியது நாட்டின் பிரதமர் என்ற வகையில் தங்களுக்கு உரியதாகும். எனவே நியாயமான நடவடிக்கையை மேற்கொண்டு அதற்கான பதிலை தந்துதவுமாறு வேண்டுகிறேன் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-11)


## மாபெரும் பொத்தகக் கண்காட்சி

எதிர்வரும் யூலை முதலாம், 2ஆம், 3ஆம் திகதிகளில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் நடக்கவிருக்கும் வர்த்தக கண்காட்சியுடன் வவுனியா அறிவாலயத்தினரால் மாபெரும் பொத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இதில் பாடசாலை மற்றும் அனைத்து இலங்கை, இந்தியப் பொத்தகங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளதால் அனைத்து துறை சார்ந்தவர்களும் பங்கு கொண்டு பயன் பெறுமாறு கேட்டுக் கொள்கின்றனர்.

மேலதிக தொடர்பு:-

**அறிவாலயம்**

**190B, புகையிரத நிலைய வீதி, வவுனியா.**

**TP:- 024 4920733**

(C-358)


# கட்சிகளுடன் இணைந்து போட்டியிடப் போவதில்லை

## பிரபா கணேசன் தெரிவிப்பு

ஊடகங்களில் மலையக கட்சிகள் சில ஒன்றிணைந்து சப்ரகமுவ மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட போவதாக வந்த செய்தி கேலிக்குரியதாகும் என ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது,

மலையக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய சங்கம், ஜனநாயக மக்கள் முன்னணி ஆகியன இணைந்து இரத்தினபுரி மாவட்டத்தில் போட்டி போடுவதற்காகப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளதாகச் செய்திகள் வெளி வந்துள்ளன. இது நடைமுறைக்குச் சாத்தியப்படாத விடயமாகும்.

அரசாங்கத்துடன் இணைந்து அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்து வரும் முதல் இரு கட்சிகளும் அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்து தமிழ் தேசி கூட்டமைப்புடன் அரசியல் நடத்தி வரும் ஜனநாயக மக்கள் முன்னணியுடன் ஒரே மேடையில் எவ்வாறு அமரமுடியும்?

அரசாங்கத்துடன் இணைந்திருக்கும் கட்சிகள் எவ்வாறு எதிர்க்கட்சி வரிசையில் இருப்பவர்களுடன் இணைந்து போட்டியிட முடியும். மக்களின் மத்தியிலே ஒரு எதிர்பார்ப்பை ஏற்படுத்தி விட்டு அதில் குளிர்காய முற்படுவதுதான் இச் செய்தியின் உள் நோக்கமாகும்.

யதார்த்தமான மக்கள் நலன் கொண்ட அரசியல் செய்யாமல் தன்னையும் தன் கட்சியையும் வளர்ப்பதற்காக ஊடக அரசியல் செய்பவர்களை மக்கள் வெகு விரைவில் புரிந்து கொள்வார்கள்.

நான் உட்பட அரசாங்கத்திலுள்ள மலையக கட்சிகள் இரத்தினபுரி மாவட்டத்தில் அதிகூடிய உறுப்பினர்களை கொண்ட தொழிற்சங்கமான இலங்கை தொழிலாளர் காங்கிரசுடன் இணைந்து ஒரே சின்னத்தில் போட்டியிடுவோமேயானால் இரத்தினபுரி மாவட்ட தமிழ் பிரதிநிதித் துவத்தை பெற்றுக் கொள்ள முடியும் என்றார். (எ-11)

# யூலை 6 அன்று வைத்தியர்கள் பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகணத்தில் உள்ள அனைத்து வைத்தியர்களும் வரும் யூலை 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை பணிப் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர்.

புற்றுநோய் சிகிச்சை நிபுணர் ஜெயக்குமாரின் வீட்டின் மீது இனம்தெரியாதோரால் தாக்கப்பட்டமை சம்பந்தமாக யாழ் பொலிஸாரின் நடவடிக்கை திருப்திகரமாக இல்லை என்பதனாலே இப் பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

இப் பகிஷ்கரிப்பு போராட்டத்தில் வைத்திய துறை சார்ந்த அனைவரையும் ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

சிறந்த தீர்வு ஒன்று பெற்றுக் கொள்ளும் வரை பகிஷ்கரிப்பு போராட்டம் தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)

# நூலகமும் தகவல் விஞ்ஞானமும் டிப்ளோமா

(யாழ்ப்பாணம்)

இலங்கை நூலகச் சங்கத்தின் யாழ்ப்பாண நிலையத்தினால் நடத்தப்படும் நூலகமும் தகவல் விஞ்ஞானமும் டிப்ளோமா கற்கைநெறிக்கான வகுப்புக்கள் நாளையும், நாளை மறுதினமும் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் என ஒருங்கிணைப்பாளர் திருமதி கல்பனா சந்திரசேகரர் அறிவித்துள்ளார். (ஏ)




# இன்று ஒரு தகவல்

## தீவிர குருபக்தி

ஒருநாள் ஒரு தகப்பனார் தன்னுடைய பிள்ளையை அழைத்துக் கொண்டு என்னிடம் வந்தார்.

''சேர்... இவன் சரியாக படிக்கமாட்டேன் என்று சொல்கிறான். பெரியவர்களை கனம் செய்வதில்லை. மதிக்கமாட்டேன் என்கிறான். நீங்கள் சிறிது காலம் இவனுக்கு குருவாக இருந்து நல்ல விடயங்களைக் கற்றுக் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று கூறினார்.

பெரியவர்களையே மதிக்காதவன் எப்படி என்னை மதிக்கப் போகிறான். யோசித்து பார்த்துவிட்டு வேண்டாம்; என்னை விட்டு விடுங்கள் என்றேன். அவரும் விடமாட்டேன் என்றார்.

பின்னர் ஒருவாறாக பையனை என்னுடைய சீடனாக ஏற்றுக் கொண்டேன்.

குருபக்தியென்றால் அது எப்படி இருக்க வேண்டும் என்பதைப்பற்றி சொல்லிக் கொடுத்தேன்.

"சதமகர் " என்று ஒரு குரு இருந்தார். அவருக்கு ஒரு சீடன் பெயர் "துளசி சைதன்யன்"– இவன் தன்னுடைய குருவுக்கு எந்த நேரத்திலே என்ன தேவை என்பதை புரிந்து சேவை செய்கிறவன்.

ஆனால், இவைபற்றி மற்றைய சீடர்களுக்குப் பொறாமை வந்து விட்டது. இவன் மட்டும் இப்படி இருக்கிறான் என்று குருவிடம் போய் கோள் மூட்டினார்கள். அவன் சரியில்லை என்று புகார் கூறினார்கள்.

இருந்தாலும் குரு இவற்றை நம்பவில்லை. அவருக்குத் தெரியும் யார் யார் எப்படி என்று. துளசி சைதன்யன் பெருமையை மற்றைய சீடர்களுக்கு உணர்த்த வேண்டும் என்று நினைத்தார். அதற்கு ஒரு வழி செய்தார்.

ஒருநாள் சீடர்களையெல்லாம் அழைத்துக் கொண்டு காட்டு வழியாக சென்று கொண்டிருந்தார். ஒரு இடத்தில் ஒரு பெரிய மலையருவி கொட்டிக் கொண்டிருந்தது.

குரு, சீடர்கள் பக்கம் திரும்பினார். "இந்த மலையின் மேலேயிருந்து அந்த படு பாதாளத்திலே குதிப்பதற்கு உங்களில் யாரால் முடியும்?'' என்று கேட்டார். ஒரு சீடனும் வாய் திறக்கவில்லை. பின்னால் மூட்டை முடிச்சோடு வந்து கொண்டிருந்த துளசிசைதன்யனைப் பார்த்து; ''நீ மேலேயிருந்து அருவியிலே குதி!'' என்றார். ''அப்படியே செய்கிறேன் சுவாமி!'' என்றான்.

ஓடிப்போய் ''பொத்''என்று குதித்தான். அடுத்த கணமே குருநாதர் தனது யோக சக்தியினாலே பறந்து போய் அவனை ஏந்திக் கொண்டார்.

மற்றைய சீடர்களுக்கெல்லாம் ஒரு மாதிரியாக ஆகிவிட்டது. அடுத்தபடியாக என்ன செய்யலாமென யோசித்தார்கள்; இவனை மாட்டி விடுவதற்காக...

ஒருநாள் வெற்றிலை இடிக்கிற சிறிய உரலையும் உலக்கையையும் எடுத்து ஒளித்து வைத்து விட்டார்கள். சதமகர் சந்நியாசி வெற்றிலை போடுபவர். இடித்துத்தான் வெற்றிலை கொடுக்க வேண்டும். துளசி அவருக்கு இடித்துக் கொடுப்பான்.

குரு கேட்டு விட்டார் வெற்றிலை தரும்படி. என்ன செய்வது குரு சேவை மிக முக்கியம்.

இவன் வெற்றிலையையும் பாக்கையும் தன்னுடைய வாயிலில் போட்டு மென்று... அதை எடுத்து அவரிடம் கொடுத்து விட்டான். குரு எதையோ படித்துக்கொண்டே இதை வாங்கி வாயிலே போட்டுக் கொண்டார்.

"துளசி இன்றைக்கு தாம்பூலம் நன்றாக இடிபட்டிருக்கிறது. சுவையாக இருக்கிறது. அதை இடித்த பாத்திரத்தை கண்ணாலே நான் பார்க்க ஆசையாகவுள்ளேன்''என்றார்.

''அதை மட்டும் அனுப்பி வைத்தால் போதும்... உன் வருகை வேண்டாம்'' என்று வேறாகவும் சொல்லிவிட்டார்.

இதைக் கேட்டதும் துளசி தவித்துப் போய் விட்டான். இவன் போகாமல் எப்படி வாயை மட்டும் அனுப்பி வைக்க முடியும்? இவனது தவிப்பு மற்றைய சீடர்களுக்கு மனசினுள் மிகவும் சந்தோஷத்தை ஏற்படுத்தியது.

துளசி சிறிதும் யோசிக்கவில்லை. வாளை எடுத்தான். தன் தலையையே அறுத்தான்... இன்னொரு சீடனிடம் கொடுத்தனுப்பினான். சீடனும் அந்தத் தலையைக் கொண்டுபோய் குரு முன்னால் வைத்தான். அந்த தலையிலே வாய் திறந்து இருந்தது. அது சிவப்பாக இருந்தது.

அவனுடைய குருபக்தியை இப்போது எல்லோரும் ஒத்துக் கொண்டார்கள். அதன் பின்பு அந்தக்குரு– சதமகர் தன்னுடைய அற்புதத் திறமையினாலே தலையை மறுபடியும் ஒட்டி வைத்தார். துளசிக்கு உயிர் வந்து விட்டது! என்று அந்தக் கதையைச் சொல்லி ''துளசி சைதன்யனுடைய குருபக்தி எப்படி?'' என்று கேட்டேன்; என்னிடமிருந்த பையனிடம்.

"மிகவும் திறமை சேர்! என்றான் மிகவும் அடக்கமாக.

நான் அவனிடம் விளையாட்டாகக் கேட்டேன்;

''ஏம்பா... உன்னுடைய குருபக்தியை என்னிடம் காட்டுவதற்கு உன்னுடைய கழுத்தை நீயே அறுக்க வேண்டும் என்று நான் சொன்னால் அதை நீ செய்வாயா?'' என்று கேட்டேன்.

''என்னுடைய கழுத்தை நானே அறுக்க வேண்டிய அவசியம் இல்லை சேர்!'' என்றான்.

"ஏன்டா?''என்றேன்.

''அதே காரியத்தைத்தான் இனிமேல் நீங்கள் நீங்கள் தினமும் செய்யப்போகிறீர்கள் சேர்?''என்று கூறினான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# மிதிவெடி அகற்றப்பட்ட பிரதேசம் ஆயினும் வெடிக்காத பல பொருட்கள் அங்கு இருக்கும்!

## அனர்த்தங்கள் நிகழலாம்; அவதானம் தேவை

(யாழ்ப்பாணம்)

மிதிவெடி அகற்றப்பட்ட பிரதே சம் என சான்றிதழ் வழங்கப்பட்ட பிரதேசங்களில் வெடிக்காத வெடி பொருட்கள் இருப்பது தவிர்க்க முடியாத ஒன்று. மக்கள் விழிப்புணர்வுடன் இருக்குமிடத்து அனர்த்தங்களிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியும் என யாழ்.மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு நிலைய பொறுப்பதிகாரி வ.முருகதாஸ் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் மக்களை விரைவாக மீள்குடியேற்றும் நோக்குடன் தொண்டு நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் மிதிவெடி அகற்றும் பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன.

மிதிவெடிகள் அகற்றப்பட்ட பல பிரதேசங்களில் மக்களும் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர். இருப்பினும் வெடிக்காத வெடி பொருட்களின் அபாயம் சில பிரதேசங்களில் அதிகமாகவுள்ளது.

நாளாந்தம் 25 முதல் 30 வரையான வெடிக்காத வெடி பொருட்கள் மீட்கப்பட்டு வருகின்றன.

மக்கள் இந்த வெடிக்காத வெடி பொருட்கள் தொடர்பில் விழிப்புணர்வுடன் இருக்குமிடத்து அனர்த்தங்கள் ஏற்படுத்துவதிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ள முடியும்.

மிதிவெடிகள் அகற்றப்பட்ட பிரதேசம் என சான்றிதழ் வழங்கப்பட்ட பிரதேசங்களிலும் இந்த வெடிக்காத வெடி பொருட்கள் இனங்காணப்பட்டுள்ளன.

மிதிவெடிகள் முற்றாக அகற்றப்பட்டாலும் வெடிக்காத வெடிபொருட்கள் தொடர்பில் விழிப்புணர்வு அவசியம்.

இதேவேளை, மிதிவெடி அபாயப் பலகைகள், மிதிவெடி அபாய சமிக்ஞைகள் வைக்கப்பட்டுள்ள பிரதேசங்களுக்குள் நுழைவதை முற்றாக தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

அண்மையில் கூட வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் மிதிவெடியில் அகப்பட்டு தனது காலினை இழந்துள்ளார்.

இவ்வாறான அனர்த்தங்களிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்வதற்கு மக்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (8-6)

## ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்கான யாத்திரிகர்களின் விபரத்தை வெளியிட திட்டம்

புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக தெரிவு செய்யப்படும் யாத்திரிகர்களின் பெயர் விபரங்களை வெளியிட திட்டமிட்டுள்ளதாக ஹஜ் குழுத் தலைவரும் சிரேஷ்ட அமைச்சருமான ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்தார்.

ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்கு பணத்தை செலுத்தி முன்கூட்டி பதிவு செய்யப்பட்ட வரிசை கிரமப்படியே அந்த பெயர் பட்டியல் அமையும் என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக இம்முறை 6 ஆயிரம் விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. என்றாலும் 2 ஆயிரத்து 800 பேருக்கே தற்பொழுது கோட்டா ஒதுக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 3 ஆயிரத்து 200 பேருக்குமாக அனுமதி வழங்குவது தொடர்பிலும் கோட்டாக்களை ஒதுக்குதல் தொடர்பிலும் ஏப்ரல் மாதம் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக சவுதி அரசு கூறியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இம்முறை விண்ணப்பித்துள்ள ஆறாயிரம் பேருக்கும் புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்கு வசதிகள் வழங்க வேண்டும் என்று இம்முறை மக்கா விஜயம் செய்திருந்த போது புனித கஃபாவில் வைத்து பிரார்த்தித்தாகவும் அமைச்சர் பௌசி கூறினார். (8-2)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 110 | 100 | 60 |
| உருளைக்கிழங்கு | 90 | 85-90 | 110 | 90 |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 250 | 250 |
| தக்காளி | 130 | 140 | 150 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 40 | 40 |
| கோவா | 80 | 100 | 90 | 80 |
| கரட் | 100 | 160 | 130 | 160 |
| பூசணி | 70 | 60 | 50 | 60 |
| புடோல் | 70 | 40 | 65 | 70 |
| வாழைக்காய் | 40-50 | 50 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 100-110 | 120-140 | 110 | 120 |
| பெரிய வெங்காயம் | 85 | 110 | 120 | 90 |
| பாகற்காய் | 120 | 160 | 100 | 100 |
| வெண்டிக்காய் | 70 | 80 | 90 | 100 |
| கருணைக் கிழங்கு | -- | 90 | 100 | -- |
| பயற்றங்காய் | 100 | 160 | 160 | 80 |
| லீக்ஸ் | 100 | 160 | 150 | 160 |
| பீற்றூட் | -- | 70 | 60 | 80 |
| கறிமிளகாய் | 120 | 140 | 170 | 170 |
| முருங்கைக்காய் | 150 | 200 | 200 | 120 |
| போஞ்சி | 100 | 170 | 150 | 200 |
| கத்தரிதம்புள்ள | 60 | 80 | 90 | -- |
| கீரை – 1 பிடி | 10-15 | 20 | 25 | 20 |
| தேசிக்காய் | 120 | 90 | 100 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 15-30 | 30 | 20 | 18-20 |

## இராசி பலன்

29.06.2012

(ஆனி 15, வெள்ளிக்கிழமை)

சூரிய உதயம் காலை 5.56 மணிக்கு

தசமி பிற்பகல் 12.32 மணிவரை

சுவாதி முன்னிரவு 11.04 மணிவரை

இராகுகாலம் 10.26-11.56 மணிவரை

சுபநேரம் 5.56-7.26 மணிவரை

**மேடம்** அபூர்வ சந்திப்புக்கள் இடம்பெறலாம், பயணங்கள் மகிழ்ச்சி தரும் வகையில் அமையலாம், வாழ்க்கைத் துணை வழியே மகிழ்ச்சிக்குரிய செய்திகள் வந்து சேரலாம், செல்வாக்கான நாள்.

**இடபம்** ஆரோக்கியம் சீராகி ஆனந்தமடைவீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், தொழில் சம்பந்தப்பட்ட வகையில் முக்கிய முடிவெடுப்பீர்கள், உதிரி வருமானங்கள் வந்து சேரும் நாள்.

**மிதுனம்** பிள்ளைகளுக்காக சில செலவுகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும், மாமன், மைத்துனர் வழியில் இனிய செய்தியொன்று வந்து சேரலாம், புண்ணிய கருமங்களில் நாட்டம் காட்டுவீர்கள்.

**கடகம்** கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள், விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பெற்றோர் மீது பிரியம் கூடும்.

**சிங்கம்** நண்பர்களிடம் ஒப்படைத்த வேலைகளை நல்ல விதமாக ஒப்படைப்பர், பணத் தேவைகள் பூர்த்தியாகும் நாள், வெற்றிகள் குவிய விநாயகரை வழிபட வேண்டிய நாள், சுவாரஸ்யமான நாள்.

**கன்னி** திடீர் பண வரவு மனதிற்கு சந்தோஷம் தரும், எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடித்து வெற்றி காண்பீர்கள், மக்கள் போற்றும் வாழ்வமைய விக்னேஸ்வரனை வழிபட வேண்டிய நாள்.

**துலாம்** கோயில் வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், செலவுக்கேற்ப வருமானம் வந்து சேரும், திடீர் பயணங்களால் நன்மையுண்டு.

**விருச்சிகம்** பணத்தேவைகள் பூர்த்தியாகும், பயணங்களால் பலன் கிடைக்கும், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், வழிபாட்டால் நலம் காண வேண்டிய நாள், சற்று அலைச்சல்கள் அதிகரிக்கும்.

**தனுசு** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலை மோதும் நாள், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், எண்ணங்கள் நிறைவேற ஏக தந்தனை வழிபட வேண்டிய நாள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள்.

**மகரம்** கனவுகள் நனவாக கற்பக மூர்த்தியை வழிபட வேண்டிய நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், தந்தை வழி உறவுகளால் நன்மையுண்டு.

**கும்பம்** இறை வழிபாட்டால் இனிமை காண வேண்டிய நாள், மாலை நேரம் பிரிய மானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், உயரதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள்.

**மீனம்** வளர்ச்சி காண வழிபாட்டினை மேற்கொள்ள வேண்டிய நாள், வரவை விட செலவுகள் அதிகரிக்கலாம், குடும்பத்தினரிடம் கோபமாகப் பேசி விட்டு பின்னர் வருத்தமடையும் சூழ்நிலை உருவாகும்.

வளவன்

# ஆலோசனைக் கூட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கண்ணாடிபிட்டி இந்து மயான அபிவிருத்தி சபை ஆலோசனைக் கூட்டம் நாளை சனிக்கிழமை சாவகச்சேரி நகராட்சி மன்ற மண்டபத்தில் பிற்பகல் 4 மணிக்கு நகரபிதா இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் சகல அங்கத்தவர்களையும் நலன் விரும்பிகளையும் கலந்து கொண்டு தகுந்த ஆலோசனை வழங்கி உதவுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (8-3-29)

# விளையாட்டு நிகழ்வு

(சாவகச்சேரி)

பூவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய சிறுவர்களின் விளையாட்டு நிகழ்வு எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மைதானத்தில் நிலையத் தலைவர் வை.இராசரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி கலந்து சிறப்பிக்கவுள்ளார். (8-3-29)

# அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கிழக்கு ஸ்ரீ சொர்ணவரத பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

தினமும் பகல் 10 மணிக்கு அபிஷேக பூஜைகள் நடைபெற்று மாலை 6.30 மணிக்கு வசந்தமண்டபப்பூசை நடைபெறும்.

இறுதிநாளான எதிர்வரும் ஜூலை மாதம் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை 1008 சங்காபிஷேகம் நடைபெறவுள்ளதாகவும் தேவஸ்தான தலைவர் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் உரும்பிராய் மேற்கு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் அலங்கார உற்சவம் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழா நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் ஜூலை மாதம் 5 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு சங்காபிஷேகமும் தொடர்ந்து முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்.

அத்துடன் தினமும் இரவு 7.30 மணிக்கு செஞ்சொற்செல்வர் எஸ்.கே. என். தவராசாவின் பெரியபுராணம் எனும் தலைப்பிலான இசைச்சொற்பொழிவும் நடைபெற்று வருவதாக ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (8-9)

# இளைஞர்களை தாக்கிய இராணுவம் பகிரங்கமாக மன்னிப்புக் கோரியது

(கரவெட்டி)

வடமராட்சி வியாபாரி மூலை கலைவாணி சனசமூக நிலையத்திற்கு முன்பாக நின்ற அப்பகுதி இளைஞர்களை தாக்கிய இராணுவத்தினர் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் வைத்து இளைஞர்களிடம் நேற்றுமுன்தினம் மன்னிப்பு கோரினர்.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 8.30 மணிக்கு அப்பகுதியில் நின்ற இளைஞர்களை, முன்னாள் உதவித்தபாலதிபர் மற்றும் அவரது மகன் ஆகியோரை தாக்கிய சம்பவம் தொடர்பாக நேற்று முன்தினம் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் விசாரணை இடம்பெற்றது.

இதன்போது விசாரணையை மேற்கொண்ட பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சம்பவத்துடன் தொடர்புடைய இளைஞர்கள் மற்றும் இராணுவத்தினர் ஆகியோரை விசாரணை செய்த போது இராணுவத்தினர் தாம் செய்த தவறை ஒப்புக் கொண்டு இளைஞர்களிடம் மன்னிப்பு கோரினர்.

எதிர்வரும் காலங்களில் தமக்கு இவ்வாறான சம்பவங்கள் ஏற்படக்கூடாதெனவும் இளைஞர்கள் பொலிஸாரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (8-3-24)

# வடமராட்சி கிழக்குப் பகுதியில் குடும்ப வன்முறைகள் அதிகரிப்பு

## தாழையடி பொலிஸ் பதிவுகள் தகவல்

(கரவெட்டி)

வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் நடைபெற்ற அதிகளவான குடும்ப வன்முறைச் சம்பவங்களே பருத்தித்துறை தாழையடி உப பொலிஸ் காரியாலயத்தில் பதியப்பட்டுள்ளதாக பதிவேட்டுபுள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

வடமராட்சி கிழக்குப் பிரதேசம் பின் தங்கிய பிரதேசமாக விளங்குவதுடன் அதிகமாக யுத்தத்தால் இழப்புக்களை சந்தித்த பிரதேசமாகும்.

அண்மையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்களில் அதிகளவானோர் வறுமையின் கோரப்பிடியில் சிக்கியுள்ளதாலும் சிறுவயது திருமணம், மதுபோதைப் பாவனை அதிகரிப்பு, புரிந்துணர்வின்மை ஆகிய காரணங்களினால் குடும்ப வன்முறை அதிகரித்துள்ளது.

இதனைக் கட்டுப்படுத்த அம்மக்கள் மத்தியில் குடும்ப வன்முறை எதிர்ப்பு விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடத்தப்படுவதுடன் குடும்பத்தில் மகிழ்ச்சி, ஒற்றுமை, புரிந்துணர்வுகளை ஏற்படுத்தும் போது இவ்வாறான குடும்ப வன்முறையை இல்லாது ஒழிக்க முடியும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (8-3-24)

# மதுப்பிரியர்களினால் மக்களுக்கு அசௌகரியம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பெருங்குளம் சந்தியில் உள்ள கள்ளுத் தவறணையை அவ்விடத்தில் இருந்து மாற்றும்படி பிரேரணை ஒன்றை சாவகச்சேரி நகராட்சி மன்ற உறுப்பினர் த.சுதர்சன் முன்வைத்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற சபையின் மாதாந்த கூட்டத்திலேயே இப் பிரேரணை முன்வைக்கப்பட்டது.

மக்கள் நெருக்கமாக வசிக்கும் அப் பிரதேசத்தில் மதுப்பாவனையாளர்கள் மக்களுக்கும் அவ்விடத்தால் செல்லும் பாடசாலை மாணவர்களுக்கும் பெரும் இடையூறாக இருப்பதாகவும் அவர் பிரேரணையில் தெரிவித்துள்ளார்.

இப்பிரேரணை சபையில் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டதையடுத்து சபைத் தலைவர் உடனடியாக அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உறுதியளித்துள்ளார். (8-3-29)

# சிறுகதைத்தொகுதி அறிமுக விழா

புலோலியூர் ஆ. இரத்தினவேலோன் எழுதிய காவியமாய்... நெஞ்சின் ஓவியமாய்... எனும் சிறுகதைத்தொகுதி அறிமுக விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு புலோலி இலக்கிய சோலை அறிவோர் ஒன்றுகூடல் நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இ.து.குலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வெளியீட்டுரையை ஆ. கந்தையா, மதிப்பீட்டுரையை கொற்றை பி.கிருஷ்ணானந்தன், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணன் ஆகியோர் ஆற்றவுள்ளனர். இந்நூலின் சிறப்புப் பிரதிகளை பருத்தித்துறை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் சே. செல்வசுகுணா, எழுத்தாளர் வட அல்வை சித்திரா சின்னராஜா, ப. விக்னேஸ்வரன், எட்வேட் எட்வின், எழுத்தாளர் த. அஜந்தகுமார் ஆகியோர் பெற்றுக் கொள்வர். (8-9)

# தற்செயல் நிவாரண கொடுப்பனவு விபரம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேசத்தில் இருந்து தற்செயல் நிவாரண கொடுப்பனவிற்காக விண்ணப்பித்தவர்களில் 12 பயனாளிகளுக்குக்கான முதலாம், இரண்டாம் கட்ட கொடுப்பனவுகள் தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு கிடைத்துள்ளது.

இக்கொடுப்பனவிற்கு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் விபரம் தென்மராட்சி பிரதேச செயலாளர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலனால் அறிவிக்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் பெயர் விபரம் வருமாறு,

**முதலாம் கட்டம்**

தம்பிராசா சசீந்திரன் (இடைக்குறிச்சி, வரணி), செல்வராசா குபேந்திரராணி (நுணாவில் மத்தி, சாவகச்சேரி), நாகேந்திரம் பாண்டுரங்கன் (கெற்பெலி மேற்கு, மிருசுவில்)

**இரண்டாம் கட்டம்**

சங்கர் விதுயா ( கச்சாய் தெற்கு, கொடிகாமம்), சின்னத்துரை பரிமளா ( கரம்பைக் குறிச்சி மேற்கு, வரணி), மாணிக்கம் செல்வராசா( வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமம்), வெள்ளையான் மகேஸ்வரன் ( கரம்பைக் குறிச்சி மேற்கு, வரணி), உதயகுமார் உதயதீபன் ( கரம்பைக்குறிச்சி மேற்கு, வரணி), வேலுப்பிள்ளை நாகம்மா (கரம்பைக்குறிச்சி, மேற்கு, வரணி), ஜெயக்குமார் சாந்தி (கைதடி தெற்கு உதயநகர்), தர்மகுலசிங்கம் புஸ்பமலர் (மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி), சின்னத்தம்பி கணேஸ்வரன் ( மீசாலை கிழக்கு, மீசாலை)

தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் அனைவரையும் எதிர்வரும் ஜூலை மாதம் 2 ஆம் திகதி தென்மராட்சி பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவிற்கு ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் வருகை தருமாறு தென்மராட்சி பிரதேச செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. (8-3-29)




# நோயாளர்களுக்கான முச்சக்கரவண்டி சேவை

(சாவகச்சேரி)

நோயாளர்களுக்காக சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினரால் வழங்கப்படும் முச்சக்கரவண்டி சேவைக்கான ஆரம்பநிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைத்திய கலாநிதி ரி.குகதாசனால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

எனவே இச்சேவையை பயன்படுத்தி பயன்பெறுமாறு சாவகச்சேரி நகராட்சி மன்றத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை அறிவித்துள்ளார். (8-3-29)

# மூன்று கோடி ரூபா செலவில் 3 வீதிகள் புனரமைக்கப்படும்

(கரவெட்டி)

வல்வெட்டித்துறை பிரதேசத்தில் 3 வீதிகள் சுமார் 3 கோடி ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளதாக வல்வெட்டித்துறை நகர சபையின் உபதவிசாளர் கந்தசாமி சதீஸ் தெரிவித்துள்ளார்.

வல்வெட்டித்துறை பிரதேசத்தில் உள்ள தொண்டைமானாறு வீதி, நாவலடி வீதி, நெற்கொழு வீதி ஆகியவையே புனரமைக்கப்படவுள்ளன.

வீதி புனரமைப்புகளுக்கு ஒப்பந்தகாரரிடம் இவ்வேலைத்திட்டத்தை பாரப்படுத்தியுள்ளதாகவும் மிக விரைவில் இவ்வீதி புனரமைப்புப் பணிகள் இடம்பெறவுள்ளதெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (8-3-24)

# மஹோற்சவம் ஆரம்பம்

(சாவகச்சேரி)

நுணாவில் மேற்கு ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 19 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இதில் எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு சப்பைரதத் திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் எதிர்வரும் ஜூலை மாதம் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெற்று மறுநாள் புதன்கிழமை காலை 10 மணிக்கு பூங்காவனத் திருவிழாவுடன் உற்சவம் நிறைவு பெறவுள்ளது. (8-3-29)

# அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ். வலயக் கல்விப் பணிமனையில் உள்ள முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மாணிக்கராஜா அறிவித்துள்ளார். (9-6)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப்பிரதேசம், சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயப்பகுதி, மல்லாகம், தெல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், யாழ்.பிரதான வீதியில் நீதிமன்றம் தொடக்கம் கச்சேரி வரையான பிரதேசம், உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடப் பிரதேசம், திருநெல்வேலிப்பிரதேசம், யாழ். நகரம் முழுவதும் ஆகிய இடங்களிலும் அத்துடன் காலை 8.30 மணியிலிருந்து நண்பகல் 12 மணிவரை யாழ். குடாநாடு முழுவதும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

# மணிபல்லவத்தில் மஹோற்சவம்



## நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

### பதினொராம் திருவிழா

### நாகம்மா தாயே

நாலுபக்கம் கடல் சூழ்ந்த நயினாதீவிலே
நாகம்மா நீ கண்ணகிதானே
நாகமலர் என்றாலே உன் ஞாபகம்
நாகபாம்பு நல்லபாம்பு நீதானம்மா
நல் அருளை எல்லோருக்கும் தருவாயம்மா
நயினாதீவு வாசலிலே உன் கோயில் தான்
நம்பியவர் எல்லோருக்கும் அருள்பவள் நீயே
பக்தர்ளை வரவேற்கும் பேரழகுடன்
கடலுக்குள்ளே சின்ன தீவில் உன் கோயில்தான்
பலகாலம் அருள் சொரியும் சிறப்புமிக்கது
கடலலையில் நீந்துகின்ற பாம்பு நீயம்மா
பாசம் உள்ள தாயைவிட சிறந்த
கருணை உள்ள தெய்வதாயம்மா
பரிவுடனே எல்லோரையும் காப்பாயம்மா

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

### நயினை நாக சக்தி

பாம்பணையில் வீற்றிருந்து அருள்பாலிக்கும்
நாகபூஷணி அன்னையே
வேண்டுபவருக்கு அருளை வாரிவழங்கும்
மகா சக்தி அன்னையே
வேப்பிலையை மாலையாக அணிந்த
வெக்காளி அன்னையே
வேல் போன்ற இருவிழிகளையுடைய
கண்ணாத்தாள் அன்னையே
உன்னை நாடிவருபவருக்கு நலம் காட்டு
நாகசக்தி தாயே! தாயே!

ச.உமாசங்கர்
நாச்சிமார் கோவிலடி

### சர்வலோக நாயகியே திருவருள் தாராயோ

சர்ப்பம் குடை பிடிக்க
சமுத்திரத்தின் அலைகளின் நடுவே
சரித்திரப்புகழ் மணிபல்லவத்திலே
சலன மற்று வீற்றிருந்து
சஞ்சலத்துடன் வரும் அடியார்களுக்கு
சகல போகங்களும் அளிக்கும்
சர்வலோக நாயகி நாகபூஷணியே
சரணடைந்தோம் திருவருள் தாராயோ

சொ.தர்மகுலசிங்கம்
(இளைப்பாறிய ஆசிரியர்)
நாயன்மார்கட்டு

## வரட்சியால் நீர் நிலைகள் பாதிப்பு; நீர்மின் உற்பத்தியில் நெருக்கடி

வரட்சியான காலநிலை தொடர்ந்தால் இரு வாரங்களில் நீர்மின் உற்பத்தி முழுமையாக பாதிக்கப்பட்டு நெருக்கடியான நிலைமை ஏற்படலாம் என மின்சார சபை எச்சரித்துள்ளது.

பிரதான நீர்த்தேக்கங்களில் மேலும் 296 கிலோ வோர்ட் மணித்தியாலங்கள் மின் உற்பத்தி செய்யக்கூடிய அளவு நீரே உள்ளதாகவும் இந்நிலையில் நீர்மின் உற்பத்தி 12 வீதமாக குறைந்துள்ளதாகவும் மின்சார சபை உயரதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

நீர்த்தேக்கங்கள் அமைந்துள்ள பகுதிகளில் கடந்த ஓரிரு மாதங்களாக மழைவீழ்ச்சி குறைவடைந்துள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் நீரேந்து பகுதிகளில் ஒருதுளிகூட மழை பெய்யவில்லை எனவும் அறிவிக்கப்படுகிறது.

இந்த நிலை மேலும் இரு வாரங்களுக்குத் தொடர்ந்தால் நீர்மின் உற்பத்தி முழுமையாகப் பாதிக்கப்படலாம் எனவும் அவர் கூறினார். தற்பொழுது காசல்ரீ நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் 11.5 கிலோ வோர்ட் மணித்தியாலங்களாகவும் மவுசா கெலேயின் நீர்மட்டம் 98.1 கிலோ வோர்ட் மணித்தியாலங்களாகவும் கொத்மலை நீர்மட்டம் 41.2 கிலேர வோர்ட் மணித்தியாலங்களாகவும் விக்டோரியாவில் 62.4 கிலோ வோர்ட் மணித்தியாலங்களாகவும் ரன்தம்போயில் 49.4 கிலோ வோர்ட் மணித்தியாலங்களாகவும் சமநலவெவவின் நீர்மட்டம் 33.6 கிலோ வோர்ட் மணித்தியாலங்களாகவும் குறைவடைந்துள்ளது.

இருந்தும் மின்சாரசபை 24 மணி நேரமும் மின்சாரம் வழங்கி வருகின்றது. இந்த நிலை நீடிக்கும் பட்சத்தில் இது தொடர்பில் முடிவொன்றை எடுக்க நேரிடும் எனவும் மின்சாரசபை அதிகாரி கூறினார். (8-2)

## "அபிராமியின் பெருமை" சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அரியாலை வெட்டுக்குளம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானத்தில் கடந்த 22 ஆம் திகதி முதல் மஹோற்சவப் பெருவிழாவை முன்னிட்டு தினமும் மாலை 6.15 மணிக்கு யாழ். பல்கலைக்கழக உதவிப் பதிவாளர்கள் எஸ். கே. என். தவராஜாவினால் அபிராமியின் பெருமை எனும் தலைப்பிலான ஆன்மீகச் சொற்பொழிவு நடைபெற்று வருகின்றது என பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் ஆத்மீக சபா அறிவித்துள்ளது. (8-9)

## அங்குரார்ப்பண நிகழ்வு

(இராமநாதபுரம்)

முல்லை மாவட்ட அழகக கூட்டுறவு சங்கத்தின் (வ-து) அங்குரார்ப்பண நிகழ்வு அண்மையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வின் போது புதிய நிர்வாகசபை தெரிவு இடம்பெற்றது.

இதன்போது தலைவராக ம.யோகதாஸ், செயலாளராக க.சத்தியானந்தன், பொருளாராக அ.அலோசியஸ் ஆகியோர் தெரிவாகினர். (2-266)

## வீதியை புனரமைக்க மக்கள் கோரிக்கை

(சிவநகர்)

கிளி/கனகபுரம் பாடசாலைக்கு முன்பாகவும் அருகாமையிலும் உள்ள வீதி உரியமுறையில் திருத்தப்படாமல் இருப்பதாக மக்களும் பாடசாலை ஆசிரியர், மாணவர்களும் பெரும் சிரமத்தை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.

தினமும் அதிகளவான மக்களும் பாடசாலை மாணவர்களும் செல்கின்ற இவ்வீதிக்கு கருங்கற்கள் இடப்பட்டு பலமாதங்களாகிய நிலையில் இதுவரை உரியமுறையில் திருத்தப்படவில்லையெனவும் இவ்வீதி தூசுப்படலம் நிறைந்ததாகவும் காணப்படுவதாகவும் இச்சிறு கற்களில் சறுக்கி இடறுண்டு விழ வேண்டிய நிலையும் காணப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர். எனவே, இவ்வீதியை உரியமுறையில் புனரமைத்துத் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (8-9-254)

## மணிபல்லவம் அமர்ந்த நாகபூஷணி அம்மையே போற்றி! போற்றி!!

ஞாலம் போற்றும் நாகஈஸ்வரியே- போற்றி
ஞான சம்பந்தனுக்கு ஞானப்பாலூட்டிய உமையே -போற்றி
சிவன் மன மகிழ் தேவியே -போற்றி
சிங்கம் ஏறும் சேவகியே - போற்றி
மாயவன் தங்கை பார்வதியே -போற்றி
மாணிக்க வல்லி அம்மையே -போற்றி
இமவான் பயந்த இறைவியே -போற்றி
இடப்பாகம் அமர்ந்த அர்த்தநாரீஸ்வரியே - போற்றி
மகிட முகத்தானை மாய்த்தாயே -போற்றி
மணிபல்லவம் அமர்ந்த நாகபூஷணி
அம்மையே போற்றி! போற்றி!!

த.கிருஷ்ணதாஸ்
நல்லூர்

### வாழ்க உன் புகழ்

அழகிய ஈழநாட்டில் இளகிய உள்ளம் கொண்டு
இறங்கி வருவாய் எந்நாளும் உன் அடியவருக்காய்
வீதியுலாவிற்காய் நீ வெளியில் வரும் போதெல்லாம்
துன்பம் மறந்து எம்மனம் உன் பின்னால் வரும்
ஆயிரம் கண் வேண்டுமம்மா உன் காட்சி காண
நயினையில் நீ வாழ்வதால்தான் பொற்காலம் உயிர் வாழ்கிறது
சொற்களுக்குள் அடக்கமுடியா இறை தேவியே
பெருக் கெடுக்கட்டும் உன் இறையருள்
என்றும் உறங்கி விடா உண்மை பொருளே மனம் கொண்டு
உன்னை மனிதம் துதிபாடும் எந்நாளுமே
உன் ஆசி பெற்று நாமே வாழ கிளைபரப்பி புகழ்வாழ
உன் கோயில் வளர வாழ்த்துகின்றேன் இந்நாளில்

து.சுதர்சன்
உள்ளக பயிற்சி ஆசிரியர்

### சூழ்கலி தீர்க்க சூலாயுதத்தை எடுத்தாயே

நாகம்மா தாயே நானிலமும் காப்பவளே
நாடி வந்தோம் நயினைக்கு நம்குறைசொல்ல
சூடுபட்டு சுகமிழந்து ஓடாகிப் போன பின்பும்
சாதி சமயம் சொல்லி இடமெங்கும் ஒதுக்குகிறார்
பீதியுடன் நாளும் பயணிக்கிறோம் பாதைகளில்
நீதியில்லை இந்தப் பூமியிலே அம்மா
சூழ்கலி தீர்க்க சூலாயுதத்தை எடு
ஊழ்வினை போக்க கைவாளை ஏந்து
பாழான சமூகமிதை பதமாக்கித் தந்தருள்வாய்
மீளாத துயரிலிருந்து மீட்சியை வழங்கிடுவாய்

மானந்தன் அல்வை

### சக்தியின் சரிதம்

வசந்தகான தேனிசைக்கும்
வளமிகு பகுதியினிலே
உளம் குளிர்ந்தெழுந்த
உத்தமியும் நீதானே
சித்தனான பரமனை மணந்த
சக்தியும் நீதானே
அருள்மிகு ஒளிவடிவம்
உருவம் கொண்டவளும் நீதானே!

வே.வே.அகிலேஸ்வரன்
(மருதங்கேணியூர்)


WESTERN UNION
MONEY TRANSFER
நாகபூஷணித்தாயே எம்மைக் காத்திடம்மா
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY
POST OFFICE
#303 K.K.S Road,
Jaffna,
Tel:-0212225392
0212222670
Fax:-021-2223214
e-mail:srimurugan09@gmail.com
web:srimurugan@eureka.lk

# தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது குறித்து

# மன்மோகனுக்கு ஜெயலலிதா கடிதம்



**தமிழகத்தைச் சேர்ந்த இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினராலும் சமூக விரோதிகளாலும் தாக்கப்படுவது தொடர்கதையாக உள்ளது. கடந்த 12 மாதங்களில் அப்பாவி மீனவர்கள் தாக்கப்பட்ட சம்பவங்களை தங்களின் கவனத்திற்கு கொண்டு வந்து, இதில் தாங்கள் தலையிட்டு தீர்வு காண வேண்டும் என நான் வலியுறுத்தியதை அறிவீர்கள் என இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா எழுதிய கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.**

இது தொடர்பாக தமிழக முதல்வர் ஜெயலலிதா நேற்றைய தினம் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு கடிதம் ஒன்று வரைந்துள்ளார்.

அதில் அவர் குறிப்பிட்டுள்ள விடயங்கள் வருமாறு,

கடந்த 26.6.2012 அன்று கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் மீண்டும் துன்புறுத்தப்பட்ட சம்பவத்தை தங்களின் கவனத்துக்கு கொண்டுவர விரும்புகிறேன்.

கடந்த 25.6.2012 அன்று ராமேஸ்வரத்தில் இருந்து சுமார் 704 இயந்திர மீன்பிடி படகுகள் மீன்பிடிக்க கடலுக்கு சென்றன. அதில் 45 படகுகளில் சென்ற மீனவர்கள் 26.6.2012 அன்று கச்சதீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்த இலங்கை கடற்படையினர் அவர்களை அடித்து சித்திரவதை செய்துள்ளனர். மீனவர்களின் வலைகளையும் கயிறுகளையும் அறுத்து சேதப்படுத்தியதுடன் மீனவர்களை விரட்டி அடித்துள்ளனர். இதனால் மீனவர்களுக்கு பெரும் நட்டம் ஏற்பட்டது.

தமிழகத்தைச் சேர்ந்த இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினராலும் சமூக விரோதிகளாலும் தாக்கப்படுவது தொடர்கதையாக வுள்ளது. இச்சம்பவம் தமிழகத்தை அதிர்ச்சி அடையச் செய்ததுடன் நமது மீனவர்களின் மனதில் மனரீதியிலான அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது. தடுத்து நிறுத்துங்கள் எந்த விதமான அரசியல் மற்றும் பூகோள ரீதியிலான எல்லைகள் வரையறை இன்றி கச்சதீவு அருகே தமிழக மீனவர்கள் பரம்பரை பரம்பரையாக மீன்பிடித்து வந்துள்ளனர். அந்த உரிமை தொடர்ந்து நிலைநாட்டப்பட வேண்டும் என வலியுறுத்த விரும்புகிறேன்.

ஆகவே, இந்த விவகாரத்தை இலங்கை அரசின் கவனத்துக்குக் கொண்டு செல்ல வேண்டும் எனவும் கச்சதீவு அருகில் பாரம்பரியமாக மீன் பிடித்து வரும் தமிழக மீனவர்களை துன்புறுத்தக்கூடாது எனவும் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ள வேண்டும் எனவும் மீனவர்களை தடுக்கக்கூடாது எனவும் தனது நாட்டு கடற்படையினருக்கு உத்தரவு விடும்படி இலங்கை அரசிடம் தாங்கள் வலியுறுத்த வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன் என அக் கடிதத்தில் ஜெயலலிதா குறிப்பிட்டுள்ளார். (8-2)

## பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)


மண்டைதீவு பூமாவடி பூம்புகார் ஸ்ரீ கண்ணகை அம்பாள் ஆலய வருடாந்த பொங்கல் விழா ஜூலை மாதம் 2 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் முற்பகல் 11 மணிக்கு விசேட அபிஷேகம் நடைபெற்று மாலை 6 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகி விசேட ஆராதனைகள் நடைபெற்று மறு நாள் அதிகாலை 2 மணிக்கு தீ மிதித்தலும் காலை 4 மணிக்கு வழிவெட்டலும் நடைபெறும் என பரிபாலன சபை அறிவித்துள்ளது. (8-9)

## ஓசோனின் ஓட்டையை நோக்கி வருகின்றது வாயுக்கோளம்

### ஆபத்து ஏற்படுமா?

(வோஷிங்டன்)



பூமியின் மேல் பகுதியில் ஓசோன் படலம் உள்ளது. சுற்றுச்சூழல் பாதிப்பால் இந்த ஓசோன் படலத்தில் ஓட்டை விழுந்துள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இதன்மேல் பகுதி வான வீதியில் இராட்சத வாயுகோளம் ஒன்று சுற்றி வருவதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இந்தக் கோளம் அடுத்த ஆண்டு மத்தியில் ஓசோன் பகுதியில் உள்ள ஓட்டையை தாக்கும் என்று கணித்துள்ளனர்.

அப்போது இந்த வாயு கோளம் முற்றிலும் சிதைந்துவிடும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இதனால் பாதிப்பு ஏதும் ஏற்படுமா? என்பது பற்றி விஞ்ஞானிகள் ஆய்வு செய்து வருகிறார்கள். (8-2)

## கலைக்கப்பட்ட மாகாணங்களுக்கு தேர்தலை நடத்த 25 கோடி தேவை!

### மதிப்பிட்டிருக்கிறது தேர்தல் திணைக்களம்

கலைக்கப்பட்ட கிழக்கு, சப்ரகமுவ மற்றும் வடமத்திய மாகாணங்களுக்கான தேர்தலை நடத்துவதற்கு 25 கோடி ரூபா தேவையெனத் தேர்தல்கள் திணைக்களம் மதிப்பிட்டிருக்கிறது.

இதற்கான நிதியைப்பெறத் திறைசேரியிடம் கோரிக்கை விடுக்க தேர்தல் திணைக்களம் தயாராகியுள்ளதென திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

தேர்தலுக்கான பாதுகாப்பு, வாக்குச்சீட்டு அச்சிடல், போக்குவரத்து, வாக்களிப்பு ஏற்பாடுகள் உட்படப் பல்வேறு விடயங்களுக்காக இந்த நிதி தேவைப்படுவதாக தேர்தல்கள் திணைக்களம் மதிப்பிட்டிருக்கிறது. திறைசேரியிடமும் போதிய பணம் கையிருப்பில் இல்லாத நிலையில் அரசு இந்த மூன்று மாகாண சபைத் தேர்தல்களையும் நடத்த முன்வந்திருந்தமை குறித்து எதிர்க்கட்சிகள் பலத்த எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

எனினும் அந்த எதிர்ப்புகள் எதனையும் கருத்தில் கொள்ளாது அரசு மூன்று மாகாண சபைகளையும் கலைத்துள்ளது. இதற்கிடையில் கலைக்கப்பட்டுள்ள மாகாண சபைகளுக்குத் தேர்தல் நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்யும் பணிகளில் ஓர் அம்சமாக முக்கியமான அரச திணைக்களங்கள் மற்றும் துறைகளுடன் பேச்சுக்களை நடத்தவும் தேர்தல் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகிறது. (8-9)

## சட்டவிரோத ஆட்கடத்தல் வழக்கின் விசாரணையை துரிதப்படுத்துகிறது கனடா

(ரொரன்டோ)

கனடா சட்டவிரோத ஆட்கடத்தல் தொடர்பான வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்த தீர்மானித்துள்ளது. சன் சீ கப்பல் ஊடாக இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் கனடாவிற்குள் பிரவேசித்தமை தொடர்பில் ஆறு சந்தேக நபர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இரண்டு கனேடியர்களும் நான்கு இலங்கையர்களும் இவ்வாறு குற்றச்சாட்டுக்கு இலக்காகியுள்ளனர். சட்டவிரோத ஆட்கடத்தலில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள ஆறு பேருக்கு எதிரான விசாரணைகளையும் துரிதப்படுத்த அந்நாட்டு நீதித்துறை நடவடிக்கை எடுத்து வருவதாக சர்வதேச ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படும் பட்சத்தில் சந்தேக நபர்களுக்கு ஆயுள் தண்டனை அல்லது ஒரு மில்லியன் கனேடிய டொலர் அபராதம் விதிக்கப்படக் கூடும் என்பது குறிப்பிடத்தக்கது. பொதுமக்கள் ஆர்வம் மற்றும் அரசியல் விவகாரம் ஆகியவற்றின் காரணமாக வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2010 ஆம் ஆண்டு எம்.வீ.சன் சீ. கப்பலின் ஊடாக 492 தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்கள் கனடாவைச் சென்றடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-2)

## புகலிடக் கோரிக்கையாளர்களை உன்னிப்பாக கவனியுங்கள்

### வெளிநாட்டு தூதரகங்களிடம் அரசு கோரிக்கை

(கொழும்பு)

புகலிடக் கோரிக்கையாளர்களின் ஆவணங்களை உன்னிப்பாகப் பரிசோதிக்க வேண்டுமென இலங்கை அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கைக்கான வெளிநாட்டுத் தூரகங்களிடம் அரசு இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது. புகலிடக் கோரிக்கையாளர்கள் போலியான ஆவணங்களைச் சமர்ப்பித்து வெளிநாடுகளில் அடைக்கலம் கோரி வருவதாகவும் இதனைத் தடுக்கும் நோக்கில் இலங்கை இயங்கி வரும் தூதரகங்களில் கண்காணிப்பு மேற்கொள்ள வேண்டுமெனவும் அரசு கேட்டுள்ளது.

வட மாகாணத்தில் இராணுவத்தினர் வழங்கியதாகத் தெரிவித்து சில ஆவணங்களை இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் வெளிநாடுகளில் சமர்ப்பித்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதனால் ஆவணங்கள் உன்னிப்பாக கவனிக்கப்பட வேண்டுமென பாதுகாப்பு அமைச்சு இராஜதந்திர சமூகத்திடம் கோரியுள்ளது. (8-2)

## பாடசாலை உணவு ஒவ்வாமையால் 80 மாணவர்கள் வைத்தியசாலையில்

பதுளை ஹாலி- எல பிரதேசத்தில் பாடசாலையொன்றில் உணவு ஒவ்வாமை காரணமாக 80 மாணவர்கள் வரை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தமது காலையுணவை அருந்திய மாணவர்களே இந்த நிலைக்கு உள்ளாகியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. அவர்கள் அனைவரும் தற்போது பதுளை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றனர்.

ஏற்கனவே பல தடவைகள் பதுளை உள்ளிட்ட மலையக பிரதேசங்களில் இவ்வாறான உணவு ஒவ்வாமை சம்பவங்கள் கோவில்கள், பாடாசலைகள் உட்பட பொது இடங்களில் இடம்பெற்றுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

இது சுகாதார பணியாளர்களின் அசமந்த போக்கே காரணம் என குற்றம் சுமத்தப்படுகிறது.

பொது மக்களுக்கோ மாணவர்களுக்கோ பொது இடங்களில் உணவு விநியோகம் இடம்பெறும் பட்சத்தில் அதனை சுகாதார பரிசோதகர்களின் ஆய்வுக்கு உட்படுத்தி பின்னர் பகிரப்பட வேண்டும் என இலங்கை அரசாங்கம் சட்டம் ஒன்றையும் விதித்துள்ளது. (8-2)

# முகாம் வாழ்க்கைக்கு பதிலாக திறந்தவெளி சிறைச்சாலைகள் அவசியமில்லை

(கொழும்பு)

முகாம் வாழ்க்கைக்கு பதிலாக இடம்பெயர் மக்களுக்கு திறந்த வெளி சிறைச்சாலைகள் அவசியமில்லை என ஜே.வி.பி.கட்சி குறிப்பிட்டுள்ளது.

அகதி முகாம்களில் வாழ்ந்து வந்த இடம்பெயர் மக்களுக்கு திறந்தவெளி சிறைச்சாலைகளை அமைத்துக் கொடுக்க அரசாங்கம் முயற்சிக்கின்றது.

மெனிக்பாம் முகாமிலிருந்த சிலர் கிளிநொச்சி மாவட்ட திருமுறிகண்டி பிரதேசத்தில் மீள்குடியேற்றுவதற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். குறித்த பிரதேசத்தில் மீள்குடியேற மறுப்பு தெரிவித்ததன் காரணமாக மக்கள் மீளவும் மெனிக்பாம் முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

மக்களை தமது சொந்த இடங்களில் மீள் குடியேற்றாது வேறு இடத்தில் அரசாங்கம் ஏன் மீள்குடியேற்ற முயற்சித்தது என்பதற்கு இதுவரையில் விளக்கம் அளிக்கப்படவில்லை.

இவ்வாறு மக்களுக்கு அசௌகரியம் ஏற்படும் வகையிலான செயற்பாடுகளில் அரசாங்கம் ஈடுபடக் கூடாது என ஜே.வி.பி.கோரிக்கை விடுத்துள்ளது. (2)

# தனித்து போட்டியிட ஜே.வி.பி.முடிவு

(கொழும்பு)

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல்களில் தனித்து போட்டியிடுவது குறித்து கவனம் செலுத்தப்படும் என ஜே.வி.பி. அறிவித்துள்ளது.

மாகாண சபைத் தேர்தலில் கூட்டணி சேரும் திட்டம் கிடையாது என ஜே.வி.பி. பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பிரச்சினைகளுக்கு பதில் தேடத் தெரியாத அரசாங்கத்திற்கு பாடம் புகட்ட விரும்புகின்றோம். அரசாங்கத்திற்கு பாடம் புகட்டும் முயற்சியில் மக்களின் பங்களிப்பு முக்கியமானது. அரசாங்கத்தின் அதிகார தேவைக்காக இந்தத் தேர்தல்கள் நடத்தப்படுகின்றது. மாகாண சபைத் தேர்தல்களை முன் கூட்டியே நடத்துமாறு மக்கள் கோரவில்லை.

நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க முடியாத் காரணத்தினால் அரசாங்கம் இவ்வாறு தேர்தலை நடத்துகின்றது என விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். (8-2)

# மனித உரிமை செயற்றிட்டம் அமுல்படுத்தும் நடவடிக்கை ஆரம்பம்

(கொழும்பு)

மனித உரிமை செயற்றிட்டத்தை அமுல்படுத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான இலங்கை நிரந்தரப் பிரதிநிதி பாலித கொஹண தெரிவித்துள்ளார்.

யுத்தத்தில் ஏற்பட்ட காயங்களை ஆற்றுவதற்கு வெளிநாட்டு சக்திகளின் தலையீடு இன்றி தொடர்ச்சியான முனைப்புக்கள் மேற்கொள்ளப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை மனித உரிமை விவகாரங்களில் வெளிநாட்டு சக்திகளின் தலையீடானது காயங்களை பெரிதுபடுத்துமே தவிர ஆக்க பூர்வமான தீர்வுகளை ஏற்படுத்தாது என அவர் தெரிவித்துள்ளார். இடம்பெயர் மக்களை மீள் குடியேற்றும் நடவடிக்கைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

95 வீதமான இடம்பெயர் மக்கள் தமது சொந்த இடங்களில் மீள் குடியேற்றப்பட்டுள்ளனர். (2)




★1534-பிரின்ஸ் எட்வேர்ட் தீவு ஜாக் கார்டியர் என்ற ஐரோப்பியரால் கண்டுபிடிக்கப்பட்டது.

★1613- லண்டனில் உள்ள குளோப் நாடக மாளிகை தீயில் எரிந்து அழிந்தது.

★1786-அலெக்சாண்டர் மாக்டொனெல் மற்றும் 500 கத்தோலிக்கர்கள் ஸ்கொட்லாந்தில் இருந்து சென்று ஒண்டாரியோவின் கிளென்கரி என்ற ஊரில் குடியேறினர்.

★1814-மெதடிஸ்த திருச்சபையைச் சேர்ந்த ஆறு மதப்பரப்புனர்கள் இலங்கையின் காலி நகரை வந்தடைந்தனர்.

★1850-வான்கூவர் தீவில் நிலக்கரி கண்டுபிடிக்கப்பட்டது.

★1864-கனடாவின் கியூபெக்கில் தொடரூந்து விபத்தில் 99 பேர் கொல்லப்பட்டனர்.

★1880-பிரான்ஸ் டெஹீட்டி தீவைக் கைப்பற்றியது

★1914-கிரிகோரி ரஸ்புட்டீன் சைபீரியா நகரில் உள்ள அவரது வீட்டில் இடம்பெற்ற கொலை முயற்சி ஒன்றில் தப்பினார்.

★1925-கலிபோர்னியாவில் 6.3 ரிக்டர் நில நடுக்கம் ஏற்பட்டதில் சாண்டாபார்பரா என்ற இடம் முற்றாக அழிந்தது.

★1976-சிஷெல்ஸ் ஐக்கிய இராச்சியத்தில் இருந்து விடுதலை அடைந்தது.

★1995-அட்லாண்டிஸ் விண்ணோடம் ரஷ்யாவின் மீர் விண்வெளி நிலையத்துடன் முதற்தடவையாக இணைந்தது.

★1995-தென் கொரியாவின் சியோலில் சம் பூங் பல்பொருள் அங்காடி இடிந்து விழ்ந்ததில் 501 பேர் கொல்லப்பட்டு 937 பேர் படு காயமடைந்தனர்.

★2002 தென்கொரியாவுக்கும் வட கொரியாவுக்கும் இடையில் இடம்பெற்ற கடல் மோதலில் 6 தென் கொரிய மாலுமிகள் கொல்லப்பட்டு ஒரு வட கொரியக் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது.

**பிறப்புகள்**

★1945-சந்திரிகா குமாரதுங்க, இலங்கையின் நான்காவது ஜனாதிபதி.

★1981-ஜோ ஜான்சன், அமெரிக்க கூடைப்பந்து ஆட்டக்காரர்

**இறப்பு**

★2009-வ.ஐ.சுப்பிரமணியம், மொழியியல் அறிஞர் (பி.1926)

**சிறப்புநாள்**

★செஷெல் சுதந்திர தினம் (1976)



சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க (பிறப்பு யூன் 29, 1945) இலங்கையின் 5-வது ஜனாதிபதியும் 4-வது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியுமாவார்.

இவர் இலங்கை சுதந்திரக் கட்சியின் முன்னாள் தலைவர். இவரது தந்தை எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்கா மற்றும் தாயார் சிறிமாவோ பண்டாரநாயக்க இருவரும் இலங்கையின் முன்னாள் பிரதமர்கள். சந்திரிகா பாரிஸ் பல்கலைக்கழகத்தில் அரசியல் அறிவியல் தொடர்பான பட்டப்படிப்பை படித்தவர். இது பின்னர் சர்ச்சைக்குரியதாக இருந்தது. இவர் சிங்களம், ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு மொழிகளில் பரிச்சயம் உள்ளவர்.

இலங்கை திரும்பிய சந்திரிகா சுதந்திரக் கட்சியில் இணைந்து தமது அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்தார். 1974 இ.சு.கட்சி பெண்கள் அணியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார்.

1978 இல் சந்திரிகா இலங்கையின் பிரபல நடிகரும் அரசியல்வாதியுமான விஜய குமாரணதுங்கவை மணந்தார். குமாரணதுங்க 1988 இல் கொலை செய்யப்பட்டார்.

1994 ஒகஸ்ட் 19 இல் சந்திரிகா மக்கள் முன்னணி தலைமையிலான அரசில் பிரதமராக தெரிவானார். அவ்வாண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று ஜனாதிபதியாகப் பதவியேற்றார்.

இவரது ஆட்சியின் ஆரம்ப பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். இது தோல்வியடையவே பிற்பகுதியில் போர் மூலம் புலிகளை அடக்க முற்பட்டார். 1999 தேர்தலிலும் வெற்றிபெற்ற சந்திரிகா 2-வது முறையாக ஜனாதிபதியாகப் பதவியேற்றார். 2-வது பதவிக் காலம் 2005 நவம்பர் 19 முடியும் வரை ஜனாதிபதியாகப் பதவி வகித்தார்.

# மகனின் ஆசிரியருக்கு ஆபிரஹாம் லிங்கன் எழுதிய கடிதம்!



காலங்கள் பல கடந்தாலும், உலக மக்களின் நினைவில் ஆபிரஹாம் லிங்கன் இருக்கக் காரணம் அவரது ஆட்சித் திறமை மட்டும் காரணமல்ல. யாருக்கும் தீமை செய்யாமல், சட்டம் மற்றும் விதிகளை மீறாமல் அவர் நடந்து கொண்டதே.

இதற்கு உதாரணமாக, தன் மகன் படித்த பாடசாலை ஆசிரியருக்கு ஆபிரஹாம் லிங்கன் எழுதிய கடிதத்தை குறிப்பிடலாம்.

இதோ அந்தக் கடிதம்...

அனைத்து மனிதர்களுமே நேர்மையானவர்களாக, உண்மையானவர்களாக இருக்க மாட்டார்கள் என்பதை அவன் தெரிந்து கொள்ளவேண்டும். ஆனால் மனிதர்களில் பகைவர்களுக்கு இடையில் நண்பர்களும் இருக்கிறார்கள் என்பதை என் மகனுக்குக் கற்றுக் கொடுங்கள்.

அவனுக்கு பொறாமை குணம் வந்து விடாமல் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள். எதற்கெடுத்தாலும் பயந்து சுருங்கிக்கொள்வது, கோழைத்தனம் என்பதைப் புரிய வையுங்கள்.

புத்தகங்கள் என்ற அற்புத உலகத்தின் வாசல்களைக் அவனுக்கு திறந்து காட்டுங்கள். அதேவேளையில், இயற்கையின் அதிசயத்தை இரசிக்கவும் அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்.

வானில் பறக்கும் பறவைகளின் புதிர்மிகுந்த அழகையும், சூரிய ஒளியில் மின்னும் தேனீக்களின் வேகத்தையும், பசுமையான மலை அடிவார மலர்களின் வனப்பையும் இரசிக்க அவனுக்கு கற்றுக் கொடுங்கள்.

ஏமாற்றுவதை விடவும் தோல்வி அடைவது எவ்வளவோ மேலானது என்பதை பள்ளியில் அவனுக்கு கற்றுக் கொடுங்கள். மற்றவர்கள் தவறு என்று விமர்சித்தாலும், தனது சுயசிந்தனை மீது அசைக்க முடியாத நம்பிக்கை வைக்க அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்.

மென்மையான மனிதர்களிடம் மென்மையாகவும், முரட்டுக்குணம் கொண்டவர்களிடம் கடினமாகவும் அணுகுவதற்கு அவனுக்குப் பயிற்சி கொடுங்கள்.

அனைத்து மனிதர்களின் குரலுக்கும் அவன் செவிசாய்க்க வேண்டும். எனினும் உண்மை என்னும் திரையில் வடிகட்டி நல்லவற்றை மட்டும் பிரித்தெடுக்க அவனுக்கு கற்றுக்கொடுக்க வேண்டும்.

துயரமான வேளைகளில் சிரிப்பது எப்படி என்று அவனுக்கு கற்றுக் கொடுங்கள். கண்ணீர் விடுவதில் தவறில்லை என்றும் அவனுக்கு கற்றுக் கொடுங்கள்.

போலியான நடிப்பை கண்டால் எள்ளி நகையாடவும், வெற்று புகழுரைகளை கண்டால் எச்சரிக்கையாக இருக்கவும் அவனுக்குப் பயிற்சி கொடுங்கள். அவனை அன்பாக நடத்துங்கள். ஆனால் அதிக செல்லம் காட்டி சார்ந் திருக்க வைக்க வேண்டாம்.


தவறு கண்டால் கொதித்தெழும் துணிச்சலை அவனுக்குக் கற்றுக் கொடுங்கள். அதேவேளையில் தனது வலிமையை மௌனமாக வெளிப்படுத்தும் பொறுமையையும் அவனுக்குச் சொல்லி கொடுங்கள். இது ஒரு மிகப் பெரிய பட்டியல்தான்...

இதில் உங்களுக்கு சாத்தியமானதை எல்லாம் கற்றுக் கொடுங்கள்.

அவன் மிக நல்லவன். என் அன்பு மகன்.

இப்படிக்கு,
ஆபிரஹாம் லிங்கன்

# சிங்கள மந்திரியின் திமிர்ப்பேச்சிற்கு மத்திய அரசு கண்டனம் தெரிவிக்க வேண்டும்



## -வைகோ சீற்றம்

**(சென்னை) தமிழ் ஈழத்தை ஆதரித்து எவரும் பேசக்கூடாது. தாய்த் தமிழகத்தில் அதற்கு குரல் கொடுக்கக்கூடாது. ஈழத் தமிழருக்கு பேரழிவு நேரும் என்று இலங்கை அமைச்சரை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பேச வைக்கும் இந்த நிலைமைக்கு முழுக்க முழுக்க மத்திய காங்கிரஸ் அரசே காரணம் என ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.**

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பவை வருமாறு, ஈழத்தமிழர்கள் வலிமையோடு இருந்தால் தெற்கே இந்தியாவிற்கு அது பாதுகாப்பு அரணாக அமையும் என்று இந்தியாவின் அரசியல் பூகோள நலன்களையும் கருதி இந்திராகாந்தி ஈழப் பிரச்சினையை அணுகினார். இந்திய அரசை ஏளனம் செய்யவும், எடுத்து எறிந்து, எதிர்த்து ஆணவமாக இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பேசவுமான நிலைமை உருவாகி வருகிறது. இந்தக் கட்டத்திலாவது சிங்கள அரசின் கொட்டத்தை ஒடுக்கும் வகையில் இந்திய அரசு கடுமையான நிலையை மேற்கொள்ளாவிடில் இன்னும் இந்தியாவிற்கு எதிராக பாதகமான சூழ்நிலை உருவாகும்.

அதனால் ஏற்படக்கூடிய அனைத்து விளைவுகளுக்கும் காங்கிரஸ் கட்சியும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசும் அதில் அங்கம் வகிக்கும் கட்சிகளும் பழிக்கு ஆளாகிப் பொறுப்பேற்க வேண்டி வரும்.எனவே, சிங்கள அமைச்சரின் அகம்பாவப் பேச்சிற்கு முடிவு கட்ட இந்திய அரசு உரிய கண்டனத்தை உடனே இலங்கை அரசிற்குத் தெரிவிக்க வேண்டும் என அதில் கூறப்பட்டுள்ளது. (8-2)

# இலங்கைக்கு கடத்தவிருந்த நட்சத்திர ஆமைகள் பறிமுதல்


தமிழ் நாடு திருச்சி விமான நிலையத்திலிருந்து இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 300 நட்சத்திர ஆமைகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

திருச்சி விமான நிலையத்தில் விமான நிலைய நுண்ணறிவுப் பிரிவு பொலிஸார் சோதனை நடத்திக் கொண்டிருந்தனர்.

அப்போது ஒருவரின் பயணப் பொதியை சோதனை செய்தபோது 300 இற்கும் மேற்பட்ட நட்சத்திர ஆமைகள் இருந்தது கண்டுபிடிக்கப் பட்டது.

நட்சத்திர ஆமைகள் விலை மதிப்பு மிக்கது என்பதால் அவர் இலங்கைக்கு கடத்தவிருந்தார். ஆமைகளை பறிமுதல் செய்த பொலிஸார் அவரை கைது செய்து விசாரணைப்படுத்தினர். (2)

# கருஜயசூரிய- சரத்பொன்சேகா இரகசியமாக சந்தித்து பேச்சு



முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவிற்கும் ஐக்கிய தேசியக்கட்சியின் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கருஜயசூரியவிற்கும் இடையில் முக்கிய சந்திப்பொன்று அண்மையில் இடம்பெற்றுள்ளதாக தெரியவருகின்றது.

இருவருக்கும் இடையிலான இந்தச் சந்திப்பின் போது பௌத்த தேரர்கள் சிலர் பங்கேற்றதாகவும் அடுத்த சந்திப்பின் போது ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித் தலைவரும் அம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான சஜித் பிரேமதாசவிற்கு அழைப்பு விடுப்பதென ஆலோசனை செய்யப்பட்தாக தெரிவிக்கப்படுகின்றது.

நீதியான, சமூகத்திற்கான இலங்கையர்களின் தேசிய இயக்கத்தின் அங்குரார்ப்பண நிகழ்வின் பின்னரே இருவருக்கும் இடையில் இரகசிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளதாக தெரியவருகின்றது.

இந்த இயக்கம் நாட்டில் சட்டத்தை நிறுவுதல், இலஞ்ச ஊழல் மோசடிகளிலிருந்து நாட்டை மீட்டெடுத்தல், தடையற்ற அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு வழிசமைத்துக் கொள்ளல், நாட்டில் நல்லாட்சி மற்றும் ஜனநாயகத்தை நிறுவுதல் ஆகியவற்றுக்காக தொடர்ச்சியாக குரல் கொடுப்பது மட்டுமன்றி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் மற்றும் மக்களை தெளிவுபடுத்தும் நடவடிக்கைகளிலும் ஈடுபடவிருக்கின்றது. (8-2)

# சவுதியில் பணிபுரியும் இலங்கையருக்கு மத வழிபாடுகளில் ஈடுபட சுதந்திரம் இல்லை

சவுதி அரேபியாவில் தொழில் புரிந்து வரும் இலங்கை தொழிலாளர்கள் தமது மத வழிபாடுகளில் ஈடுபடும் சுதந்திரம் இல்லை என ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இலங்கையைச் சேர்ந்த தொழிலாளி ஒருவர் புத்தர் சிலை ஒன்றை வழிபட்டுக் கொண்டிருந்த போது அங்கு சென்ற சவுதி பொலிஸார் அவரை கொடூரமான முறையில் கைதுசெய்து இடையூறு செய்துள்ளனர். சவுதியில் தொழில் புரியும் இலங்கை தொழிலாளர்கள் எதிர்நோக்கி வரும் இந்த துரதிர்ஷ்டவசமான சம்பவம் குறித்து ராமநாயக்க தனது அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த நிலையில் இலங்கையைச் சேர்ந்த ஒருவர் தன்னிடம் இருந்த புத்தர் சிலையை வழிபட்டுள்ளார். அப்போது அங்கு சென்ற உமுல்ஹமாம் பொலிஸார் அவரை கைது செய்துள்ளனர். இது மிகவும் பாரதூரமான நிலைமை எனவும் இது குறித்து இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள போதிலும் இதுவரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கப் படவில்லை.

இந்த நிலையில் கைதுசெய்யப்பட்டுள்ள இலங்கையரின் உயிர் எந்த நேரத்திலேனும் அழிக்கப்படக்கூடிய நிலைமை காணப்படுவதாகவும் சவுதியில் உள்ள அப்பாவி இலங்கை தொழிலாளர்கள் தமது மதத்தை அனுஷ்டிக்க முடியாத நிலைமையில் உள்ளதாகவும் ரஞ்சன் ராமநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இஸ்லாமிய நாடான சவுதியில் ஷரியா சட்டத்தின்படி சிலை வணக்கத்தில் ஈடுபடுவது? தடை செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (8-2)

# அகதிகளுக்கு நிதி சேர்த்தவருக்கு முகத்தில் விழுந்தது கத்திக்குத்து

மலேசியாவின் பிரைக்பீல்ட்ஸ் பகுதியில் இலங்கை அகதிகளின் நலன் திட்டத்திற்காக நிதி சேகரித்துக் கொண்டிருந்த மலேசியாவின் மக்கள் நீதி கட்சி உறுப்பினர் ஒருவர் தாக்கப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் குறித்த நபர் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாகவும் மக்கள் கட்சி தகவல் துறை பிரதானி எம்.எஸ். அர்ஜுனன் முகத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த நபர் பல தடவைகள் குத்தித் தாக்கியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்கப்பட்ட அர்ஜுனன் பங்சார் வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதித்த போது முகத்தில் நான்கு தையல்கள் போடப்பட்டதாக அவருடைய மகனான கலைமுகிலன் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து பங்சார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அர்ஜுனனும் அவரது மகனான கலை முகிலனும் இலங்கை தமிழ் அகதிகளுக்காக நிதி சேகரித்துக் கொண்டிருந்த போது கலைமுகிலன் தனது நண்பரை சந்திக்கவென ஹோட்டல் ஒன்றுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

அதன்போது தனது தந்தை உதவிகுரல் எழுப்பியதும் அவர் திரும்பி வந்துள்ளார். வந்து பார்க்கும் போது தந்தையின் முகத்தில் இரத்தம் கொட்டியுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்து தாக்கிய நபர்கள் உடனடியாக அவ்விடத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளனர். இத்தாக்குதல் அரசியல் நோக்கத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என கலைமுகிலன் சந்தேகம் வெளியிட்டுள்ளார். (8-2)

யா/ கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி
தேசிய மட்ட சாதனையாளனை
பாராட்டி வாழ்த்துகின்றோம்



எம்பிலிப்பிட்டிய மகாவலி மைதானத்தில் நடைபெற்ற 43 ஆவது ஜோன்ரா பேட் தேசிய கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டியில் எமது கல்லூரி மாணவன் செல்வன் நாதன்- சுமன் பங்குபற்றி 200m ஓட்டப் போட்டியில் 25.3 செக்கனில் ஓடி முடித்து இரண்டாம் (2) இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தையும் 100m ஓட்டப் போட்டியில் 12.4 செக்கனில் ஓடிமுடித்து வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுக் கொண்டார். இப்போட்டியில் பங்குபற்றி வெற்றிபெற்று கல்லூரிக்கும் பெருமை தேடித் தந்த மாணவனைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவரை நெறிப்படுத்திய ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.

வாழ்த்துவோர்:-
அதிபர்,ஆசிரியர்கள் (8717)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 172

## பேர்லினின் வீழ்ச்சியும் பாசிச ஜேர்மனி நிபந்தனையின்றி சரணடைதலும்

பாசிசத் தலைமையின் மத்தியில் பீதி கிளம்பியது. தான் இழைத்த கொடும் பாதகச் செயல்களுக்கான


ஹிட்லர்- குடும்பத்துடன்

பொறுப்பிலிருந்து தப்பிப்பதற்காக ஏப்ரல் 30 ஆம் திகதி ஹிட்லர் தற்கொலை செய்து கொண்டான். இராணுவத்திடம் இருந்து இதை மறைக்கும் நோக்கத்தோடு, பேர்லின் அருகே போர்முனையில் ஹிட்லர் கொல்லப்பட்டதாக பாசிச வானொலி அறிவித்தது. அதேநாளன்று ஷ்லேஸ்விக்- கோல் ஷ்தேய்னில் ஹிட்லரின் வாரிசாகிய கிரோஸ்- அட்மிரல் தேனிட்ஸ் தற்காலிக பேரரசு அரசாங்கத்தை அமைத்தான். பின்னர் நடந்த சம்பவங்கள் காட்டியபடி இது சோவியத் எதிர்ப்பின் அடிப்படையில் அமெரிக்காவுடனும் பிரிட்டனுடனும் தொடர்புகொள்ள முயன்றது.

ஆனால், பாசிச ஜேர்மனியின் நாட்கள் ஏற்கனவே எண்ணப்பட்டு விட்டன. பேர்லின் படைத்திரட் டின் நிலை படுமோசமானது. மே 1 ஆம் திகதி


ஹிட்லர்-குழந்தைப்பருவத்தில்

3 மணிக்கு ஜேர்மனிய தரைப் படைகளின் பிரதானப் படைத் தலைமையகத் தலைவன் ஜெனரல் கிரேப்ஸ் சோவியத் படைத் தலைமையின் ஒப்புதலோடு பேர்லினில் போர்முனைக் கோட்டைக் கடந்து வந்து 8-வது கார்டு படையின் தளபதி ஜெனரல் சுய்க்கோவைச் சந்தித்தான். கிரேப்ஸ் ஹிட்லரின் தற்கொலையைப் பற்றி அறிவித்து, புதிய பேரரசு அரசாங்கத்தின் உறுப்பினர் பட்டியலைத் தந்தான், ஜேர்

## பாசிச ஜேர்மனியின் முறியடிப்பு முற்றுப்பெறுதல்

மனிக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையே சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான சூழ்நிலைகளைத் தற்காலிகமாக நிறுத்த வேண்டும் என்ற கேபெல்ஸ், போர்மனின் முன்மொழிவைத் தெரிவித்தான். ஆனால், இந்த ஆவணத்தில் சரணடைவதைப் பற்றி ஒன்றுமே குறிப்பிடவில்லை. இது ஹிட்லர் எதிர்ப்புக் கூட்டணியில் பிளவு ஏற்படுவதற்காக பாசிச கொலைபாதகர்கள் மேற்கொண்ட கடைசி முயற்சியாகும். ஆனால், எதிரியின் இத்திட்டத்தை சோவியத் படைத் தலைமை கண்டுகொண்டது.

கிரேப்ஸ் கொணர்ந்த செய்தி மார்ஷல் ஜூக்கவ் மூலம் உயர்மட்ட பிரதான படைத் தலைமையகத் திற்குத் தெரியப்படுத்தப்பட்டது. பேர்லின் பாதுகாப்புச் சக்திகளை உடனடியாக, நிபந்தனையின்றிச் சரணடையச் செய்யவும் என்று மிகச்சுருக்கமான பதில் வந்தது.


ஹிட்லரின் பெற்றோர்கள்

பேச்சுவார்த்தைகள் பேர்லினில் நடைபெற்ற சண்டைகளின் வேகத்தைப்பாதிக்கவில்லை. எதிரியின் தலை நகரத்தை முழுமையாகப் பிடிப்பதற்காக சோவியத் துருப்புகள் தொடர்ந்து தீவிரமாக முன்னேறின. பாசிஸ்டுகளோ தொடர்ந்து உறுதியான எதிர்ப்பைக் காட்டிவந்தனர். பாசிசத் தலைவர்கள் நிபந்தனையற்று சரணடையும் கோரிக்கையை நிராகரித்து மாலை 6 மணிக்குத் தெரியவந்தது. இதன் மூலம் அவர்கள், இலட்சக்கணக்கான சாதாரண ஜேர்மனியர்களின் விதிகளின் பால் தாங்கள் எவ்வளவு அலட்சியமாக உள்ளனர் என்பதை இன்னுமொருமுறை மெய்ப்பித்தனர்.

பேர்லினில் உள்ள எதிரியின் படைத் திரட்டை மிகக்குறுகிய காலகட்டத்தில் ஒழித்துக் கட்டுமாறு சோவியத்


ஜேர்மனி, சோவியத்திடம் சரணடைவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திடுகிறது

படைத் தலைமை தன் துருப்புகளுக்கு கட்டளையிட்டது. வடக்கேயிருந்து முன்னேறிய 3-வது முக்கிய தாக்குதல் படையின் பிரிவுகள் தெற்கேயிருந்து முன்னேறிய 8-வது கார்டு படையின் பிரிவுகளை ரைஹ்ஸ்டாக் கட்டடத்திற்கு தெற்கே சந்தித்தன. மே 2 ஆம் திகதி மதியம் 3 மணி வாக்கில் நகரத்தில் எதிரியின் எதிர்ப்பு முழுவதுமாக அடங்கியது, பேர்லின் பாதுகாப்புச் சக்திகளில் எஞ்சியிருந்தோர் பேர்லின் தற்காப்பின் தலைவன் ஜெனரல் வைட்லிங்க் தலைமையில் சரணடைந்தனர். சோவியத் துருப்புகள் நகரத்தை முழுவதுமாகக் கைப்பற்றின.

2-வது பைலோருஷ்ய சேனையின் யூனிட்டுகள் நடவடிக்கையின் இறுதியில் எல்பாவையும் ஷ்வெரின், ரஸ்தோக் நகரங்களையும் அடைந்து அங்கே பிரிட்டிஷ் துருப்புகளைச் சந்தித்தன. பாசிஸ்டுகளின் 3-வது டாங்கிப் படையின் ஒருபகுதி கடலோரமாக நெருக்கப்பட்டு ஒழித்துக் கட்டப்பட்டது. மற்றொரு பகுதி ஆங்கிலோயர்களிடம் சரணடைந்தது.

பாசிச ஜேர்மனி நிபந்தனையின்றி சரணடைந்ததும் ஐரோப்பாவில் யுத்தம் முடிவடைந்ததும் தான் பேர்லின் நடவடிக்கையின் மிக முக்கிய விளைவாகும். பேர்லின் நடவடிக்கை நிறைவு பெற்றதானது, ஹிட்லரின் புதியமுறை தவிடுபொடியானதையும் ஐரோப்பாவின் அடிமைப்படுத்தப்பட்ட மக்களின் விடுதலையையும் உலக நாகரிகம் பாசிசத்திலிருந்து காப்பாற்றப்பட்டதையும் குறித்தது.

பேர்லின் நடவடிக்கையின் போது சோவியத் துருப்புகள் 70 காலாட் படை, 12 டாங்கி, 11 மோட்டார் டிவிசன்களை முறியடித்தன. ஏப்ரல் 16 முதல் மே 7 வரை 4 இலட்சத்து 80 ஆயிரம் எதிரி போர் வீரர்களையும் இராணுவ அதிகாரிகளையும் சிறைப் பிடித்தன. அதே காலகட்டத்தில் 1500 க்கும் மேற்பட்ட டாங்கிகளும் 4500 விமானங்களும் சுமார் 11000 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் கைப்பற்றப்பட்டன.

பாசிச ஜேர்மனியின்மீது இறுதி வெற்றி பெறுவதற்காக சோவியத் மக்கள் பெரும் விலையைக் கொடுக்க வேண்டியிருந்தது. 1945 ஏப்ரல் 16 முதல் மே 8 வரையிலான காலகட்டத்தில் மட்டும் 1-வது, 2-வது பைலோருஷ்ய சேனைகள், 1-வது உக்ரேனிய


ஹிட்லர்- மாணவப்பருவத்தில்

சேனையைச் சேர்ந்த சுமார் 3 இலட்சம் பேர்கள் கொல்லப்பட்டனர் மற்றும் காயமடைந்தனர். அமெரிக்க- பிரிட்டிஷ் துருப்புகள் 1945 ஆம் ஆண்டு பூராவும் மேற்குப் போர்முனையில் 2 இலட்சத்து 60 ஆயிரம் நபர்களை இழந்தன.

(தொடரும்)

# ஆழ்கடலின் மத்தியில் அமர்ந்து அருள் மழையைப் பொழியும் அன்னை



அம்பிகையில் மூலஸ்தானத்தில் அமைந்துள்ள சுயம்புருவான ஐந்துதலை நாகமும் அதன் கீழ் அமர்ந்துள்ள அம்பிகையின் தோற்றமும்.

ஆழ்கடல் மத்தியில் அமர்ந்து அருள் அமுத மழையினை கங்கையிலும் விஞ்சிப் பொழிந்து கொண்டிருப்பவள் அன்னை நயினை ஸ்ரீ நாகபூஷணி. இந்திரன் ஆபுத்திரன், புத்தபகவான், மணிமேகலா தெய்வம், மணிமேகலை, அர்ச்சுணன், தீவதிலகை, நயினாப்பட்டர் போன்ற தேவர்களாலும் ஆன்மசிருட்டிகளாலும் வழிபடப்பெற்ற தலமாகப் போற்றப்படுவது அன்னையின் தலமாகும்.

அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் புவனேஸ்வரிபீடம் எனப் போற்றப்படும் புண்ணிய ஸ்தானமாக விளங்குவ்தும் இத்தலமே.

**புவனம் பதின்னான்கையும் பூத்த வண்ணம் காத்தவளே!**

என அபிராமிப்பட்டர் பாடிய அன்னையாக நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் விளங்குகிறாள் என்பது கண் கூடு.

வேண்டுவோர் வேண்டுவதை வேண்டிய வரை நல்கிக்கொண்டு அன்னை இருக்கின்றாள் என்பதற்கு அன்னையின் சந்நிதியில் நித்தம் கூடுகின்ற அடியவர்களே சாட்சி எனலாம். இத்தனை சிறப்புக்கள் பொருந்திய அன்னைக்கு இன்று பதினொராம் திருவிழா. இன்றைய இத்திருவிழாவைச் செய்பவர்கள் நயினாதீவைச் சேர்ந்த அரச சேவையாளர்கள். இன்றைய திருவிழாவிற்கும் ஆலய வரலாற்றுக்கும் இடையே ஆழமான தொடர்புள்ளதைக் காணமுடிகின்றது.

இன்று பகல் கடல் நடுவே அமைந்துள்ள கருடன், பாம்புக்கற்களுக்கு விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறுகின்றன. இக்கற்கள் ஆலயத்தோற்றத்துடன் தொடர்புபட்டவையாக காணப்படுவதை அறிய முடிகின்றது.

அம்பிகையினுடைய மூலஸ்தானத்திலே இருக்கின்ற விக்கிரகத்தை நோக்குகின்ற போது தேவர்கோனாகிய இந்திரனாலே இடப்பெற்ற பீடத்திலே சுயம்புருவான ஐந்துதலை நாகமும் அதன் கீழ் அம்பிகையும் அமர்ந்துள்ளதைக் காண முடிகின்றது.

**இந்நாகதீவிலே இந்திரனால். பிரதிஷ்டை செய்யப்பட்ட பீடத்திலே ஓர் அம்பிகை அமர்ந்திருக்கிறாள். அவளு க்கு நீங்கள் உங்கள் செல்வங்களை இட்டு ஆலயம் அமைக்க வேண்டும். அவ்வாறு செய்வீர்களானால் நான் இந்த நாகத்தை உயிருடன் விடுவேன். இது தான் கருடனின் அசரீரி வாக்கு.**

இந்த அம்பிகையை ஆதியிலே நயினாதீவுக்கு வடக்கே உள்ள புளியந்தீவில் இருந்து நாகங்கள் வந்து பூ இட்டு வணங்கியதாக செவி வழி வரலாறு.

ஒருநாள் இவ்வாறு நாகமொன்று பூவுடன் வரும் வழியே கடல் நடுவே கருடன் ஒன்று அந்த நாகத்தை வழி மறித்து சண்டை செய்கின்றது. அப்போது பாம்பு அச்சத்தால் ஓர் கல்லில் சுற்றிக்கொள்ள கருடனும் அதன் அருகே இருந்த மற்றொரு கல்லில் அமர்ந்து கொள்கிறது. அவ்வழியே நவரத்தின வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த மாநாயக்கர்கள் ( இந்திய இரத்தின வியாபாரிகள்) இச்சம்பவத்தைக் கண்டு நாகத்தை காப்பாற்றும் முயற்சியில் ஈடுபடுகின்றனர்.

அப்போது கருடன் மாநாயக்கர்களிடம் ஓர் வேண்டுகோளை அசரீரி வாயிலாக தெரியப்படுத்துகிறது. அதாவது,

மணிபல்லவம் என்று சொல்லப்படுகின்ற இந்நாகதீவிலே இந்திரனால் பிரதிஷ்டை செய்யப்பட்ட பீடத்திலே ஓர் அம்பிகை அமர்ந்திருக்கிறாள். அவளுக்கு நீங்கள் உங்கள் செல்வங்களை இட்டு ஆலயம் அமைக்க வேண்டும். அவ்வாறு செய்வீர்களானால் நான் இந்த நாகத்தை உயிருடன் விடுவேன். இது தான் கருடனின் அசரீரி வாக்கு. கருடனின் வேண்டுகோளுக்கிணங்க அவர்கள் அம்பிகைக்கு ஆலயம் அமைத்தனர் என்பது வரலாறு.

இந்த வரலாற்றை உறுதிப்படுத்துவதாகவும் குறித்த பீடிகை அம்பிகைக்கென இந்திரனால் பிரதிஷ்டை செய்யப்பட்டது என்பதை உறுதி செய்வதாகவும் மணிமேகலை மற்றும் சிலப்பதிகாரம் என்பவற்றில் காணப்படுகின்ற பாடல் அடிகளை நோக்கலாம்.

**பெரியவன் தோற்ற முன்னம் இப் பீடிகை**

**தரியவன் இட்ட காரணம் தானும்**

**(பெரியவன்-புத்தபகவான் கரியவன்- (கரி-யானை) கரியை உடையவன் இந்திரன்)**

எனக் கொள்ளப்படுகின்றது என மணிமேகலையில் குறிப்பிடப்படுவதும்,

**நசையாத நாகதீவில் நாகத்தின் மணிவாங்கக் கசிவான மனதுடனே கடுகவுமை அழைத்தோங்கான்**

என சிலப்பதிகாரத்திலும் குறிப்பிடப் பட்டுள்ளமை சான்றெனலாம்.

மேலே குறிப்பிடப்பட்ட பாம்பு சுற்றிய கல்லும் கருடன் அமர்ந்த கல்லும் நயினாதீவிற்கு வடக்கே புளியந்தீவிற்கு இடையில் உள்ள கடற்பிரதேச த்தில் இன்றும் காணக்கூடியதாக உள்ளது. இன்று இக்கற்களுக்கு பூசைகள் இடம்பெறுகின்ற போது கருடப்பட்ஷி(சி)கள் வானில் பறந்து கூடி நிற்கும் அடியவர்களை ஆனந்தத்திற்கும் பரவசத்திற்கும் அதிசயத்திற்கும் உள்ளாக்கி மறைவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

மேலும் இன்றைய தினம் இரவு அம்பிகை தனது பாலகர்களை அருகணைத்து அழகிய பூந்தண்டிகையில் வீதியுலா வருகின்ற அற்புதக் காட்சியும் இடம்பெறும்.

அம்பிகை தன்னடி சரணடைந்த அடியார்களை அஞ்சேல் என்றழைக்கும் அன்னையாக நயினைதீவிலே நாயகியாக, நான்முகியாக, நாராயணியாக, நாகபூஷணியாக, நாகஈஸ்வரியாக, புவனேஸ்வரியாக, பூலோக சுந்தரியாக அமர்ந்திருக்கிறாள்.

அம்பாளின் அடி தொழுது அனைவரும் அவளின் அருட்கடாட்சத்தை பெறுவோமாக!

நயினை நடா மயூரன்
ஆசிரியர்,
(கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி)

# அரசியலில் களமிறங்க ஹிருணிகா திட்டம்

(கொழும்பு)

செயற்பாட்டு அரசியலில் விரைவில் களமிறங்கத் திட்டமிட்டுள்ளதாக ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

ஹிருணிகா முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் புதல்வி என்பது குறிப்பிடத்தக்கது.

தமது தந்தை பணத்திற்காக அரசியல் நடத்தவில்லை எனவும் அந்த வழியைப் பின்பற்றி அரசியலில் சேவையாற்ற விரும்புவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் உருவச் சிலை அமைக்கும் அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து கொண்ட போது ஹிருணிகா இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் கட்சிகள் வேட்பாளர்களை தெரியும் போது வேட்பாளர்களின் நடத்தை குறித்து கவனம் செலுத்த வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வேட்பாளர்களை தெரியும் போது கட்சிகள் தார்மீகப் பொறுப்புடன் செயற்படவேண்டியது அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொலன்னாவ பிரதேசத்தில் போதைப் பொருள் பிரச்சினைகாணப்படுவதாக அதனை இல்லாதொழிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை அமரர் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்காக அளப்பரிய சேவைகளை ஆற்றியுள்ளதாக சபாநாயகர் சமால் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

(8-2)

# குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் குற்றச்சாட்டை யூ.என்.எச்.சீ.ஆர் மறுப்பு

(கொழும்பு)

இலங்கையில் பதிவு செய்யப்பட்ட அகதிகள் தொடர்பான விபரங்களை குடிவரவு, குடியகல்வு திணைக்களத்துக்கு வழங்கவில்லை எனக்கூறப்படும் குற்றச்சாட்டை கொழும்பிலுள்ள அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகராலய (யூ.என்.எச்.சீ.ஆர்) அலுவலகம் மறுத்துள்ளது.

அதேவேளை, இவ்வாறான தகவல்கள் அளிக்கப்பட்டன என்பதை மறுத்துள்ள குடிவரவு, குடியகல்வு திணைக்களம் கிடைத்ததகவல்கள் பூரணமானவை அல்ல எனத் தெரிவித்துள்ளது.

இலங்கையில் புகலிடம் கோரும் 191 பேரை திருப்பியனுப்பும் செயன்முறை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் யூ.என்.எச்.சீ.ஆர் அறிக்கை கிடைத்தபின் இவர்கள் குறித்த தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும் எனவும் குடிவரவு,குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேற்படி வெளிநாட்டவர்கள் சுற்றுலாப் பயணிகளாக இலங்கைக்கு வந்த பின் அகதி அந்தஸ்து கோரி யூ.என்.எச்.சி.ஆர். இற்கு விண்ணப்பித்துள்ளதாக குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் சூலாநந்த பெரேரா கூறியுள்ளார்.

இவர்கள் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக புலனாய்வு அறிக்கைகள் கிடைத்தமையே இவர்களை நாடு கடத்த முற்பட்டமைக்கான பிரதான காரணம் எனவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்துடனான புரிந்துணர்வின்படி தேவையான தகவல்களை யூ.என்.எச்.சீ.ஆர் தமக்கு வழங்கவில்லை எனவும் எனினும் அத்தகவல்களை வெளிவிவகார அமைச்சுக்கு அனுப்பியுள்ளதாகவும் அவர் கூறினார்.

ஆயினும் இதை மறுத்த யூ.என்.எச்.சீ.ஆர் 2006 ஆம் ஆண்டின் ஒப்பந்தப்படி வெளிவிவகார அமைச்சுக்கு குடிவரவு, குடியகல்வு திணைக்களத்துக்கும் இத்தகவல்களை தான் அனுப்பியுள்ளதாக கூறியுள்ளது. (8-2)

# இலங்கையின் எண்ணெயில் கண்ணை வைக்கிறது அமெரிக்கா

(கொழும்பு)

இலங்கையின் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு உற்பத்தி மற்றும் சுத்திகரிப்புத்துறைகளில் முதலிடுவதற்கு அமெரிக்க நிறுவனங்கள் ஆர்வத்துடன் இருப்பதாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் பற்றீசியா புட்டினீஸ் தெரிவித்துள்ளார்.


அமெரிக்காவின் சக்தி வலு நிறுவனங்கள் இலங்கையில் எண்ணெய் சுத்திகரிப்பு மற்றும் இயற்கை சுரிவாயு உற்பத்தியை விருத்தி செய்வதில் பெருமளவு முதலீடுகளை செய்ய விரும்புகின்றன.

இலங்கையில் அமெரிக்க நிறுவனங்கள் முதலிடுவது குறித்து பேச்சுக்கள் நடத்தப்படுகின்றன. அடுத்த 5 ஆண்டுக்குள் அதிகளவு அமெரிக்க நிறுவனங்கள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ளும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (8-2)

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# மீன்களின் உயிரியல் சார் ஆய்வுகளும் வளமுகாமைத்துவத்தில் அவற்றின் பங்கும்

உலகளாவிய ரீதியில் மனிதனின் விலங்குப் புரதத்தேவையை கணிசமானளவு நிறைவு செய்யும் உணவு வகை மீன்களாகும். உலக உணவு விவசாய ஸ்தாபனத்தின் கூற்றுப்படி (FAO,2011) இவற்றில் ஏறத்தாழ 90% ஆனவை கடலில் இருந்தே பெறப்படுகின்றன. மீன்கள் நேரடியாக விலங்குப் புரதமாக மட்டுமன்றி பல்வேறு போசணைக்




கூறுகளின் பிரித்தெடுப்பு. உதாரணமாக ஒமேகா 3 கொழுப்பமிலம் மற்றும் கனியுப்புக்கள், உயிரியல் நார்கள், பல்வேறு தேவைக்கான எண்ணெய் பிரித் தெடுப்பு (சுறா ஈரல் எண்ணெய், **Cod liver oil**) மருந்து உற்பத்தி போன்றவற்றுக்காகவும் பிடிக்கப்படுகின்றன.

எனினும் எப்போதும் திறந்த வளமாக உள்ள கடல் வளத்தை உரிய முகாமைத்துவம் இன்றி தொடர்ச்சியாக அறுவடை செய்யும் போது அவ்வளம் எதிர்காலத்தில் புவியிலிருந்து அற்றுப்போகும் நிலை ஏற்படும். உதாரணமாக மனிதனின் அளவுக்கதிகமான மீன்பிடி காரணமாக (over exploitation) சில இன மீன்கள் தற்போது அழிவடைந்து வருகின்றன.

**உதாரணம்:-** பெரு நாட்டிற்குரிய அன்கோவிற்றா (Peruvian Anchovita).

எமது பிரதேசத்திலுள்ள நாளாந்த மீன் சந்தைகளின் மீன் வகைகளும் அவற்றின் அளவும் இதற்கு சான்றாகும். பல்வேறு காரணிகள் இதில் செல்வாக்குச் செலுத்துகின்றன. அதாவது தொடர்ச்சியான வளச் சுரண்டல், பொருத்தமற்ற மீன்பிடி உபகரணத்தை பயன்படுத்தல், பொருத்தமற்ற காலநிலையில் மீன்பிடித்தல், காலநிலை மாற்றமும் கடல் மாசடைதலும், வாழிடம் அழிக்கப்படல் போன்றவற்றை குறிப்பிடலாம்.

எனவே, நிலைத்து நிற்கக்கூடிய மீன் வளப் பயன்பாட்டிற்காக அவற்றின் அறுவடையை முகாமைத்துவம் செய்ய வேண்டிய தேவை உள்ளது. இவற்றை முகாமைத்துவம் செய்யும் உரிமை குறித்த கடல் வலயத்துக்கு சொந்தமான நாடுகளிடையே உள்ளது.


மீன்வள முகாமைத்துவமானது பிரதானமாக உயிரியல் தொடர்பான ஆராய்ச்சி முடிவுகளில் தங்கியுள்ளது. அதாவது முதற்படியாக முகாமைத்துவம் செய்ய வேண்டிய மீன் இனத்தின் வாழிடமும் பரம்பலும், இனப்பெருக்க வயது, இனப்பெருக்க வகை, குடித்தொகையும் வயதும், உணவுப்பழக்கமும் முதிர் நிலைகளின் வாழிடமும், உணவுப் பழக்கமும் இளம் நிலைகளின் வாழிடமும், இனப் பெருக்க வீதம், முட்டைகளின் எண்ணிக்கை ஆகிய உயிரியற் செயற்பாடுகளை அறிய வேண்டியுள்ளது.

முள்ளந்தண்டுள்ள விலங்குகளில் பல்வகைமை கூடிய அங்கிகள் மீன்களாகும். குறித்த இனத்தைப் பற்றிய உயிரியல் சார் ஆய்வுகளின் முதற்படி அவ்வினத்தை விஞ்ஞான ரீதியில் இனங்காணுதல் அவசியமாகும். இது உருவவியல் மற்றும் மூலக்கூற்று காரணிகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. உதாரணமாக ஒட்டி இனங்களில் ஆறு இனங்கள் வரை எமது பகுதிகளில் காணப்படுகின்றன.

அவையாவன; ***Siganus oramin, Siganus lineatus, Siganus stellatus, Siganus javus, Siganus virgatus, Siganus vermiculatus*** இவ்வாறே கட்டாபாரைகளில் நான்கு இனங்கள் காணப்படுகின்றன.

அவையாவன; ***Scomberoides lysan, Somberoides commersonianus, Scomberoides tol, Scomberoides tala*** வளமுகாமைத்துவத்தின் இனங்களை துல்லியமாக அறிதல் இன்றியமையாததாகும்.

மீன்களின் நீள- நிறைத் தொடர்பானது அவற்றின் வளர்ச்சிப்போக்கை காட்டுவதுடன் வளர்ச்சிக்கு தேவையான காரணிகள் குறித்த வாழிடத்தில் சாதகமாக உள்ளதா எனவும் காட்டுகின்றது.




மீன்களின் உணவூட்டல் தொடர்பான உயிரியல் சார் ஆய்வுகள் அவற்றின் உணவுப் பழக்கத்தை தெளிவாக காட்டுகிறது. இவற்றின் உணவுப்பழக்கங்கள் பின்வரும் உருவவியல் பண்புகள், குடலிலுள்ள உணவுக் கூறுகள் என்பன மூலம் இலகுவாக அறியப்படும்.

★ **தாவர உண்ணி மீன்கள் (Herbivores fishes)**

இவை பிரதானமாக நுண்ணிய மற்றும் பெரிய அல்காக்களையும் நீர்த்தாவரங்களையும் உணவாக உட்கொள்ளும்.

இவற்றின் உணவுக்கால்வாய் பொதுவாக உடல் நீளத்தை விட கூடவாகவும் அதிக தடவை சுருளடைந்ததாகவும் காணப்படும்.

**உதாரணம்:-** ஒட்டி மீன்கள் ***Siganus sp***

★ **ஊனுண்ணி மீன்கள் (Carnivores fishes)**

இவை பல்வேறுபட்ட நீர்வாழ் விலங்குகளை உணவாக உட்கொள்பவை. எனினும் சில மீன்கள் குறித்த வகையை மட்டும் உணவாக உட்கொள்ளும். உதாரணமாக பெரிய கட்டாபாரை மீன்கள் ஏனைய சிறிய மீன்களை உண்ணும். எனவே, இவை **pisci vores fishes** என அழைக்கப்படுகின்றன.

இவற்றில் இரை கௌவி மீன்கள் **(perdators)** இரையை பிடிப்பதற்காக வளைந்த கூரிய பற்றிப் பிடிக்கக்கூடிய பற்களை கொண்டிருக்கும்.

**உதாரணம்:-** சுறா, Pike, gars

சிலவற்றின் தொண்டைப் பகுதியில் பற்கள் காணப்படும். (Pharyngeal teeth)

திருமதி துளசிதா வில்லியம் சாந்தகுமார்
முதுதத்துவமாணி மாணவி, மீன்பிடியியல் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

**உதாரணம்:-** கலவாய் **(groupers)**

இவற்றின் பூவாரிகள் குமிழ் வடிவமாக அல்லது பெரிய முள் வடிவமாக காணப்படுவதோடு உணவுக்கால்வாய் ஒப்பீட்டளவில் நீளம் குறைந்ததாகவும் நேரானதாகவும் வலிமையானதாகவும் காணப்படும். இரைப்பை காணப்படும்.

**உதாரணம்:-** விளை மீன்கள் ***Lethrinus sp***

கலவாய் ***Epinephelus sp***

கட்டாபாரைகள் ***Scomberoids sp***

சில மீன்கள் ஏனைய மீன்களில்/ நீர் வாழ் விலங்குகளில் ஒட்டுண்ணியாகவும் காணப்படலாம். இதற்காக இவற்றின் வாய்ப் பகுதி சிறத்தலடைந்து இருக்கும்.

**உதாரணம்:- Hag fishes, Lamprey**

## வாரத்திற்கு ஒரு புதிர்! 66

**2009 ஆம் ஆண்டிற்கான இராசாயனத்துறைக்கான "நோபல்" பரிசு பெற்ற இந்திய தமிழர் பெயர் என்ன?**

விடைகளை 09.07.2012 இற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

**ஜே. பிரபாகர்**
(செயலாளர்-யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பிரிவு A)
இரசாயனவியல்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**

இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட தாவரவியல் துறையில் கலாநிதி பி.செவ்வேளிடம் (தலைவர் பிரிவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:**
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 65 க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

கார்த்திகேசு செல்வரட்ணம்.
வீரபத்திர கோவிலடி,
கரணவாய் வடக்கு,
கரவெட்டி

**புதிர் 65 இற்கான கேள்வியும் விடையும்:**
**Base Ball விளையாட்டுக்களம் எவ்வாறு அழைக்கப்படும்?**

Diamond

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 66

சரியான விடை:.......................................................
முழுப்பெயர்:.......................................................
முகவரி:.......................................................
தொ.பே. இல:.......................................................
கையொப்பம்:.......................................................

# தூங்கா விளக்குகளா... துயில் எழுப்பவேண்டும்...!

கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக உயர் பாதுகாப்பு வலையங்களாக இருந்துவரும் காணிகள் அப்பகுதி குடிமக்களுக்கு சொந்தமானவை. இதன் நிலப்பரப்பு 8000 ஏக்கர் என்று கணக்கிடப்பட்டுள்ளது. தெல்லிப்பளையின் 23 கிராமசேவகர் பிரிவுகளில் மட்டும் 7410 ஏக்கர் காணி கடந்த சுமார் 2 தசாப்தங்களாக இராணுத்தின் வசமாக உள்ளது. அதன் சொந்தக்காரர்கள் உரித்துக்காரர்களிடமும் கையளிக்க எந்த நடவடிக்கையும் இல்லை. இவைகளை மீட்டெடுக்க நீதிமன்றங்களில் எடுக்கப் பட்ட முயற்சிகளும் முடக்கப்பட்டுள் ளன.

உயர்பாதுகாப்பு வலயக் காணிகளில் இதுவரை சுமார் 400 இராணுவத்தினரதும், கடற்படையினரினதும் குடும்பத்தினர் குடியேற்றப்பட்டுள்ளனர். செழிப்பான இந்தக் காணிகளில் சிங்கள இராணுவக் குடும்பங்கள் விவசாயம் செய்து வருகின்றனர்.



இந்தப்பகுதிகளில் புதிய கட்டிடங்களை நிறுவியுள்ள படையினர் தேனீர்சாலைகள், வெதுப்பகங்கள் மற்றும் சில்லறைக் கடைகளை அமைத்து வணிகம் செய்து வருகின்றனர். முள்ளிவாய்க்கால் யுத்தத்திற்குப் பின்னர் உல்லாசப்பயணிகள்போல அங்கு சென்று வரும் புலம்பெயர் தமிழர்கள் இராணுவப்பயன்பாட்டில் இருக்கும் தங்கள் காணிகளை மீட்டெடுக்க எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. மாறாக தங்கள் காணிகளில் இதுவரை காலமும் குடியிருந்து அவைகளைப் பராமரித்து வந்த இடம்பெயர் உறவுகளை காவற்துறையினரின் உதவியுடன் வெளியேற்றும் கைங்கரியங்களை செய்துவருகின்றனர் என்ற தகவல்கள், பலரையும் கவலையில் ஆழ்த்தியுள்ளன.

தமிழரின் சொந்தக்காணிகளும் நிலபுலன்களும் ஒளிவுமறைவு இன்றி இராணுவப்பறிப்பு நிகழ்ச்சிநிரலில் சேர்க்கப்பட்டுள்ளது.

ஆனால், யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி, உண்மைக்கு மாறான செய்திகளை ஊடகங்களுக்கு வழங்கி வருகின்றார். இராணுவப் பாவனையிலிருந்த 60 வீதமான காணிகள் உரியவர்களிடம் ஒப்படைக்கப் பட்டுவிட்டதாகவும் மீதமான 40 வீதக் காணிகளும் விரைவாக உரியவர்களிடம் ஒப்படைக்கப்படும் எனவும் கூறிவருகிறார். மீண்டும் மீண்டும் ஒரு பொய்யைக் கூறினால், அது உண்மையாகிவிடும் என்று அவர் நினைக்கின்றார் போலும். கடந்த மூன்றாண்டுகளாக ஒருவகை அச்ச உணர்வால் துவண்டிருந்த குடாநாட்டு மக்கள் இப்போது கொஞ்சம் கொஞ்சமாக அதிலிருந்து விடுபட்டு வருகின்றனர்.

தமிழர் காணி பறிப்புக்கு எதிராக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பிரகடனம் செய்த எதிர்ப்புக் கண்டன பேரணி, இந்த மாற்றத்திற்கான முதல் வித்து. மேற்படி முன்னணியின் செயலாளர், துணிச்சலாக இதற்கான பகிரங்க அழைப்பை பொதுமக்களுக்கு விடுத்தார்.

“எங்கள் நிலம் எமக்கு வேண்டும், எங்கள் நிலமே எமக்கு வேண்டும்” என்ற தாரக மந்திரத்துடன் பொங்கு தமிழ் நிகழ்வை யாழ்.பல்கலைக் கழகத்தில் ஆரம்பித்து வைத்தவர் இவர். அப்போது பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவராக இவர் இருந்தார். “எங்கள் நிலம் எமக்கு வேண்டும்” என்ற கொட்டொலியுடன் யாழ். பேரூந்து நிலையத்தில் தமிழ் மண் என்னும் தேசிய சிந்தனை உள்ள பலரும் கட்சி பேதங்களை மறந்து கலந்துகொண்டனர்.

தமிழர் தங்கள் இலட்சியத்திற்காக ஒன்றுபடுவது கண்டு சிங்களத் தரப்பு அச்சமடைந்ததால் பேரணியை நடத்த விடாது தடுக்க நீதிமன்றத்தை நாடியது காவற்துறை.


பேரணி வீதிகளாகச் செல்லும் போது மோதல்கள் ஏற்படலாம் என்றும் அதனால் அமைதிக்குப் பங்கம் ஏற்படலாமென்றும் பொய் வார்த்தை முன்வைத்த அரச இயந்திரத்தின் கோரிக்கைக்கு நீதிமன்றம் இயைவாகத் தீர்ப்பு வழங்கி பேரணியை நிறுத்தியது.

சட்டத்தை மதிக்கும் சமூகமாக தமிழர் இருப்பதால், பேரணியை இரத்துச் செய்து கண்டனக்கூடலை முடித்துவைத்தனர்.



இராணுவ ஆக்கிரமிப்புக்குள் இருக்கும் தமிழ் உறவுகளால் அரச எதிர்ப்பு நடவடக்கை எதனையும் செய்யமுடியாதென்ற சிலரது கற்பனா வாதம் இங்கு முடிவுக்கு வந்தது.

மறுநாள் தெல்லிப்பளையில் பொது மக்கள் தாமாக முன்னெழுந்து ஆர்ப்பாட்டம் நடத்தியதால் ஆத்திரமடைந்த சிங் களப் புலனாய்வுத் துறையினரும் துணை இராணுவக் குழுவினரும் அப்பாவிப்பொது மக்கள் மீது தாக்குதல் நடத்தி அவர்கள் மீது கழிவு எண்ணெய் வீசினர்.



சில மாதங்களுக்கு முன்னர் தமிழர் வாழ்விடங்களில் கிறீஸ் பூதங்களை அறிமுகம்செய்து அச்சமூட்டிய சிங்கள இராணுவம், இப்போது கழிவு எண்ணெய்க் குண்டர்களை அறிமுகம் செய்துள்ளது.

தமிழர் தாயகத்தில் சிங்கள இராணுவத்தின் தர்பார் தொடர்கிறது என்பதற்கு நிகழ்கால சாட்சியே கழிவு எண்ணெய் அபிஷேகம்.

தமிழ்மண் பறிப்பை முற்றாகத் தடுப்பதற்கு தாயக உறவுகளால் மட்டும் முடியாது என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்வர்.

சமகாலத்தில் புலம்பெயர்வாழ் தமிழர்களும் தத்தம் வாழிடங்களில் இதற்கான செயற்பாடுகளில் இறங்க வேண்டும். நிலத்திலிருந்து எழும்பும் குரல்கள் இதனையே வேண்டி நிற்கின்றன

புலம்பெயர் மண்ணில் ஒவ்வொரு நாளும் தமிழ் மண் பறிப்பை அந்தந்த நாட்டு ஆட்சியாளருக்குத் தெரியப்படுத்தும் செயற்பாடுகள் அவசியமானது. ஆலய வழிபாடுகளும் தூங்கா விளக்குகள் ஏந்துவதும் தமிழ் மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த உதவலாம். ஆனால், அரச மட்டத்திற்கு விடயத்தைக் கொண்டு செல்ல இது போதாது.

இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனனின் கொழும்பு விஜயம் காணிப்பறிப்பைத் தடுக்கும் என நினைப்பது வெறும் பகற்கனவு. நவநீதம்பிள்ளையும் அவரது குழுவும் இலங்கைக்கு விஜயம் செய்தால் மண்பறிப்பு முடிவுக்கு வரலாம் என்று எண்ணுவது நிலைமையைப் புரியாத அறியாமை.

அமெரிக்கவுக்கு அங்கு நடப்பதெல்லாம் தெரியும், நிச்சயம் மண்பறிப்பைத் தடுத்து நிறுத்துவர் என நினைப்பது மடமை. ஜெனீவாத் தீர்மானத்தின் மீது அதீத நம்பிக்கையைக் கொண்டிருப்பதே அதுவும் இதுவும் உதவும் என்ற எதிர்பார்ப்பிற்கு அடிப்படைக் காரணம். மண்ணின் சொந்தக்காரர்கள், அதன் உருத்துக்காரர்கள் அதன் வம்சாவழியினர் அங்கும் இங்கும் எங்கும் உயிரோட்டமாக இயங்காவிட்டால் தாய் மண்ணைக் காப்பாற்ற முடியாது. மண் பறிபோனபின் அரசியல் தீர்வு, அதிகாரப்பரவல், 13-வது திருத்தம் என்பதெல்லாம் கண்கெட்ட பின்னரான சூரிய வணக்கத்திற்கு ஒப்பானவை.

ஜெனிவாத் தீர்மானம் ஒரு காலத்தின் தேவை மட்டுமே. ஆனால், அது சர்வ நிவாரண மூலிகை அல்ல.

# நிலஅபகரிப்பு நீங்குமா, நீளுமா...?

தமிழர் தாயகத்தை குறிப்பாக தற்போது வடக்கை, விரைவாக சிங்கள- தமிழ் கலப்பிடமாக மாற்றும் முயற்சி தீவிரமடைந்து வருகிறது.

இராணுவத்திடம் இதற்கான சகல பொறுப்புகளையும் அரசாங்கம் ஒப்படைத்துள்ளது.

மேற்குலகம் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் விடயத்தில் ஆர்வம் காட்டி வருகின்றது.

புகலிடத் தமிழர்கள், ஜெனிவாத் தீர்மானம் தமிழரின் பிரச்சினையை முழுமையாக தீர்த்துவைக்கும் என்று நம்பியிருக்கிறார்கள்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பேச்சுவார்த்தையா அல்லது தெரிவுக் குழுவா என்று பட்டிமன்றத்தை நடத்திக் கொண்டிருக்கிறது. இப்படியான ஒரு சூழ்நிலையே, தமிழ்மண் பறிப்பிற்கு உகந்தது என்று திட்டமிட்டுள்ள பேரின அரசாங்கம் தனது காரியத்தில் கண்ணும் கருத்துமாக உள்ளது.

காணி அபகரிப்பு, காணி சுவீகரிப்பு, காணி கபளீகரம், காணி சூறையாடல் என்ற பல வார்த்தைகளால் அழைக்கப்பட்டாலும், அங்கு நடைபெறுவது, தமிழருக்குச் சொந்தமான காணிகளை அடையாளம் வைத்து பட்டப்பகல் கொள்ளை போல் பறிமுதல் செய்துவரும் நடவடிக்கை.

“தமிழரின் காணிகளை அரசாங்கம் ஒருபோதும் பறிமுதல் செய்யவில்லை, அப்படி சொல்பவர்கள் முடிந்தால், அதனை நிரூபிக்கட்டும்” என்று சவால் விட்டுள்ளார் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச.

குடாநாட்டின் பிரதேச செயலாளர்களை அழைத்து வடமாகாண முக்கிய அரச பதவிகளில் இருப்பவர்கள், தமிழர் காணிகளை அடையாளம் காட்டி, அவைகளை இராணுவத் தேவைகளுக்குப் பயன்படுத்த சட்ட நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுள்ளார்கள் என செய்திகள் கசிகின்றன.

நன்றி: இணையம்

# டெங்கு ஒழிப்பிற்கு ஒத்துழைப்பு அவசியம்;

# யாழ்.சுகாதார சேவைகள் பணிமனை அறிக்கை



(யாழ்ப்பாணம்)

தேசிய நுளம்புக்கட்டுப்பாட்டு மாதத்தில் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ள செயற்பாடுகளுக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை விடுத்துள்ள அறிக்கையில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

ஜனாதிபதி செயலணிக் குழுவினால் இம்மாதம் 25 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் ஜூலை 24 ஆம் திகதி வரையான காலப் பகுதி தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு மாத மாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையொட்டி ஏனைய அமைச்சுக்களின் ஒத்துழைப்புடன் சுகாதார அமைச்சு, மாகாண சுகாதார திணைக்களங்கள்மற்றும் அதன் கீழ்வரும் நிறுவனங்களால் தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு மாதம் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதனையொட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் ரீதியாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளாவன,

தேவையுள்ள இடங்களிற்கு குடம்பிக் கொல்லிகள், பிரிஜ பற்றீரியா போன்றவற்றை தேவையான அளவு பெற்றுக்கொள்ள வேண்டும்.

சுகாதார வைத்திய அதிகாரிகளும் மேற்பார்வை பொது சுகாதார பரிசோதர்களும் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்வதுடன் மனித வளங்கள், பௌதீக வளங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு பிரயோகிக்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

தமது நாளாந்த கடமைகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் பூச்சியியல் உதவியாளர்கள், பொது சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள், பொது சுகாதார தாதிய உத்தியோகத்தர்கள் அந்தந்த சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளின் நுளம்புக் கட்டுப்பாட்டு செயற்பாடுகளில் தமது பங்களிப்பினை வழங்க வேண்டும்.

பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்குரிய செயற்பாடுகளும் பொறுப்புகளும் சுகாதார வைத்திய அதிகாரிகளால் தயாரிக்கப்பட்டு நாளாந்த செயற்பாட்டறிக்கைகள் பொது சுகாதார பரிசோதகர்களிடமிருந்து பெறப்பட்டு பின்னர் தேவைப்படுமிடத்து பயன்படுத்தப்பட முடியும்.

பொது சுகாதார பரிசோதகர்கள் நீதிமன்ற நடவடிக்கைகளுடன் இருக்கும் பட்சத்தில் மாற்றுத்திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியும்.

இதற்கமைய பொது சுகாதார பரிசோதகர்களால் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளாக,

அனைத்துப் பாடசாலைகளிலும் டெங்கு விழிப்புணர்வு செயற்பாடுகள் காலை 7.30 தொடக்கம் 8.30 வரையான நேரத்தில் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அனைத்து பாடசாலைகளிலும் டெங்குக் கட்டுப்பாட்டு செயற்பாடுகள் நடைபெறுவது உறுதி செய்யப்பட வேண்டும்.

அவ்வாறு டெங்கு நுளம்புக் கட்டுப்பாட்டு செயற்பாடுகளை மேற்கொள்ளாத பாடசாலைகள் பற்றிய விபரம் சுகாதார வைத்திய அதிகாரிக்கு தெரியப்படுத்தப்பட வேண்டும்.

முதலிரண்டு வாரகாலப் பகுதியினுள் பிரதேச செயலணிக்குழுவின் உதவியுடன் டெங்கு நுளம்பு பெருகக்கூடிய ஆபத்துள்ள வீட்டுவளவுகள், நிறுவனங்கள் போன்றவை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரையான நேரத்தில் ஆய்வு செய்யப்பட வேண்டும்.

அடுத்த இரண்டு வார காலப் பகுதியினுள் டெங்கு நுளம்புப்பெருக்கம் காணப்பட்ட இடங்கள் மீளாய்வு செய்யப்பட்டு நுளம்புப் பெருகுமிடங்களை அழிப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளாதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

பொதுச் சுகாதார பரிசோதகர்கள் நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தில் பிற்பகல் 2 மணியிலிருந்து தமது வழமையான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.

மாகாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளாக,

மாகாண மற்றும் மாவட்ட செயற்பாட்டுக்குழுக்களை ஒருங்கிணைப்பதுடன் தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரம் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்.

மாகாண மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் அறிவுறுத்தல், நிதியேற்பாடு செய்தல், மேற்பார்ல்வ, கண்காணித்தல் தொடர்பாக ஆளணி, வழிநடத்தல்களை மேற்கொள்ள வேண்டும்.

அவசரமானதல்லாத பயிற்சிகள், கூட்டங்களை நுளம்புக் கட்டுப்பாட்டு வாரகாலப்பகுதியில் ஒழுங்கு செய்வதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

தமது பிரிவினுள் உள்ள நிறுவனங்களில் நுளம்பு பெருகுமிடங்கள் கிரமமாக கண்காணிக்கப்பட்டு அழிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு உரிய வளங்கள் வழங்கப்படுவதுடன் இதனைக் கண்காணிப்பதற்கு பொறுப்பாக ஒருவர் நியமிக்கப்பட வேண்டும்.

தேவையேற்படின் அனைத்து உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் சிரமதானம் ஒழுங்கு செய்யப்படலாம்.

அனைத்து சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளினதும் செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்கு மாவட்ட மட்ட உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும்.

சுகாதாரப் பராமரிப்பு நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளாவன,

நுளம்பு பெருகுமிடங்கள் கிரமமாக கண்காணிக்கப்பட்டு அழிக்கப்பட வேண்டும். நுளம்புப்பெருக்கக்கட்டுப்பாட்டு செயற்பாடுகளை ஒருங்கிணைத்து செயற்படுவதற்கு ஒருவர் பொறுப்பாக நியமிக்கப்படுவதுடன் அவருக்கு தேவையான ஆளணி, ஏனைய தேவையான வளங்கள் வழங்கப்பட வேண்டும்.

தேவையேற்படின் அனைத்து உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் சிரமதானம் ஒழுங்கு செய்யப்படலாம் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (8-6)

### முதலமைச்சர் பதவி தொடர்பில்

## இணக்கப்பாட்டின் அடிப்படையில் கூட்டணி ஒன்று அமைக்கப்படும்

(கொழும்பு)

கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவி தொடர்பிலான இணக்கப்பாட்டின் அடிப்படையில் கூட்டணி அமைக்கப்படும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்துள்ளது.

கிழக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளர் பதவியை தமது கட்சிக்கு வழங்கும் கட்சியுடன் கூட்டணி வைக்கத் தயார் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சபீக் ரஜாப்டீன் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் வேட்பாளர் தொடர்பில் சரியான இணக்கப்பாடு ஏற்படுத்த முடியாவிட்டால் தனித்து போட்டியிட நேரிடும். ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய இரண்டு கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளது.

கிழக்கு மாகாண சபைத் தேர்தல்கள் குறித்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் இரண்டு கட்டப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளன.

எனினும் இதுவரையில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை.

கடந்த தடவை தமிழ்ப் பிரதிநிதி ஒருவர் முதலமைச்சர் பதவியை வகித்து வந்ததாகவும் இம்முறை முஸ்லிம் பிரதிநிதி ஒருவருக்கு இந்தப் பதவி வழங்கப்பட வேண்டும் எனவும் ரஜாப்டீன் தெரிவித்துள்ளார். (8-2)

## சிறுவர் பாதுகாப்பு நிலையங்கள் வடமாகாணத்தில் செயற்படவுள்ளன

(கொழும்பு)

தனித்து குடும்பத்தை நடத்த வேண்டியுள்ள தாய்மார்கள் வேலைக்கு செல்லும் போது தமது பிள்ளைகளை விட்டுப் போகக் கூடிய சிறுவர் பாதுகாப்பு நிலையங்கள் வடமாகாணத்தில் அமைக்கப்பட்டுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை நேற்றைய தினம் கூறியுள்ளது.

முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள நிலையங்களில் அப்பகுதியிலுள்ள பெண்கள் தொண்டர்களாக சுழற்சி முறையில் பணிபுரிவர் என்றும் சிறுவர்களை பாதுகாப்பதன் முக்கியத்துவம் பற்றி விழிப்புணர்வு திட்டங்களை நடத்தி வருவதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தலைவர் அனோமா திஸாநாயக்க கூறினார்.

பாடசாலைக்கு செல்லும் பிள்ளைகள் பயன்பெறத்தக்க வகையில் இந்த நிலையங்கள் பி.ப. 2 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை செயற்படும். அதேவேளை தனியாக குடும்பப் பொறுப்பை சுமக்கும் வேலைக்குப் போகும் தாய்மாரின் பிள்ளைகளின் பாதுகாப்புக்காகவே இந்த மையங்கள் நிறுவப்படுகின்றன.

இவர்கள் வேலைக்குப் போகும் போது தமது பிள்ளைகளை விட்டு செல்வதற்கு பாதுகாப்பான இடமின்றி உள்ளனர். தெரியாத ஆட்களிடம் குழந்தைகள், சிறுவர்களை விட்டுச் செல்வது ஆபத்தானது எனவும் கொழும்பில் நல்ல வேலையில் அமர்த்துவதாக கூறி தாய்மார், பிள்ளைகளை அழைத்து வந்து ஏமாற்றும் சம்பவங்களும் இடம்பெறுகின்றன எனவும் கூறினார்.

இந்த நிலையங்கள் அந்தந்த பகுதியில் வாழும் தொண்டு மனப்பான்மைக் கொண்ட பெண்களால் நிர்வகிக்கப்படுகின்றன. எனவே, பயப்பட வேண்டிய காரணம் இல்லை.

இந்தத் திட்டம் கணவனை இழந்த பெண்களை மையப்படுத்தி நடத்தப்பட்டாலும் எந்த பிள்ளையும் இங்கு சேர்த்துக் கொள்ளப்படுவர் எனவும் யுத்தம் நடந்த காலத்தில் இப்பகுதிகளில் சமூக நலன்புரி திட்டங்களை செயற்படுத்த இப்பகுதிகளில் முடியவில்லை எனவும் அவர் கூறினார். (8-9)


### யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
### விசேட கல்வி நூற்றாண்டையொட்டிய போட்டிகள்-2012

**வடமாகாணத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் பங்குபற்ற முடியும்**

தொனிப்பொருள்- விசேடதேவைக்குட்பட்டவர்களை கல்வியினால் வலுவூட்டுவோம்.

மாணவர்களுக்கானது- சித்திரப்போட்டி பின்வரும் தலைப்புகளில் ஒன்றை தெரிவு செய்து A3 அளவுடைய கடதாசியில் விரும்பிய வர்ண ஊடகத்தை பயன்படுத்தி வரைந்து அனுப்ப வேண்டும்.

★ உட்படுத்தற் கல்வி வகுப்பறை
★ விசேட தேவையுடைய மாணவர்களின் சாதனைகள்
★ விசேட தேவையுடைய மாணவர்களை ஏற்றுக்கொள்வோம்
★ எல்லோருக்கும் கல்வி

1. ஆரம்பப்பிரிவு தரம் – 1-5 வரை
2. இடைநிலைப் பிரிவு தரம் 6-11 வரை
3. மேற்பிரிவு க.பொ.த.உயர் தரம்

ஆசிரியர்களுக்கானது -சகல பாடத்துறை ஆசிரியர்களும் பங்குபற்றலாம்.

1. இறுவெட்டு தயாரித்தல் போட்டி

விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றலை மேம்படுத் தத்தக்க வகையில் அமைதல் வேண்டும்.

2. கற்பித்தல் சாதன உருவாக்கப் போட்டி

விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்பிக்கக்கூடிய கற் றல்-கற்பித்தல் சாதனங்களாக அமைதல் வேண்டும்.

☆ இப்போட்டிக்கான முடிவுத் திகதி 15-07-2012 சித்திரங்களை, இறுவெட்டுகளை நேரில் அல்லது தபால் மூலம் சமர்ப்பிக்கலாம்.

☆ கற்பித்தல் சாதன உருவாக்கப் போட்டிக்கான விண்ணப்பம் சுயமாக தயாரிக்கப்பட்டு 10/07/2012 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்ப வேண்டும்.

மேற்படி போட்டிகள் மாவட்ட மட்டத்திலும் ,மாகாண மட்டத்திலும் நடைபெறும். பங்குபற்றும் அனைவருக்கும் பெறுமதியான சான்றிதழ் வழங்கப்படும். மாவட்ட, மாகாண மட்டத்தில் தெரிவானவர்களுக்கு பரிசில்கள், விசேட கேடயங்கள் வழங்கப்படும்.

த.சிவகுமார்
விரிவுரையாளர் (விசேட கல்வித்துறை)
யாழ்ப்பாணம் தேசிய
கல்வியியற் கல்லூரி.
0776184250

S.K. யோகநாதன்
பீடாதிபதி
யாழ்ப்பாணம் தேசிய
கல்வியியற் கல்லூரி.



# சிறுவர் அரங்கம்

145

## பஞ்ச தந்திரக் கதைகள்

### ஆப்பைப்பிடுங்கி அழிவைத் தேடிக்கொண்ட குரங்கு

அந்த ஊர் மலையை அடுத்த ஊராகும். மலைக்கும் அந்த ஊருக்கும் கூடிப் போனால் இரண்டு மைல்கள் தொலைவு தான் இருக்கும்.

மலையிலிருந்து பெரிய பெரிய தடிகள் வெட்டிக் கொண்டு வரப்படும். அவைகள் ஊரில் வைத்துத் தான் அறுத்து அவைகளை வகைப்படுத்துவார்கள்.

தடிகளை அறுப்பதற்கு இரண்டு ஆட்கள் ஒவ்வொரு தடிக்கும் தேவைப்படுவார்கள். பெரிய சாரம் ஒன்று கட்டி அதன் மேலே தடியை ஏற்றி, மேலே ஒருவரும் கீழே ஒருவரும் அறுப்பார்கள்.

மேலேயுள்ளவர் நின்ற படியும் கீழே உள்ளவர் இழுத்த வண்ணமும் அறுப்பார்கள்.

இவ்விதமாக அறுத்துக் கொண்டிருந்தவர்கள் ஒரு நாள் நண்பகல் வேளையில் உணவு உண்டுவர பக்கத்திலுள்ள உணவு விடுதிக்குப் புறப்பட்டார்கள்.

மரத்தை நீட்டுவாக்கில் அறுத்துக் கொண்டிருந்தவர்கள் மரப்பிளவில் மரத்தினாலான ஆப்பு ஒன்றை அடித்துச் செல்வது வழக்கம்.

இவ்விதம் அடித்துச் சென்றால் உணவுக்குப் பின்னர் அந்தப் பிளவில் வாளைச் சொருகி மீண்டும் அறுப்பதற்கு இலகுவாகும் என்பதால் இவ்விதம் அடித்துச் சென்றிருந்தார்கள்.

அந்தப் பகுதியில் குரங்குகள் அதிகமுள்ளதால் ஒரு குரங்கு அறுக்கப்பட்ட அந்த மரத்தில் ஏறி விளையாடிக் கொண்டிருந்தது.

எதற்காக அந்த ஆப்பு அடிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரியாமல் அந்தப் பிளவில் ஏறி அமர்ந்த வண்ணம் தன்னுடைய பலமெல்லாம் கூட்டி அந்த ஆப்பைப் பிடுங்குவதற்கு அசைத்துக் கொண்டிருந்தது.

ஆப்பைப் பிடுங்கினால் என்னவாகும்? அறுக்கப்பட்ட இடைவெளியில் தொங்கிக் கொண்டிருந்த அதனுடைய வாலும், அதன் பின் பகுதியும் நசுங்கிவிடும் என்பது தெரியாமல் ஆப்பை அசைத்து அசைத்து கடைசியில் பிடுங்கியும் விட்டது.

கொஞ்சம் அறுக்கப்பட்டு விடப்பட்ட மரத்தின் இருபகுதிகளும் வேகமாக ஒன்று சேரவும் அதன் வாலும் அதன் பின்பகுதியும் அந்த இடைவெளியில் சிக்கிப் பரிதாபகரமான முறையில் செத்துப் போயிற்று என்று கதையைக் கூறி முடித்தது.

பின் தன்னுடைய சகோதரனான தமனகனிடம், நீயும் உனக்குத் தேவையில்லாத விடயத்தில் தலையிடாதே! இதைப் போல துன்பமுறுவாய்! என்று எச்சரித்தது.

ஆனால் தமனகன் என்ற அந்த நரி அதைப் பற்றி பொருட்படுத்தவில்லை.

இப்போது நம் அரசன் பயந்து போயிருப்பதால், நான் என்னுடைய அறிவைப் பயன்படுத்தி அரசனுடைய நட்பைப் பெறுவேன்! என்றது தமனகன்.

அரசனுடைய நட்பு ஆபத்தை விளைவிக்கும் என்பார்கள். எனவே, இந்த முயற்சியில் இறங்க வேண்டாம் என்று கூறியது.

அறிவுள்ளவன் எவனும் எளிதில் யாரையும் வசப்படுத்தி விடுவான். நான் என்ன செய்கிறேன் பார்! என்று கூறியவண்ணம் புறப்பட்டது.

தமனகன் தன்னுடைய சகோதரனான கரடகனுடைய அறிவுரையைக் கேட்கவில்லை. அது சிங்கத்தைக் காணச் சென்றது., தன்னைக் காணத் தமனகன் வந்து கொண்டிருந்ததைப் பார்த்துச் சிங்கம் மகிழ்ந்தது.

சிங்கத்தைக் காணச் சென்ற தமனகன் பணிவாக நின்று வணங்கியது.

என்ன தமனகன் உன்னைப் பார்த்து நீண்ட நாட்களாகின்றனவே, நலமாக இருக்கிறாயா? என்று விசாரித்தது.

நான் தங்கள் அருளால் நலமாகத்தான் இருக்கிறேன். உங்கள் உண்மை ஊழியனான நான் எப்போதும் தங்கள் நலத்திற்காகப் பாடுபடுபவன். எதையும் என்னிடம் மனம் திறந்து கூறலாம்! என்று தமனகன் கூறியது.

இது என்ன இவ்விதம் கூறுகிறதே, என்ன கூறச் சொல்கிறது என்று தெரியவில்லையே! என்று எண்ணிய சிங்கம் என்ன தமனகன் எதைப்பற்றி நீ கூறுகிறாய் புரியவில்லையே என்றது.

ஒன்றுமில்லை இரண்டு தினங்களுக்கு முன்னால் நீங்கள் நீரருந்தச் சென்றுவிட்டு அருந்தாமல் திரும்பி விட்டீர்களே, அது ஏன் என்று நான் அறிந்து கொள்வதில் தவறில்லையே! என்று கேட்டது.

இந்தப் பொல்லாத நரி அனைத்தையும் அறிந்து கொண்டது போலும்! என்று எண்ணியது பிங்களகன் என்ற அந்தச் சிங்கம்.

ஏதோ தயங்குகிறது! என்று எண்ணிய தமனகன் என்ற நரி, அரசே!, நம்பிக்கைக்குரியவர்களிடம் சொன்னால் நன்மைகள் தான் விளையும். அதனால்தான் கேட்கிறேன் என்றது.

தமனகனே! அன்று நான் நீர் அருந்த ஆற்றில் இறங்கிய அந்த வேளையில் வெகு தொலைவில் ஒரு கொடிய விலங்கின் ஓசை கேட்டதல்லவா? என்றது சிங்கம்.

ஆமாம்! என் காதுகளிலும் அந்தப் பெரிய சப்தம் விழுந்தது! என்றது தமனகன்.

அந்தக் கொடிய சப்தத்தைக் கேட்டுத்தான் நான் பயந்து நீரருந்தாமல் வந்து விட்டேன்.

அது ஒரு கொடிய விலங்காகத் தான் இருக்க வேண்டும். எனக்கு எதிராக இன்னொரு விலங்கு இந்தக் காட்டிற்கு வந்து இவ்வளவு கொடூரமான குரல் கொடுப்பதென்றால் அது பயங்கரமான மிருகமாகத் தான் இருக்க வேண்டும்.

இதுவரையில் நிம்மதியாக இருந்த எனக்கு உண்மையிலே அச்ச உணர்வு ஏற்பட்டு விட்டது. இனிமேல் இந்தக் காட்டில் நிம்மதியுடனும் நிறைவுடனும் காலம் தள்ள முடியாது.

ஆகவே, நான் இந்தக் காட்டை விட்டுச் செல்வதே நல்லது! என்று கூறியது சிங்கம்.

அரசே! தாங்கள் அந்தக் கொடிய விலங்கைக் கண்களால் பார்க்கவில்லை. அதன் சப்தத்தை மட்டும் தான் கேட்டீர்கள்.

எனவே, அந்த சப்தத்தை வைத்து அது என்ன மிருகம் என்று தீர்மானிக்க முடியாது. இதற்காகத் தாங்கள் கவலைப்பட்டு இந்தக் காட்டை விட்டுச் செல்லக்கூடாது.

வெறும் சப்தத்தை வைத்து இந்தக் காட்டை விட்டுப் புறப்படுவது என்பது தங்களைப் போன்ற வீரருக்கு அழகல்ல.

எனவே கவலைப்படாதீர்கள். எதையும் தீர ஆராய்ந்த பின்னர் தான் முடிவு எடுக்க வேண்டும்.

போர் முரசைக் கண்டு அஞ்சிய நரியின் கதை போலத் தான் உங்கள் செயல் இருக்கிறது.

அது என்ன கதை? என்று சிங்கம் கேட்கவும் தமனகன் என்ற அந்த நரி சொல்ல ஆரம்பித்தது.

# உலகின் இரண்டாவது பாலஸ்தீனமாக வடபகுதி மாற்றப்பட்டு வருகின்றது



## நவசமசமாஜக்கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

**வடபகுதி தமிழ் மக்களின் காணிகளை அரசாங்கம் பலாத்காரமாக சுவீகரிக்கின்றது என குற்றஞ்சாட்டும் நவசமசமாஜக்கட்சி உலகின் இரண்டாவது பாலஸ்தீனமாக வடபகுதி உருவாகியுள்ளது என நவசமசமாஜக்கட்சியின் தலைவரும் தெஹிவளை, கல்கிசை மாநகர சபை உறுப்பினருமான கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன சுட்டிக்காட்டியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், தமது சொந்த மண்ணில் வாழ்ந்த தமிழ் மக்களை வெளியேற்றி அக்காணிகளை இந்தியா மற்றும் அமெரிக்க கம்பனிகளுக்கு விற்பனை செய்வதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இதன் பின்னணியில் இந்தியாவே உள்ளது. அதன் பலத்துடன் தான் இந்த நடவடிக்கைகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது.

தமிழ் மக்களை அழிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கிய இந்தியா இன்று அவர்கள் வாழ்ந்த சொந்தக் காணிகளையும் பறிக்கிறது. வட பகுதியில் சிங்கள மக்களையும் குடியேற்றுவோம் என்ற மாயையை தென்பகுதியில் அரசாங்கம் அரங்கேற்றுகின்றது.

ஆனால், இதில் உண்மையில்லை. இந்திய அமெரிக்க கம்பனிகளுக்கு காணிகளை விற்றுவிட்டு எஞ்சிய காணிகளில் இராணுவத்தினரை குடியேற்றும் திட்டமே முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

உலகின் இரண்டாவது பாலஸ்தீனமாக இலங்கையின் வடபகுதி உருவாகி வருகின்றது. இதற்கு இஸ்ரேலின் உதவியும் பெற்றுக் கொள்ளப்படுகின்றது.

அதற்காகவே இலங்கையில் இஸ்ரேலிய தூதரகம் இரகசியமாக இயங்கி வருகின்றது.

எனவே, தமிழ் மக்களின் மண் மீட்புப் போராட்டத்தை சர்வதேசமயப்படுத்த வேண்டும்.

அதன்மூலம் அரசாங்கத்திற்கு அழுத்தத்தை ஏற்படுத்தி தமிழ் மக்களின் வாழும் உரிமையை உறுதிப்படுத்த வேண்டும். இதற்காகவே நாமனைவரும் இணைந்து போராடுகிறோம். தமிழ் மக்களை தெளிவுபடுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம் என்றார். (8-2)

# மருத்துவ சங்க விண்ணப்பம் நீதிமன்றத்தால் ஏற்பு

(கொழும்பு)

மேற்கத்தைய மருந்துகளை வழங்கவும் மருந்துக் கருவிகளை பயன்படுத்தவும் தாம் அனுமதிக்கப்பட வேண்டுமென கோரும் ஆயுள்வேத வைத்திளர்களின் ஆணை கோரும் மனுவில் தலையீடு செய்யவென இலங்கை மருத்துவக்குழு மற்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் ஆகியன ஒன்றிணைந்து தாக்கல் செய்த இரண்டு விண்ணப்பங்களை மேல்முறையீட்டு நீதிமன்றம் நேற்று முன்தினம் அனுமதித்துள்ளது.

நீதிபதிகள் குழாமில் எஸ். ஸ்ரீஸ்கந்தராசா, தீபாலி விஜேசுந்தர ஆகியோர் காணப்பட்டனர். ஆயுள்வேத வைத்தியர்களின் ஆணை கோரும் விண்ணப்பத்துக்கு ஆட்சேபனை தாக்கல் செய்வதற்கான திகதி எதிர்வரும் ஜூலை மாதம் 16 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டது. (8-2)

# பிரதியமைச்சர் பதவி கிடைக்கும் எதிர்பார்ப்பில் நிஷாந்த முத்துஹெட்டிகம

எதிர்வரும் காலத்தில் தனக்கு பிரதி அமைச்சர் பதவி ஒன்று கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் இருப்பதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நிஷாந்த முத்துஹெட்டிகம தெரிவித்துள்ளார்.

அதன்படி தான் உள்ளிட்ட 4 பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரதி அமைச்சர் பதவிக்காக ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இந்நிலையில் தனது பிரதி அமைச்சர் பதவிக்கோரிக்கையை வாபஸ் பெற்றுக்கொள்வதாக மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சனத் ஜயசூரிய அறிவித்துள்ளார்.

சனத்ஜயசூரிய தனிப்பட்ட காரணங்களுக்காக கோரிக்கையை வாபஸ் பெற்றுக்கொண்டுள்ளதாகவும் ஆனால் பிரதி அமைச்சர் பதவி கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் தான் இன்னும் இருப்பதாகவும் நிஷாந்த முத்துஹெட்டிகம தெரிவித்துள்ளார். (8-2)

# யாழில் டெங்கு பெருக பியர் போத்தல்களும் காரணம்

யாழ். குடாநாட்டில டெங்கு பரவுவதில் முக்கிய பொருட்களாக பியர் டின்கள் மற்றும் மதுப்போத்தல்கள் இடத்தைப் பெற்றுள்ளன. யாழ். குடாநாட்டில் தற்போது எந்தவகையான கட்டுப்பாடுகளும் இன்றி பியர் அதிகளவில் மதுபாவனைக்கடைகள் முதல் ஏனைய கடைகளிலும் பல்வேறு வடிவங்களில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இதனை ஆட்கள் நடமாட்டமற்ற பகுதிகள், வயல்வெளிகள், தோட்டங்கள், கைவிடப்பட்ட காணிகள் மற்றும் இரவு வேளைகளில் வீதி ஓரங்களில் நின்றவாறு இளைஞர்கள் மிகவும் சாதாரணமாக அருந்திவிட்டு வெற்று டின்களை எறிந்துவிட்டு செல்லும் நிலையும் காணப்படுகின்றது.

மிகவும் ஆர்வத்துடன் இளைஞர்கள் பருகி வரும் பியர் டின்கள் மழைக்காலங்களில் நீர் நிரம்பி டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கு காரணமாக அமைவதாகவும் பியர் அருந்துபவர்கள் வெற்று டின்களை பாதுகாப்பாக நீர் தேங்காத வண்ணம் கைவிட வேண்டும் எனவும் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவிக்கின்றனர். (8-2)

# ஐ.தே.கட்சியின் வேட்பாளர் பட்டியல் அடுத்து சில தினங்களில் வெளியிடப்படும்

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய தேசியக் கட்சியின் முதலமைச்சர் வேட்பாளர்கள் சம்பந்தமாக அடுத்த சில தினங்களில் இறுதி முடிவெடுக்கப்படும் என அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

மக்கள் மத்தியில் நம்பிக்கையை வென்றுள்ள நேர்மையான சிலரது பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகவும் அது குறித்து பேச்சுவார்த்தை நடத்தி தீர்மானிக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

மாகாண சபைத் தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொண்டு சகல மாகாண சபைகளை ஐக்கிய தேசியக் கட்சி கைப்பற்றும் வகையில் திறமையான வேட்பாளர்களை கட்சி தேர்தலில் நிறுத்தும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஜே.பி.வி. கலைக்கப்பட்டுள்ள மூன்று மாகாண சபைகளுக்கு நடத்தப்படவுள்ள தேர்தலில் ஜே.வி.பி. போட்டியிடும் என அந்தக் கட்சியின் பிரசார செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பிரச்சினைகளுக்கு மத்தியில் பதில் காண முடியாத அரசாங்கத்திற்கு இம்முறை தேர்தலில் மக்கள் சிறந்த பாடத்தை கற்பிக்க ஒன்றிணைய வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த தேர்தல் அரசாங்கத்தின் அதிகார தேவைக்காக நடத்தப்படுகின்றதே தவிர மக்கள் இந்தத் தேர்தலை நடத்துமாறு கோரவில்லை.

நாட்டில் காணப்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாத காரணத்தினால் அரசாங்கம் பதவிக்காலம் முடியும் முன்னர் மாகாண சபைகளை கலைத்து இந்தக் தேர்தலை நடத்துவதாகவும் விஜித ஹேரத் மேலும் கூறியுள்ளார்.

பதவிக்காலம் முடியும் முன்னர் மாகாண சபைகளை கலைத்து தேர்தல் நடத்துவதன் மூலம் அரசாங்கத்தின் இயலாமையை வெளிக்காட்டியுள்ளதாகவும் ஆளும் கட்சிக்கு வாக்களித்த மக்கள் இதனை நன்கு புரிந்து கொள்ள வேண்டும் எனவும் ஜனநாயக தேசியக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெட்டகொட தெரிவித்துள்ளார்.

நடத்தப்படவுள்ள தேர்தலில் போட்டியிடுவது குறித்து கட்சியின் மத்திய செயற்குழு கூடி முடிவு செய்யும் எனவும் அவர் கூறியுள்ளார். அரசாங்கம் நியாயமான தேர்தலை நடத்தும் என்பதை எண்ணிப் பார்க்க முடியாது.

இயலுமான ஒருவரிடம் ஆட்சியை ஒப்படைத்து விட்டு அரசாங்கம் வீட்டுக்கு செல்ல வேண்டும் எனவும் ஜயந்த கெட்டகொட கூறியுள்ளார். (8-2)

# பாரிய குழப்பத்தில் கல்வித்துறை இருப்பதால் கல்வியமைச்சர்களை பணி நீக்கக் கோரிக்கை

(கொழும்பு)

கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன மற்றும் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க ஆகியோரை பதவிவிலக்குமாறு ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஜே.என்.பி. கட்சி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

நாட்டில் கல்வித்துறையில் பாரிய குழப்பங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சர்கள் பணிநீக்கம் செய்யப்பட வேண்டும் எனவும் ஜே.என்.பியின் சிரேஷ்ட உறுப்பினர் பியசிறி விஜேநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் ஏ. சமரநாயக்கவையும் பணிநீக்க வேண்டுமென அவர் கோரியுள்ளார்.

இசட்புள்ளி தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்த உத்தரவினை கல்வி, உயர்கல்வி அமைச்சர்களும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரும் உதாசீனம் செய்துள்ளதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

நாட்டின் மிகவும் முக்கியமான அமைச்சுப் பொறுப்புக்களுக்கு தகுதியானவர்களை நியமிக்குமாறு அரசாங்கத்திடம் ஜே.என்.பி. கட்சி கோரிக்கை விடுத்துள்ளது. (8-9)

# பெரும்போக அறுவடை முடியும்வரை அரிசி ஏற்றுமதிக்கு அரசாங்கம் தடை

(கொழும்பு)

பெரும்போக பயிர்ச்செய்கை அறுவடை முடியும் வரை அரிசி ஏற்றுமதி தடை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு அமைவாக ஏற்றுமதி- இறக்குமதி கட்டுப்பாட்டாளரால் இத்தடை விதிக்கப்பட்டுள்ளதாக நிதித்திட்டமிடல் அமைச்சு தெரிவித்துள்ளது.

பயன்பாட்டுக்கென பெரும்போக நெல் அறுவடை உள்நாட்டு சந்தைக்கு கிடைக்கப்பெறும் வரை நுகர்வோருக்கு தாங்கிக் கொள்ளக்கூடிய விலைக்கு அரிசி கொள்வனவு செய்ய அரிசி இருப்பில் உள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதனை உறுதிப்படுத்தும் பொருட்டே அரிசி ஏற்றுமதி தடை செய்யப்பட்டுள்ளதாக அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


நெல் விற்பனை சபையின் கீழ் 204, 206 மெற்றிக்தொன் அரிசியும் மாவட்ட செயலாளர் அலுவலகங்களில் 59 ஆயிரத்து 786 மெற்றிக்தொன் அரிசியும் இருப்பில் உள்ளதென நிதி திட்டமிடல் அமைச்சு கூறியுள்ளது. (8-2)

# சிறுமியைக் கடத்தியவர்கள் ஹற்றன் பொலிஸாரால் கைது

சிறுமியொருவரை கடத்திச் சென்றதாகக் கூறப்படும் 11 இளைஞர்கள் ஹற்றன் பொலிஸ் சோதனைச் சாவடியில் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த இளைஞர்கள் வான் ஒன்றில் பயணித்துக்கொண்டிருந்தபோது நேற்று அதிகாலை 4 மணியளவில் கைது செய்யப்பட்டதாக பதில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சஜீவ மெதவத்த தெரிவித்தார்.

சந்தேக நபர்களான குறித்த இளைஞர்கள் மாலபே பகுதியிலுள்ள ஆடைத்தொழிற்சாலையொன்றில் பணியாற்றுகின்றனர். ஹற்றன் வீதிச்சோதனை சாவடியிலிருந்த உத்தியோகத்தர்கள் சந்தேகத்தின் பேரில் வானை சோதனையிட்டதை அடுத்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக புதிய பதில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார். இதன் காரணமாக 16 வயது சிறுமியொருவர் பாதுகாப்பாக காப்பாற்றப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். சிறுமி தற்போது பொலிஸாரின் பாதுகாப்பின் கீழ் வைக்கப்பட்டுள்ளார். சந்தேக நபர்கள் இன்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (8-2)

# கேலிச்சித்திரங்களை கணனியில் வடிவமைக்க



குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை கேலிச் சித்திர வீடியோக்கள் என்றால் பிடிக்கும். இவற்றை கணனியில் உருவாக்குவதற்கு ஒரு மென்பொருள் உதவி புரிகிறது. இதன் பெயர் WEB CARTOON MAKER ஆகும். இந்த மென்பொருளை பயன்படுத்தி கேலிச்சித்திர வீடியோக்களை உருவாக்கி கொள்ளமுடியும். மிக நீண்ட மற்றும் குறுகிய திரைப்படங்கள் மற்றும் வீடியோக்களை இந்த மென்பொருளை பயன்படுத்தி உருவாக்கலாம்.

அத்துடன் வடிவமைக்கப்பட்ட வீடியோக்களுக்கு ஒலி வடிவம் கொடுக்க முடியும். ஒன்லைனிலும் வடிவமைக்க முடியும். இது விண்டோஸ் இயங்குதளத்தில் செயற்படக் கூடியது. இதன் தரவிற்கு முகவரி www.webcartoonmaker.com




# facebook

# அறிமுகப்படுத்தும் கமன்ட் எடிட்டிங் வசதி

சமூக வலைத்தளமான பேஸ்புக் புதிய கமன்ட் எடிட்டிங் ஒப்ஷனை அறிமுகம் செய்துள்ளது. போட்டோ வியூவர் போன்ற பல புதிய வசதிகளை உருவாக்கி கொடுத்த பேஸ்புக் இப்போது கமன்ட் எடிட்டிங் முறையை வழங்குகிறது. முன்பெல்லாம் நெற்றிக் கண் திறப்பினும் குற்றம் குற்றமே! என்பது போல எழுதிய கமன்ட் எழுதியது தான். அதை எடிட் செய்ய முடியாது என்று இருந்தது.

அப்படியே எழுதிய கருத்தினை மாற்ற வேண்டும் என்றால் அந்த கமன்ட்டை டிலீட் செய்து அதன் பின்னர் புதிதாக மீண்டும் கமன்ட் எழுதி போஸ்ட் செய்ய வேண்டி இருந்தது. ஆனால் இனி கமன்ட்களை எடிட் செய்யும் வேலையினை எளிதாக்குகிறது. பேஸ்புக் இதில் அவரவர்களது கருத்துக்களை எடிட் செய்து கொள்ளும் வசதி கொடுக்கப்பட்டுள்ளது.

கமன்ட்டின் பக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் பென்வில் போன்ற குறியீட்டை க்ளிக் செய்தால் போதும். எடிட் அல்லது டிலீட் என்று இரண்டு ஒப்ஷன்கள் இருக்கின்றது. இதில் எடிட் ஒப்ஷனை க்ளிக் செய்து எளிதாக வேண்டிய திருத்தத் தினை செய்யலாம்.

இந்த கமன்ட் எடிட்டிங் வசதி சிலரின் பேஸ்புக் பக்கத்தில் கிடைத்து விட்டது. ஆனால் சிலரது பேஸ்புக் பக்கத்தில் இன்னும் கிடைக்கவில்லை.

எழுதும் கருத்துக்களில் ஏதேனும் தவறிருந்தால் அதை திருத்திக் கொள்ள பயன்படும் இந்த கமன்ட் எடிட்டிங் வசதி பேஸ்புக்கில் அவசியமான ஒன்று தான்.

# கணனியின் வன்பொருள் தகவல்களை அறிய



HWiNF032 என்றமென்பொருளின் மூலம் கணனியில் வன்பொருள் குறித்த தகவல்களை தெரிந்து கொள்ளலாம்.

இந்த மென்பொருளை மிக சிறந்த வகையில் கணனி பயனாளர்களுக்கு ஏற்றவாறு தொழில்நுட்ப வல்லுநர்கள் வடிவமைத்துள்ளனர்.


இதன்மூலமாக பயனாளர்கள் கணனியின் வன்பொருள் குறித்த தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தரவிறக்க சுட்டி

http://download.cnet.com/HWiNF032/3000-20944-10437914.html

# புதிய அம்சங்களுடன் Google தேடல் பொறி

இணையத்தில் தகவல்களைத் தேடித் தருவதில் கூகுள் நிறுவனத்தின் தேடல் சாதனத்தை மிஞ்சுவதற்கு யாருமில்லை. அண்மையில் Knowledge Graph என்ற பெயரில் புதிய தொரு மேம்பாட்டினைக் அது கொண்டு வந்துள்ளது. இதன் மூலம் ஒரு சொல் தரும் பல வகையான முடிபுகளை வகைப்படுத்த முடியும்.




எடுத்துக்காட்டாக TajMahal என அமைத்துத் தேடினால் இது உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மகாலாக இருக்கலாம். அல்லது இசைக் கலைஞனாக இருக்கலாம். ஒரு கேசினோவினைக் குறிக்கலாம். இந்திய உணவு வழங்கும் ஒரு விடுதியாக இருக்கலாம் அல்லது தேயிலையாக இருக்கலாம்.

இவை அனைத்துமே கலந்து தேடலின் முடிவுகளாகக் கிடைக்கும் .எனவே தேடுபவருக்கு தேடல் முடிபுகளின் முதல் பக்க முடிவுகளே அபத்தமாகத் தெரியும்.


இந்தப் பிரச்சினைக்கு முடிபு காணும் வகையில் Knowledge Graph என்ற தொழில் நுட்பத்தினை கூகுள் கொண்டு வந்துள்ளது. இதன்படி ஓர் இணைய தளத்தினை எந்த வகையில் கொண்டு செல்லலாம் என 350 கோடி வகைகளை உருவாக்கியுள்ளோம். இதில் ஒன்றில் ஓர் இணையத்தளம் வகைப்படுத்தப்படும். தேடுபவர்கள் தங்களின் தேடலை இடுகையில் கூகுள் அதன் தேடல் முடிபுகளுடன் சில பட்டன்களை காட்டும். இந்தப் பட்டன்களை அழுத்தி குறிப்பிட்ட வகைத் தளங்களை மட்டும் காட்டும்படி அமைத்திடலாம். இன்னும் போகப் போக தேடுபவரின் விருப்பம் இல்லாம லேயே தளங்கள் வகைப்படுத்தப்பட்டு அமைக்கப்படும். அதேபோல குறிப்பிட்ட பயனாளர் இதற்கு முன்னர் தேடிய தேடல்களின் அடிப்படையிலும் ஓர் இணையத்தளம் வகைப்படுத்தப்படும்.

எடுத்துக்காட்டாக ஒரு பயனாளர் தாஜ் மஹால் என்ற சொல்லின் மூலம் ஒரு இசைக் கலைஞரை முன்பு தேடி இருந்தால் இந்த வகையில் உள்ள தளங்கள் மட்டும் முதலில் அவருக்கான முடிவுகளாகப் பட்டியலிடப்படும். அவர் உலக அதிசயங்களைத் தேடி இருந்தால் தாஜ்மஹால் குறித்த தளங்கள் முதலில் காட்டப்படும்.

கூகுள் இன்னொரு தொழில்நுட்ப வசதியும் தரவுள்ளது. இதனை summary box என ஆங்கிலத்தில் அழைக்கலாம். கணனி பயனாளர் ஒருவர் தேடலை மேற்கொள்கையில் ஒருவரைப்பற்றி அறிய முற்படுகையில் அவர் குறித்த சில சிறப்பு செய்திகள் வலது பக்கம் ஒரு கட்டத்தில் பட்டியலிடப்படும்.பல வேளைகளில் இந்த கட்டத்தில் காட்டப்படும் தகவல்களே தேடு பவர்களுக்கான எதிர்பார்ப்பினை நிறைவேற்றுபவையாக இருக் கும்.சில வேளைகளில் இந்த பட்டியல் சில தளங்களுக்கு எதிர் மறையாகவும் இருக்கும் எனவும் அதனால் தங்கள் தளங்களுக்கு வருகை புரிபவர்களின் எண்ணிக்கை குறையும் என்றும் சில இணையத்தள நிர்வாகிகள் குறை சொல்லி உள்ளனர்.

• பலர் இந்தச் செய்திகளைப் பார்த்தவுடன் மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் பிங் தேடல் சாதனத்தில் சில கூறுகளைத் தன் தேடல் தளத்திலும் கொண்டு வர கூகுள் எடுக்கும் முயற்சிகளே இவை எனக் கூறி உள்ளனர்.இந்தப் புதிய வசதிகள் குறித்து அறிய http://googleblog. blogspot.in/2012/05/introducing- knowledge- graph- things-not.html என்ற முகவரியை நாடலாம்.

# விண்டோஸ் 8




மைக்ரோசொப்ட் நிறுவனம் சோதனை பதிப்பாக விண்டோஸ் 8 ஐ வெளியிட்டுள்ளது.

பயனிட்டாளர்கள் இதை நிறுவி இதில் உள்ள நிறை குறைகளை மைக்ரோசொப்ட் நிறுவனத்துக்கு தெரிவிக்க்லாம். முதல் முயற்சியாக விண்டோஸ் 8 ஐ ARM பிராச்சர் வன் பொருட்களிலும் இயங்குமாறு வடிவமைத்துள்ளனர். தற்போது இருக்கும் செல்பேசி சாதனங்களிலும் விண்டோசின் பயன்பாட்டை அதிகரிக்கவே இந்த முயற்சி என்று சொல்லலாம்.

விண்டோஸ் 8 ஐ செல்பேசி சாதனங்களில் நிறுவினால் அத்துடன் மைக்ரோசொப்ட் ஆபிஸ் மென்பொருட்களான வேர்டு, எக்சல், பவர் பொயின்டு இலவசமாக கிடைக்க வழி வகை செய்துள்ளனர்.

விண்டோஸ் 8 ன் வடிவமைப்பில் பெரும்பாலும் கிளவ்டு கம்ப்யூட்டிங் மற்றும் தொடு திரை கணனிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. விண்டோஸ் 8 உடன் இன்டர்நெட் எக்ஸ்புளோரர் 10 யும் அவர்கள் வெளியிட்டுள்ளனர்.

# மனிதனின் தீய பழக்கங்களை மாற்ற முயலும் இணையத்தளம்




மனிதன் ஏதாவது கெட்டபழக்கத்துக்கு அடிமையாகி விட்டால் அதில் இருந்து வெளியே வருவது என்பது மிக மிக கடினமான காரியம் என்று நினைத்திருக்கும் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தும்படி 21 நாட்களில் மனிதன் தன்னிடம் இருக்கும் அனைத்து குறைகளையும் ஒவ்வொன்றாக நீக்க உதவுகிறது ஒரு தளம்.

குடிப்பழக்கம் மட்டும் கெட்டபழக்கம் என்று சொல்வதைவிட பொய் சொல்வதும் கெட்டபழக்கம் தான். இதுபோன்ற அனைத்து கெட்டப்பழக்கத்தையும் 21 நாட்களில் நீக்க நமக்கு உத்வேகத்தையும் நம்பிக்கையையும் கொடுக்க ஒரு தளம் உள்ளது. இதைப்பற்றி இனி விரிவாக பார்க்கலாம்.

இணையத்தள முகவரி: http://21habit.com

இத்தளத்திற்கு சென்று நாம் வலது பக்கம் மேல் இருக்கும் Signup என்ற பொத்தானை சொடுக்கி புதிதாக ஒரு கணக்கு இலவசமாக உருவாக்கி கொள்ள வேண்டும். அடுத்து முழு நம்பிக்கையுடன் ஒவ்வொரு நாளும் சென்று இன்று நான் சிகரெட் பிடிக்கவில்லை. அல்லது இன்று நான் மது அருந்தவில்லை என்று ஒவ்வொரு நாளும் நாம் கெட்டப்பழக்கத்தைவிட்டு நீக்கியதை இங்கு தெரியப்படுத்தலாம். 21 நாட்களில் நாம் கெட்டபழக்கங்களை விட வேண்டும் என்று ஒரு தளம் முயற்சி செய்வதோடு மட்டுமல்லாமல் ஒவ்வொரு நாளும் நம்பிடம் கேட்கும் இந்தத்தளத்திற்கு உண்மையாக நடந்து கொண்டாலே நாம் எந்த கெட்டபழக்கத்தையும் விடலாம் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

21 habit
Invest in yourself

நிதானமாக ஆலோசியுங்கள். ஆனால் துணிவுடன் செயல்படுங்கள் *- சார்லஸ் கோல்ட்டன்*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# ஐந்து பிள்ளைகளுக்கு குறையாமல் பெற்றெடுக்குக

காரைநகரில் கடந்த நாற்பது வருடங்களுக்கு முன்னர் நடந்த சம்பவம் இது. சேமன் விஸ்வலிங்கம் என்பவர் காரைநகர் கிராம சபைத் தலைவராக இருந்தார்.

குடும்பக் கட்டுப்பாட்டை வலியுறுத்தும் கூட்டமொன்று சுகாதாரத் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அந்தக் கூட்டத்திற்கு கொழும்பில் இருந்தும் அதிகாரிகள் வந்திருந்தனர்.

குடும்பக் கட்டுப்பாடு தொடர்பாக நடந்த அந்தக் கூட்டத்திற்கு சேமன் விஸ்வலிங்கம் தலைமை தாங்கினார்.

தலைமை உரை ஆற்றிய அவர், குடும்பக் கட்டுப்பாடு என்பதை நாம் ஆதரிக்கக் கூடாது. குடும்பக்கட்டுப்பாட்டை ஆதரித்தால் எங்கள் இனம் மிகவும் சிறுபான்மையாகி விடும். எனவே தமிழர்களாகிய நாங்கள் எங்கள் இனத்தைப் பெருக்க வேண்டும் என்று கூறித் தனது உரையை தொடர்ந்தார்.

கூட்டத்தில் ஒரே குழப்பம். குடும்பக் கட்டுப்பாட்டை ஆதரிக்கும் கூட்டத்தில் சேமன் விஸ்வலிங்கம் இவ்வாறு பேசுவது மேடையில் இருந்த சுகாதாரத் திணைக்கள அதிகாரிகளுக்குப் பெரும் சிரமத்தை ஏற்படுத்தி விட்டது.

உடனடியாக அங்கிருந்த சுகாதார வைத்திய அதிகாரி ஒரு குறிப்பை எழுதி சேமனுக்கு அனுப்பினார்.

ஐயா! இது குடும்பக் கட்டுப்பாட்டை ஆதரிக்கின்ற கூட்டம். ஆனால் நீங்கள் குடும்பக் கட்டுப்பாட்டை எதிர்க்கிறீர்கள். இது கூட்டத்தில் சங்கடத்தை ஏற்படுத்துகின்றது என அந்தக் குறிப்பு அமைந்திருந்தது.

குறிப்பை வாசித்த சேமன் விஸ்வலிங்கம் கூட்டத்தை குழப்புவது அழகல்ல என்று எண்ணி,

அன்பர்களே! இவ்வளவு நேரமும் நான் பேசியது தவறு. இனிமேல் தான் நான் சரியாகப் பேசப் போகிறேன் என்று கூறி குடும்பக் கட்டுப்பாட்டை ஆதரித்துப் பேசினார்.

சேமன் விஸ்வலிங்கம் தானாக உணர்ந்து பேசியதன் உண்மைத் தன்மையின் அவசியத்தை நாம் உணர்ந்து கொள்வதற்கு நாற்பது வருடங்கள் ஆயிற்று.

எனினும் இப்போதாவது எங்கள் இனத்தின் பெருக்கம் குறித்து நாம் அசமந்தமாக இருந்தால் நிலைமை மிகவும் மோசமாகும்.

இன விகிதாசாரத்தின் அடிப்படையில் எல்லாம் நடந்து கொண்டிருக்கும் போது, நாம் இருவர்; நமக்கு ஒருவர் என்ற நிலை நீடித்தால், இலங்கையில் தமிழர்கள் வாழ்ந்தார்களா? என்று எப்போதாவது ஒரு காலத்தில் ஆய்வு நடத்த வேண்டியிருக்கும் என்பது உண்மை.

இலங்கையின் ஆதிக் குடிகள் தமிழர்கள் தான் என்ற வரலாற்று ஆதாரங்கள் இருக்கின்ற போதிலும் நாம் இரண்டாம் தரப் பிரஜைகளாக ஆக்கப்பட்டிருக்கும் இந்த நாட்டில், எங்கள் இனம் சுருங்கிக் கொள்ளுமாயின் எங்கள் சந்ததிக்கான எதிர்காலம் மிகவும் பாதகமாகவே இருக்கும்.

எனவே தமிழ் இளம் குடும்பங்கள் ஐந்து பிள்ளைளுக்குக் குறையாமல் பெற்றெடுக்க வேண்டும் என்ற பிரசாரம் முன்னெடுக்கப்படுவது அவசியம்.

இதனை ஊக்குவிப்பதற்கான அமைப்புகள் உதயம் பெற்றால் அது தமிழினத்திற்குப் பேருதவியாக அமையும்.

# அரசியல் கைதிகளின் புனர்வாழ்வை மனோ கணேசன் கண்காணிப்பார்

(கொழும்பு)

சிறைவாழ்க்கை வாழும் தமிழ் அரசியல் கைதிகளுக்கு, அவர்களது சுய விருப்பின் அடிப்படையில் புனர்வாழ்வு அளிக்கும் திட்டத்தை நாம் கண்காணிப்போம் என மக்கள் கண்காணிப்பு குழு ஏற்பாட்டாளரும், ஜனநாயக மக்கள் முன்னணி தலைவருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

தீர்ப்பு வழங்கப்பட்டவர்கள், வழக்குத் தாக்கல் செய்யப்பட்டவர்கள், விசாரணை மட்டத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் ஆகிய மூன்று பிரிவினரும் சுய விருப்பின் அடிப்படைகளில் இந்த புனர்வாழ்வுதிட்டத்தில் உள்வாங்கப்பட வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

அரசின் புதிய நடவடிக்கைகள் தொடர்பில் ஊடகங்களுக்கு உடனடியா கருத்து தெரிவித்த மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

வவுனியா, அனுராதபுரம், மன்னார் ஆகிய இடங்களில் விசேட நீதிமன்றங்கள் அமைத்து கைதிகளின் வழக்குகளை துரிதப்படுத்த போகிறோம் என்று அரசு சொன்னதை நாம் முழுமையாக நிராகரித்திருந்தோம்.

இது காலம் கடத்தும் செயல் என்பது எமக்கு வரலாற்று ரீதியாக தெரியும். இன்று அந்த விசேட நீதிமன்ற திட்டத்தை அரசு கைவிட்டுள்ளதாக தெரிகிறது. இது வரவேற்கத்தக்கது. இது எமது உறுதியான எதிர்ப்புக்கு கிடைத்த வெற்றி.

அதேவேளையில், எமது நிலைப்பாடு அனைத்து கைதிகளுக்கும் பொது மன்னிப்பு வழங்கப்பட வேண்டும் என்பதாகும். இதில் எந்தவிதமான மாற்றமும் கிடையாது.

ஆனால் கைதிகளின் சுயவிருப்பத்தின் பேரில் அவர்களுக்கு ஒருவருட காலத்திற்கு உட்பட்ட கால வரையறையுடன், புனர்வாழ்வு அளிக்கப்பட்டு அவர்கள் அவர்களது குடும்பங்களுடன் சேர்க்கப்படுவார்கள் என்றால் அதை நான் ஆட்சேபிக்கப் போவதில்லை.

இந்தப் புனர்வாழ்வு திட்டத்தை மக்கள் கண்காணிப்பு குழு கண்காணிக்கும். நாடு முழுக்க வாழும் அரசியல் கைதிகளின் குடும்ப அங்கத்தவர்கள் இது தொடர்பில் உடனடியாக எம்முடன் தொடர்புகளை ஏற்படுத்தும்படி கேட்டுக் கொள்கிறேன் என்றார். (ஏ-11)

# வெளிநாடுகளுக்கு அரிசி ஏற்றுமதியை இடைநிறுத்துமாறு ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

நாட்டில் பெரும்போகப் பயிர்ச் செய்கையின் நெல் அறுவடை நடைபெறும் வரையில், வெளிநாடுகளுக்கு அரிசி ஏற்றுமதி செய்வதை இடைநிறுத்துமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார் என வர்த்தக மற்றும் நுகர்வோர் அமைச்சு தெரிவித்துள்ளது.

விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவு செய்வதற்காக 410 கோடி ரூபாயினையும் அவற்றைக் களஞ்சியப்படுத்தும் செலவுக்காக 470 கோடி ரூபாயினையும் அரசாங்கம் செலவிட்டு வருகின்றது.

அரிசி ஏற்றுமதியை இடைநிறுத்துவதன் மூலம் நாட்டில் போதுமானளவு அரிசி களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கும் என்றும் அரிசியின் விலை குறைய வாய்ப்பு ஏற்படும் என்றும் வர்த்தக மற்றும் நுகர்வோர் அமைச்சு தெரிவித்துள்ளது. (ஏ-11)

# அடுப்பு பற்றியதில் குடும்பப் பெண் காயம்

(யாழ்ப்பாணம்)

மண்ணெண்ணெய்க்குள் பெற்றோல் கலக்கப்பட்டதனை அறியாத குடும்பப் பெண் அதனைஅடுப்புக்குள் ஊற்றி எரிக்க முற்பட்ட போது அடுப்பு பற்றியதில் குறித்த பெண் எரிகாயங்களுக்கு உள்ளாகினார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் ஒரு மணியளவில் கிளிநொச்சி ஊற்றுக் குளத்தில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதேயிடத்தினைச் சேர்ந்த தேவராசா உதயசோதி (வயது 33) என்ற பெண்ணே எரிகாயங்களுக்கு உள்ளானவராவார்.

குறித்த பெண் மதியம் சமையலுக்காக அடுப்பை எரிப்பதற்கு மண்ணெண்ணெய் ஊற்றி பற்ற வைக்க முனைந்துள்ளார்.

இதன்போது அடுப்பு பற்றி எரிந்ததில் குறித்த பெண்ணின் முகம் முழுவதும் எரிந்து கருகிய நிலையில் கிளிநொச்சி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உள்ளார். (ஏ-4)

# நியமனம் பற்றிய கலந்துரையாடல்

உயர்தேசிய கணக்கியல், முகாமைத்துவம் மற்றும் வர்த்தக டிப்ளோமா பட்டதாரிகளிற்கான நியமனம் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயும் கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ் உயர்தொழில்நுட்ப நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ் மாவட்ட உயர் தேசிய கணக்கியல், முகாமைத்துவ மற்றும் வர்த்தக பட்டதாரிகள் சங்கம் அறிவித்துள்ளது. (ஏ)




எமது உடலில் உள்ள ஐம்பொறிகளும் எமது கட்டுப்பாட்டில் இருப்பின் எமது செயற்பாடுகளும் ஒழுங்காயிருக்கும். சிந்தை, செய்கை, கேள்வி, வாக்கு என்பவற்றின் சிறப்புக்கும் ஐம்பொறிகளின் செயற்பாடு தேவை. பொறிவழிப்புலன்களின் ஒத்துழைப்பு நடைபெறுகிறது. கண், காது, மூக்கு, வாய், மெய் என்னும் ஐம்பொறிகளால் பார்வை, கேள்வி, நுகர்வு, பேச்சு, தொடுகை என்னும் செயற்பாடுகள் நடைபெறுகின்றன. ஆனால் இச்செயற்பாடுகள் ஒழுங்காக நடைபெறாவிட்டால் பல விளைவுகளைச் சந்திக்க நேரிடும். மணிவாசகர் ஒரு பாடலிலே இதைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட காலத்தில் ஐம்பொறிகளின் சீரற்ற செயற்பாட்டால் தான் மூர்க்கனாயிருந்ததாகக் குறிப்பிடுகின்றார். இறைவனை அடைவதற்குரிய தவத்தை அவரால் செய்யமுடியவில்லை. புலன் அடக்கும் திறனற்றவராக இருந்தார். மேலும் இறைவனை அடைய முடியாமையால்தீயில்விழுந்து என்உடலை நான் அழிக்கவும் இல்லை. நின்னுடைய பிரிவினால் உள்ளம் வெட்கி உடைந்து நான் இறக்கவுமில்லை. இன்னமும் நின்னை அடைவதற்கு முயன்று கொண்டிருக்கிறேனே! எனப் புலம்புகின்றார்.

தன்பிழையை உணர்ந்த மணிவாசகர் உலகியல் நிலை நின்று துன்பப்படுகிறார். இறைவாழ்வைப் பற்றிச் சிந்திக்காமல் உலக வாழ்வு பற்றிய சிந்தனையோடிருந்ததை எண்ணி வருத்தப்படுகிறார். தன்னை மூர்க்கன் என்கிறார். முத்தி நெறியறியாதவர்களை மூர்க்கரென அவருடைய பாடலிலே குறிப்பிட்டுள்ளார். தன்னையும் அக்கூட்டத்திலே சேர்த்துக்கொள்கிறார். மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா என்ற பழமொழியும் வழக்கிலுண்டு. உலக வாழ்வியலில் மீண்டும் பற்றுக்கொண்டுவாழ்ந்ததையெண்ணி அவர் வருந்துவது அவருடைய உள்ளத் தூய்மையைப் புலப்படுத்துகிறது. தனது உண்மையான நிலையை ஒளியாமற் கூறும்போதும் தவறை ஒத்துக் கொள்ளும் நேர்மை புலப்படுகிறது. தன்னுடைய தவறுக்குப் பிறரைக் காரணம் காட்டாது தன்னுடைய செயற்பாட்டையே காரணம் காட்டும் பணிவுடைமையே பக்தியின் சிறப்பான வெளிப்பாடாகும்.

இன்னும் செய்த தவறை எண்ணி வெட்கப்படாத தன்மையையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தன்னைத் தானே மாய்த்துக்கொள்ளவேண்டும் என்ற வைராக்கிய உணர்வும் அவருக்கு ஏற்படவில்லை.

உலக வாழ்க்கைமீது அவருக்கிருந்த பற்றுக்குறைவுபடாமையால் இறக்காமல் இருப்பதை உணர்கிறார். அவருடைய தூய எண்ணம் நடந்தவற்றை மீளவும் ஒருமுறை தெளிவாக நோக்குகிறது. தனது பலவீனத்தை நன்கு உணர்ந்தமையால் மேலும் இறைவனடிகளைச் சென்று சேரமுயன்று கொண்டிருப்பதைப் பாடலாசிரியர் இறைவனுக்கு விண்ணப்பம் செய்கிறார்.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

எந்தையாய நின்னை நான்அடைய நீயே அருள் செய்ய வேண்டும் என இரங்கி நிற்கிறார். தன்னுடைய நிலையில் உதவி செய்ய வேறுயாரும் இல்லையென்பதைச் சுட்டிக்காட்டுகிறார்.

மனித நிலையில் இறையருள் பெறுவதற்கு ஒளிவு மறைவற்ற பூரண சரணாகதி வேண்டும். மனதில் கள்ளம் இன்றித் தூய்மையாகச் செயற்பட்டால் வேண்டிய வேண்டியாங்கு எய்த முடியும். மனித வாழ்வியல் தடம்புரளும் இவ்வேளையில் மணிவாசகர் பாடல்கள் ஒளிகாட்டி நிற்கின்றன.

**சிந்தை செய்கை கேள்வி வாக்குச்**
**சீரில் ஐம்புலன்களால்**
**முந்தையான காலம் நின்னை**
**யெய்திடாத மூர்க்கனேன்**
**வெந்தை யாவிழுந்திலேன் என்**
**உள்ளம் வெள்கி விண்டிலேன்**
**எந்தை யாய நின்னை யின்னம் எய்த**
**லுற்றிருப்பனே**

# மதிப்பு மிகுந்தவர் டோனி



பல சாதனைகளை செய்துள்ள இந்திய கிரிக்கெட் அணியின் அணித்தலைவர் மஹேந்திர சிங் டோனிக்கு தற்போது புதிய பெருமை கிடைத்துள்ளது. பிரிட்டனைச் சேர்ந்த ஸ்போர்ட்ஸ் புரோ என்ற மாத நாளிதழ் சந்தை மதிப்பு மிகுந்த உலகின் 50 வீரர்கள் பட்டியலை வெளியிட்டுள்ளது. வீரர்களின் வயது உள்ளூரில் அவர்களுக்குள்ள மதிப்பு, வசீகரம், பண மதிப்பு உள்ளிட்ட பல காரணிகளை வைத்து இந்தப் பட்டியல் உருவாக்கப்பட்டுள்ளது.

இப்பட்டியில் இந்திய கிரிக்கெட் அணியின் அணித்தலைவர் மஹேந்திர சிங் டோனிக்கு 16 ஆவது இடம் கிடைத்துள்ளது.அதேபோல இந்திய குத்துச் சண்டை வீராங்கனையும் 5 முறை உலக சம்பியன் பட்டத்தை வென்ற வருமான மேரி கோமுக்கு இப்பட்டியலில் 38 ஆவது இடம் கிடைத்துள்ளது. இந்தப் பட்டியலில் முதலிடத்தில் பிரேசில் நாட்டு காற்பந்து வீரர் நெய்மரும் 2 ஆவது இடத்தில் ரோரி மெக்கில்ராயும் உள்ளனர்.

# இந்திய கிரிக்கெட் சபை உலக நலனை சிந்திக்க வேண்டும்



இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை தனிப்பட்ட நலன்களை மறந்து உலக கிரிக்கெட் நலன் தொடர்பில் சிந்திக்க வேண்டும் என இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும் வர்ணனையாளருமான டொனி கிரே தெரிவித்துள்ளார்.

லோட்ஷில் இடம்பெற்ற கிரிக்கெட் விவரண நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் வாரியம் நேற்று முன்தின நடுவர்களின் தீர்ப்பினை மறுபரிசீலனை செய்யும் திட்டத்தை அங்கீகரிப்பதாக அறிவித்திருந்தது.

எனினும் இந்தியா இதற்கு எதிர்ப்பை வெளியிட்டிருந்தது. இது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள டொனி கிரே, இந்திய கிரிக்கெட் சபை தமது சுயநலனுக்காகவும் வர்த்தக பங்காளிகளுக்காகவும் மாத்திரம் சிந்திக்கக்கூடாது என குறிப்பிட்டுள்ளார்.



தேசிய இளைஞர் சேவை மன்றத்தினரால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட வலைப் பந்தாட்டப் போட்டியில் யா/தெல்லிப்பழை யூனியன் கல்லூரி சம்பியனாகியுள்ளது. வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் உள்ளிட்ட அதிகாரிகளுடன் இவ்வணியினர் நிற்பதைப் படத்தில் காணலாம். (N.குமார்)




# வடமாகாண கபடி போட்டி முடிவுகள்

(பூந்தோட்டம்)

வடமாகாண பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற கபடிப் போட்டி முடிவுகளை வடமாகாண கல்வித் திணைக்களத்தின் மாணவர் அபிவிருத்தி உதவிக் கல்விப்பணிப்பாளர் கே.சத்தியபாலன் அறிவித்துள்ளார்.இப்போட்டியில் வெற்றியீட்டிய பாடசாலைகளின் பெயர் விபரம் வருமாறு ,

**15 வயதுக்குட்பட்டோர்**

**ஆண்கள்**

வவு/ பரகும் மகா வித்தியாலயம், மன்/ சென். பற்றிமா மத்திய மகா வித்தியாலயம், யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.

**பெண்கள்**

யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்,யா/ சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, வவு/ பூவரசன் குளம்மகா வித்தியாலயம்

**19 வயதுக்குட்பட்டோர்**

**ஆண்கள்**

யா/ கென்றிஸ் கல்லூரி, யா/ வேலாயுதம் மத்திய மகா வித்தியாலயம்,மன் / சேவியார் ஆண்கள் கல்லூரி

**பெண்கள்**

கிளி/சிவநகர் அ.த.க.பாடசாலை, வவு/ கணேஸ்வரா மகா வித்தியாலம், யா/ இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம். (2-9-266)

# உதைபந்தாட்டப் போட்டி



பூநகரி மத்திய நண்பர்கள் விளையாட்டுக் கழகம் நடத்தும் நண்பர்கள் விளையாட்டுக் கழகத்தின் ஆரம்பகால விளையாட்டு வீரர்களான விஜிதரன், ரஜிகாந்தன், குகதாஸன் ஆகியோரின் நினைவாக நடத்தப்படும் மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி எதிர்வரும் மாதம் 6, 7,8 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

விண்ணப்பங்கள் அனைத்தினையும் நாளை சனிக்கிழமைக்கு முன் பூர்த்தி செய்து ஒப்படைக்குமாறு ஏற்பாட்டாளர்களால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

முதலாம் பரிசு 10 ஆயிரம் ரூபாவும் விஜிதன் ஞாபகார்த்த சுற்றுக் கேடயமும் இரண்டாம் பரிசு 7 ஆயிரத்து ஐந்நூறு ரூபாவும் ரஜிகாந் தன் ஞாபகார்த்த சுற்றுக் கேடயமும் மூன்றாம் பரிசாக குகதாஸன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணமும் சிறந்த விளையாட்டு வீரருக்கும் சிறந்த விளையாட்டுக் கழகத் திற்கும் வெற்றிக் கிண்ணம் பரிசாக வழங்கப்படவுள்ளது.

# வல்வை அணி வெற்றி



புத்தூர் ஸ்ரீவிக்னேஸ்வரா விளையாட்டு கழகத்தின் 50 ஆவது ஆண்டு பொன்விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் நவிண்டில் கலைமதி அணியைத் தோற்கடித்து வல்வை விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

இவ் உதைபந்தாட்டப் போட்டி நேற்று முன்தினம் புதன்கிழமை பி.ப. 4 மணிக்கு புத்தூர் ஸ்ரீ விக்னேஸ்வரா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

மிக விறுவிறுப்பாக நடைபெற்ற இப் போட்டியில் போட்டி ஆரம்பித்து மூன்று நிமிடத்தில் வல்வை விளையாட்டுக்கழக அணி கோல் ஒன்றைப் போட்டது. பின்னர் இரு அணிகளும் எவ்வித கோலையும் போடாததால் 1:0 என்ற கோல்க்கணக்கில் வல்வை விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.



தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் சாவகச்சேரி பிரதேச இளைஞர் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கிரிக்கெட் போட்டியில் ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்ட வீரருக்கு வெற்றிக் கிண்ணத்தினை தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் வடமாகாண பணிப்பாளர் திருமதி விமலேஸ்வரி ஸ்ரீகாந்தரூபன், யாழ். மாவட்ட உதவி இயக்குநர் த.ஈஸ்வரராஜா ஆகியோர் இணைந்து வழங்குவதையும் சாவகச்சேரி பிரதேச உதவி செயலர் செல்வி றஞ்சனா நவரட்ணம் வெற்றி பெற்ற வீராங்கனைக்கு வெற்றிக் கிண்ணம் வழங்குவதனையும் படங்களில் காணலாம். (படங்கள்: தனங்களப்பு செய்தியாளர்)

# இலங்கை பிரிமியர் லீக் 7 அணிகளையும் இந்திய நிறுவனங்களே வாங்கின!




இலங்கை பிரிமியர் லீக் எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த இருபது-20 போட்டித் தொடர் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 10ஆம் திகதி கோலாகலமாக ஆரம்பமாகவுள்ளது.

இத் தொடரின் இறுதிப் போட்டி ஒகஸ்ட் 31ஆம் திகதி நடைபெற இருக்கிறது.

இந்தியாவில் கடந்த 2008இல் ஆரம்பிக்கப்பட்ட இந்தியன் பிரிமியர் லீக் எனப்படும் ஐபிஎல் இருபது-20 கிரிக்கெட் போட்டிகள் சர்வதேச அளவில் பிரபலமானதை அடுத்து ஒவ்வொரு நாடும் தங்களது நாட்டில் இதே போன்ற இருபது-20 கிரிக்கெட் போட்டிகளை நடத்தத் தொடங்கியுள்ளன.

அவுஸ்திரேலியா, இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகள் இதுபோன்ற போட்டிகளை நடத்தி வரும் நிலையில் தற்போது இலங்கையும் இதன் வரிசையில் சேர்ந்துள்ளது.

இப்போட்டியில் இலங்கையின் உள்ளூர் அணிகளான வயம்ப, கந்துரட்ட உள்ளிட்ட ஏழு அணிகள் பங்கேற்கின்றன. இப்போட்டியில் விளையாட இருக்கும் இலங்கை அணி வீரர்களின் ஏலம் எதிர்வரும் யூலை 5 மற்றும் 6 ஆகிய திகதிகளில் நடைபெற இருக்கிறது.

ஒவ்வொரு அணியிலும் 18 வீரர்கள் இருக்கலாம். அதில் 6 பேர் வெளிநாட்டை சேர்ந்த வீரர்களாக இருக்கலாம். விளையாடும் 11 பேர் கொண்ட அணியில் உள்ளூர் வீரர்கள்9 பேரும், வெளிநாட்டு வீரர்கள் 2 பேரும் இடம் பெறலாம். இத்தொடரின் போட்டிகள் அனைத்தும் கொழும்பு மற்றும் பல்லேகல ஆகிய இடங்களில் நடைபெற இருக்கிறது.

இதில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால் இந்த ஏழு அணிகளையும் இந்தியாவை சேர்ந்த தொழிற்துறை மற்றும் விளையாட்டுத்துறை நிறுவனங்களே வாங்கியிருக்கின்றன.

இதில் மற்றொரு குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால் இந்த கிரிக்கெட் தொடரில் இந்திய வீரர்கள் யாரும் கலந்து கொள்ளக் கூடாது என்று இந்திய கிரிக்கெட் சபை அறிவுறுத்தியிருப்பதுதான்.




# யூரோ கால்பந்து: இறுதிப்போட்டியில் ஸ்பெயின்; பனால்டி உதையில் வெளியேறியது போர்த்துகல்

(போனட்ஸ்கி)

14-வது யூரோ கிண்ண கால்பந்து தொடரின் காலிறுதி ஆட்டங்களின் முடிவில், போர்த்துக்கல், ஸ்பெயின், இத்தாலி, ஜேர்மனி ஆகிய அணிகள் அரையிறுதிக்கு தகுதி பெற்றன.

போலாந்து மற்றும் உக்ரைன் ஆகிய நாடுகள் இணைந்து நடத்தும் இத் தொடரின் முதலாவது அரையிறுதி ஆட்டம் டோனட்ஸ்க் நகரிலுள்ள் டான்பாச் அரினா மைதானத்தில் நடந்தது.

இப் போட்டியில் போர்த்துக்கல் அணி நடப்பு யூரோ சம்பியன் மற்றும் நடப்பு உலக சம்பியனான ஸ்பெயின் அணியுடன் மோதியது.

இப் போட்டியின் ஆரம்பம் முதலே இரு அணியினரும் ஆக்ரோஷமாக ஆடினர்.

குறிப்பாக போர்த்துக்கல் அணியின் தலைவரும் நட்சத்திர வீரருமான கிறிஸ்டியானோ ரொனால்டோவின் ஆட்டத்தில் அனல் பறந்தது.

சக வீரர்களான ஜோவோ பெரீரா, கோயண்ட்ராவோ, மௌடின்ஹோ ஆகியோர் ரொனால்டோவுக்கு சிறந்த முறையில் ஒத்துழைப்பு அளித்தனர்.

எனினும் ஸ்பெயின் வீரர்களும் சிறப்பாக ஆடியதால் போர்த்துக்கல் அணியினரால் எளிதாக கோல் அடிக்க இயலவில்லை.

ஸ்பெயின் அணியின் தலைவரும், கோல் காப்பாளருமான இகர் கோஸில்லாஸ் சிறப்பாக செயல்பட்டு போர்த்துக்கல் வீரர்களின் அனைத்து முயற்சிகளுக்கும் முட்டுக் கட்டை போட்டார். இதனால் முதல் பாதியின் முடிவில் கோல் எதுவும் அடிக்கப்படவில்லை.

ஆட்டத்தின் இரண்டாவது பாதியும் ஆரம்பம் முதலே விறுவிறுப்பாக நடந்தது. ரொனால்டோவின் ஆட்டத்துக்கு ஈடுகொடுத்து ஆடிய ஸ்பெயின் வீரர்கள் போர்த்துக்கல் வீரர்கள் கோல் அடிக்க விடாமல் செய்தனர்.

விறுவிறுப்பாக ஆடிய இரு அணி வீரர்களும் ஒவ்வொரு நிமிடமும் ஒருவரையொருவர் மோதிக் கொண்டு தரையில் விழுந்தனர். போர்த்துக்கல் தலைவர் ரொனால்டோ தனக்குக் கிடைத்த ப்ரி கிக் வாய்ப்புக்களை தொடர்ந்து வீணடித்தார்.

90 நிமிடங்களின் முடிவிலும் கோல் எதுவும் அடிக்கப்படாததால், கூடுதல் நேரம் வழங்கப்பட்டது. கூடுதல் நேரம் வழங்கப்பட்டது. கூடுதலாக வழங்கப்பட்ட 30 நிமிடங்களிலும் இரு அணியினராலும் கோல் அடிக்க இயலவில்லை. இம்முறையும் ஸ்பெயின் அணியினராலும் தங்களுக்கு கிடைத்த சில அருமையான வாய்ப்புக்களை தவறவிட்டனர்.

இறுதியில் போட்டியின் முடிவை நிர்ணயிப்பதற்காக பெனால்டி ஷூட் அவுட் வழங்கப்பட்டது.

முதலாவது பெனால்டி ஷூட் வாய்ப்பில் ஸ்பெயின் வீரர் சவி அலன்சோ கோல் அடிக்கத் தவறினார். அவரது முயற்சியை போர்த்துக்கல் கோல் காப்பாளர் அருமையாகத் தடுத்தார். போர்த்துக்கல் அணியும் தமக்கு கிடைத்த முதலாவது வாய்ப்பை தவறவிட்டது.

2-வது வாய்ப்பை ஸ்பெயின் வீரர் அன்ரானியோ இனியஸ்டா கோலாக்கினார். இம் முறை பதிலுக்கு போர்த்துக்கல் அணியும் கோல் அடித்தது.

3-வது வாய்ப்பில் ஸ்பெயின் மீண்டும் கோல் அடித்தது. இந்தக் கோலை ஜெரார்ட் பீகே கோலாக்கினார். இம் முறை போர்த்துக்கல் வீரர் நானி பதில் கோல் அடித்தார்.

4-வது வாய்ப்பையும் ஸ்பெயின் அணி கோலாக்கியது. பதிலுக்கு போர்த்துக்கல் அணியால் கோல் அடிக்க முடியாமல் போக ஸ்பெய்ன் 3:2 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது.

5-வது மற்றும் இறுதி வாய்ப்பில் ஸ்பெயின் வீரர் பப்ரிகாஸ் கோலாக்கினார். இறுதியில் பெனால்டி ஷூட் அவுட்டில் 4:2 என்ற கோல் கணக்கில் போர்த்துக்கல் அணியை வீழ்த்தி ஸ்பெயின் அணி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

நடப்பு சம்பியனான ஸ்பெயின் அணி யூரோ கிண்ண இறுதிப் போட்டிக்கு தகுதி பெறுவது இது இரண்டாவது முறையாகும்.

# விம்பிள்டன் டென்னிஸ்: பெடரர், ஜோகோவிச், கிலிஸ்டர்ஸ் மூன்றாவது சுற்றுக்குத் தகுதி; சமந்தா அதிர்ச்சித் தோல்வி

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் மிக உயரிய விம்பிள்டன் டென்னிஸ் போட்டி இங்கிலாந்தின் தலைநகர் லண்டனில் நடந்து வருகின்றது.

போட்டியின் 3-ம் நாளான நேற்றுமுன்தினம் ஆண்கள் ஒற்றையர் 2-வது சுற்றில் 6 முறை சம்பியனான சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், இத்தாலியின் பேபியோ போக்கனியை சந்தித்தார்.

அனுபவம் வாய்ந்த பெடரர் 6-1, 6-3, 6-2 என்ற நேர் செட்டில் போக்கனியை எளிதில் தோற்கடித்து 3-வது சுற்றுக்கு முன்னேறினார்.

இந்த ஆட்டத்தை இங்கிலாந்து இளவரசர் சார்ல்ஸ் தனது மனைவி கமிலாவுடன் நேரில் பார்த்து ரசித்தார்.

இளவரசர் சார்ல்ஸ்1, விம்பிள்டனுக்கு வருகை தருவது 1970-ம் ஆண்டுக்குப் பின் இதுவே முதல் முறையாகும்.

மன்னர் குடும்பத்தினரின் முன் டென்னிஸ் விளையாடியது மகிழ்ச்சி அளிப்பதாக பெடரர் குறிப்பிட்டார்.

பெண்கள் ஒற்றையர் 2-வது சுற்றில் 5-ம் நிலை வீராங்கனையும்1, அமெரிக்க ஓபன் சம்பியனுமான அவுஸ்திரேலியாவின் சமந்தா ஸ்டோசர் அதிர்ச்சி தோல்வி அடைந்தார்.

அவர் 72-ம் நிலை வீராங்கனை அரநஸா ரஸ்சிடம்(நெதர்லாந்து) 2-6, 6-0,4-6 என்ற செட் கணக்கில் வீழ்ந்தார்.

சமந்தா ஸ்டோசர், விம்பிள்டனில் இதுவரை பெரிய அளவில் சாதித்ததில்லை.

10-வது முறையாக இந்த தொடரில் பங்கேற்ற அவர், அதிகபட்சமாக 2009-ம் ஆண்டு 3-வது சுற்று வரை வந்திருக்கிறார்.

ஜோகோவிச்

நடப்பு சம்பியனும், உலகின் முதல் நிலை வீரருமான ஜோகோவிச் 2-வது சுற்றில் அமெரிக்காவைச் சேர்ந்த ரியானை எதிர் கொண்டார்.

இதில் ஜோகோவிச் 6-4,6-4 ,6-4 என்ற நேர் செட் கணக்கில் எளிதில் வென்று 3-வது சுற்றுக்கு தகுதி பெற்றார்.

8-ம் நிலை வீரரான டிப்ஸரேவிச் (செர்பியா) 5-7,7-5,6-4,6-2 என்ற செட் கணக்கில் அமெரிக்காவை சேர்ந்த ரியான் சுவிட்லிங்கை தோற்கடித்து 3-வது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றைய ஆட்டங்களில் அண்டி ரோட்டிக்(அமெரிக்கா), அல்மார்கோ (ஸ்பெயின்) ஆகியோர் வெற்றிபெற்று 3-வது சுற்றில் நுழைந்தனர்.

முன்னாள் முதல்நிலை வீராங்கனையான கிம் கிலிஸ்டர்ஸ் (பெல்ஜியம்),6-3;6-3 என்ற நேர் செட் கணக்கில் கிளாக் கோவை (செக் குடியரசு) வீழ்த்தி 3-வது சுற்றுக்கு தகுதி பெற்றார்.

3-ம் நிலை வீராங்கனையான ரன்ட்வாஸ்சா(போலந்து) 6-2,6-1 என்ற கணக்கில் எலினாவை (ரஷ்யா) தோற்கடித்தார்.

முன்னாள் முதல்நிலை வீராங்கனையான வோஸ்னியாக்கி முதல் சுற்றிலேயே அதிர்ச்சிகரமாக தோற்றார்.

முதல்நிலை வீராங்கனை மரியா ஷரபோவா (ரஷ்யா) பிரன் கோவாவுக்கு (பெல்ஜியம்) எதிரான ஆட்டத்தில் 7-6,3-1 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தபோது, மழையால் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

ஆண்கள் இரட்டையர் முதல் சுற்றில் இந்தியாவின் மகேஷ் பூபதி -ரோகன் போபண்ணா ஜோடி 6-0,7-6(), 6-2 என்ற நேர் செட்டில் மார்சல் பெல்டன் (உருகுவே),மலெக் ஜஸிரி (துனிசியா) இணையை வீழ்த்தி 2-வது சுற்றை எட்டியது.

## பிரபாகரனின்...

நிலையில் மாகாண சபைத் தேர்தல்களை நடத்த ஏன் அரசாங்கம் தயங்குகின்றது?

தெரிவு செய்யும் உரிமைமக்களுக்கு இருக்க வேண்டும். அந்த உரிமையை அரசாங்கம் மறுத்து வருகின்றது.

எனவே தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்திற்கும் வித்தியாசம் கிடையாது. தேர்தலின் மூலம் கிடைக்கப்பெறும் நன்மைகள் வடக்கு மக்களுக்கு கிடைக்க வேண்டும்.

மாகாண சபைத் தேர்தலை நடத்தாமை அப்பிரதேச மக்களின் ஜனநாயக உரிமைகளை ஒடுக்கும் செயலாகவே கருதப்பட வேண்டும்

மக்களின் ஜனநாயக உரிமைகளை அரசாங்கம் முடக்குமானால் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் வேறுபாடு கிடையாது என ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார். (எ-1)

# முதுகல்விமாணி மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புகள் பீடத்தால் நடத்தப்படும் முதுகல்வி மாணி கற்கை நெறிக்கான விரிவுரைகள் நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் இடம்பெற மாட்டா தென யாழ்.பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புகள் பீட தகவல்கள் தெரிவிக்கின்றன. (நு)

# வடக்கு மாகாண சபைத்...

வடமத்தி, கிழக்கு மற்றும் சப்பிரகமுக மாகாண சபைத் தேர்தல்களை நடத்த தீர்மானித்துள்ள அரசாங்கம், இன்னமும் வடக்கு மாகாணத் தேர்தலை நடத்துவதில் ஆர்வம் காட்ட வில்லையே என்று ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர், வடமாகாணத் தேர்தலுக்கான வாக்காளர் நிரலை தயாரிப்பது என்பது ஓரிரு வாரங்களில் செய்யக் கூடிய விடயமல்ல.

இதற்கு மேலாக வடக்கில் புதைக்கப்பட்டுள்ள நிலக்கண்ணிவெடிகள் முற்றாக அகற்றப்படவில்லை. 90 வீதமான கண்ணி வெடிகளே அகற்றப்பட்டுள்ளன.

இவை முற்றாக அகற்றப்பட்டு வடக்கின் முழுமையான சிவில் நிர்வாகம் முன்னெடுக்கப்பட வேண்டும். வடக்கில் தற்போதைக்கு 95 வீதமான அளவில் மாத்திரமே சிவில் நிர்வாகம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஏனைய 5 வீதமானவர்களுக்கு அசாதாரணத்தை ஏற்படுத்த முடியாது.

இவ்வாறாக சில நடைமுறைச் சிக்கல்கள் காரணமாகவே வடக்கில் தேர்தலை தற்போதைக்கு நடத்த சாத்தியப்படாது என்று கூறுகிறோம்.

வெகுவிரைவில் வடக்கில் சிறந்தவொரு ஜனநாயக நீரோட்டத்தை ஏற்படுத்துவதற்காக தேர்தல் நடத்தப்படும் என்று அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

# வெடி பொருட்...

யிலான குழுவினர் மேற்படி பொருட்களை மிட்டெடுத்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளினால் புதைத்து வைக்கப்பட்ட இப்பொருட்களை மீட்டெடுத்த பொலிஸ் புலனாய்வாளர்கள் மேலும் சில இடங்களில் இவ்வாறு பரல்களில் டீசல் புதைத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் தமக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளதுடன் அவற்றையும் வெகு விரைவில் மீட்பதற்கான நடவடிக்கையினை முடுக்கிவிட்டதாகவும் தெரிவித்தனர். (எ-2,11)

# சில மணி நேரம் மட்டும்...

ஜனாதிபதி மகிந்த மற்றும் பாதுகாப்புச் செயலருடன் பாதுகாப்பு விவகாரங்கள் குறித்து சிவ்சங்கர் மேனன் பேசுவாரா என்று கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்திடம் வினவிய போது, மேலதிக கருத்துக்கள் எதையும் வெளியிட மறுத்து விட்டது.

சந்திப்புக்கள் முடிந்த பின்னர் இன்று மாலை அது பற்றிய அறிக்கை வெளியிடப்படும் என்று இந்தியத் தூதரகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, போர் முடிபுக்கு வந்த பின்னர்படையினர் மீள்நிலைப்படுத்தப்பட்டுள்ளதால், வடக்கில் குறிப்பாக, யாழ்.குடாநாட்டில் படைக்குறைப்பு ஒரு சிக்கலுக்குரிய விவகாரம் அல்ல என்று இலங்கையின் மூத்த அரச அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

சிவ்சங்கர் மேனன் இந்த விவகாரம் குறித்து சர்ச்சை எழுப்பினாலும் ஜனாதிபதியோ, பாதுகாப்புச் செயலரோ விட்டுக் கொடுக்கும் நிலையில் இல்லை என்றே தெரியவருகின்றது. (எ-11)

# 4ஆம் மாடி...

மூலப்பிரதி எடுக்கப்பட்ட பின்னர் அடுத்த கட்டம் குறித்து சிந்திக்கப்படும் எனவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-11)

# தமிழ் அரசியல் கைதி...

வழக்குத் தாக்கல் செய்யப்பட்டோர், வழக்கு விசாரணைகளின் பின்னர் தண்டனை அனுபவிப்போர் என அனைத்து தமிழ் கைதிகளும் இந்த புனர்வாழ்வு திட்டத்தில் உள்வாங்கப்படவுள்ளனர்.

இந்த புனர்வாழ்வு நடவடிக்கை முற்று முழுதாக தமிழ் கைதிகளின் சுயவிருப்பத்தின் பேரிலேயே முன்னெடுக் கப்படுகின்றது. இதில் எந்தவொரு வற்புறுத்தலும் இல்லை. இது நாடு முழுவதிலுமுள்ள சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் கைதிகளுக்காக நடைமுறைப்படுத்தப்படுகிறது என்று புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்தது.

இந்த திட்டம் நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், நேற்றுக் காலை கொழும்பு புதிய மகசின் சிறைச்சாலைக்குச் சென்ற சிறைச்சாலை ஆணையாளர் குலதுங்க, மேற்படி புனர்வாழ்வுத்திட்டம் தொடர்பில் கைதிகளிடம் விளக்கமளித்துள்ளார்.

குறித்த சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 190 தமிழ் கைதிகளையும் அழைத்து சுமார் இரண்டரை மணித்தியாலங்கள் வரை பேச்சுவார்த்தை நடத்தியுள்ள ஆணையாளர் குலதுங்க, அவர்களிடம் ஒரு தொகை வெள்ளை பத்திரங்களையும் கையளித்து, புனர்வாழ்வுக்கு விரும்பின் கடிதம் எழுதித்தருமாறும் கோரியுள்ளார்.

இந்தத் திட்டம் யாழ்ப்பாணம், வவுனியா, அனுராதபுரம், கொழும்பு உள்ளிட்ட அனைத்து சிறைச்சாலைகளிலும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் கைதிகளுக்காக நடைமுறைப்படுத்தப்படுகிறது என்று தெரிவித்துள்ள ஆணையாளர், விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்பு பட்டோர், அவர்களுக்கு உதவி செய்தோர் உள்ளிட்ட அனைத்து தமிழ் கைதிகளும் உள்வாங்கப்படுவர் என்றும் கூறியுள்ளார்.

இதனையடுத்து மேற்படி சிறைச்சாலையிலுள்ள 190 சிறைக்கைதிகளும் தங்களது சுய விருப்பத்தின் பேரில் புனர்வாழ்வு பெறத் தயார் என கடிதம் மூலம் உறுதியளித்து ஆணையாளர் குலதுங்கவிடம் கையளித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-2)

# 2000த்கும் மேற்பட்டவர்...

வழங்கப்படவுள்ளது.

கடந்த 2004ஆம் ஆண்டுக்கும் 2011 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் பட்டம் பெற்ற பல்கலைக்கழக பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்க பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

கடந்த 2010,2011ஆம் ஆண்டுகளில் பட்டம் பெற்ற பட்டதாரிகளை இந்த பட்டதாரிகள் பயிலுநர் ஆட்சேர்ப்பில் இணைத்துக் கொள்வதில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ள போதும் தற்போது மேற்குறிப்பிட்ட காலப் பகுதியில் பட்டம் பெற்றவர்களையும் இணைத்துக் கொள்ளுமாறு அமைச்சு அறிவித்துள்ளது.

பட்டதாரி பயிலுநர்களாக இணைத்துக் கொள்ளப்படுபவர்கள் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கும் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள் இது தவிர ஏனைய அமைச்சுக்களின் திணைக்களங்களிலும் நியமிக்கப் படவுள்ளனர்.

நேர்முகத் தேர்வில் தோற்றி யாழ்.மாவட்டத்தில் பட்டதாரி பயிலுநர்களாக இணைத்துக் கொள்ளப்படவுள்ளவர்களின் பெயர் விபரம் மாவட்ட செயலகத்தினால் தயாரிக்கப்பட்டு வருகின்றது. அந்தப்பணி இன்னும் ஒரு சில தினங்களில் முடிபடைந்து விடும். பணிகள் முடிபடைந்தவுடன் பெயர் விபரங்கள் வெளியிடப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை பல மாவட்டங்களில் உயர் தேசிய டிப்ளோமா கற்கைநெறியை பூர்த்தி செய்தவர்களுக்கு பட்டதாரி பயிலுநர் நியமனம் வழங்கப்பட்ட போதிலும் யாழ்.மாவட்டத்தில் அதுகுறித்து சிறிதளவேனும் யோசிக்க எவரும் முன்வரவில்லை என உயர் தேசிய டிப்ளோமா மாணவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (எ-6)

# வவு.சிறைக்...

உண்ணா விரதப் போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் உத்தரவின் பேரில் வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ்க்கைதிகள் மூவர் பூசா சிறைக்கு கடந்த 26ஆம் திகதி மாற்றப்பட்டனர்.

எனினும் அவர்களில் ஒருவருக்கு எதிராக அனுராத புரத்தில் வழக்கு உள்ளதாக தெரிவித்து அவரை அனுராதபுரம் சிறையில் தடுத்து வைத்தனர் எனவும் அவ்வாறு தடுத்து வைக்கப்பட்டவர் தனி அறையில் இருப்பதால் அவருக்கு ஆபத்துக்கள் இருப்பதாக தெரிவித்துமே அவர்கள் இந்த உண்ணா விரதத்தை மேற்கொண்டு வருகின்றனர். (எ-2)

விரைவில்....
A/L - 2012 மாணவர்களுக்கான
"புவியியற் கருத்தரங்கு"
1 ஆசிரியர் ⇨ N. BABU
DMI - ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (8729)

மாபெரும் கணக்கியல் கருத்தரங்கு
உயர்தர மாணவர்களுக்கான
கணக்கியல் கருத்தரங்கு
NIE இன் பரீட்சை வழிகாட்டி உத்தியோகத்தரும் கணக்கியல் ஆசிரியருமான திரு.M.A.M Zarook அவர்களினால் நடாத்தப்படுகின்றது. நீங்களும் உங்களது பரீட்சையில் வெற்றிபெற வேண்டுமா?
தொடர்பு கொள்ள வேண்டிய இல.:-
0777630708, 0777751382
கருத்தரங்கு நடைபெறும்
திகதி : 30.06.2012, 01.07.2012
இடம் : யாழ்/மத்திய கல்லூரி மண்டபம்
நேரம் : காலை 9 - 4
அனுமதிக் கட்டணம் : 500/-
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டது.
அனுசரணை:- Greenwich College (Pvt) Ltd
(C-356)

யாழ் மண்ணில்....

கல்யாணமாலை
KALYANA MALAI
(சர்வதேச இலவச திருமண சேவை)

இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
எதிர்வரும் ஜூலை 1ந் திகதி முதல்
உங்கள் வலம்புரியில் கல்யாணமாலையின்
மணமக்கள் தேவை
தொடர்ந்து வெளிவரும். திருமணப் பொருத்தங்களை இலகுவாக்க நாள்தோறும் வலம்புரியில் வெளிவரும் கல்யாணமாலையை வாசிக்கத் தவறாதீர்கள்
ஊடக அனுசரணை வலம்புரி

Lap Tops For Sale
HP க்கு வெகுமதிகள் உண்டு


| | |
|---|---|
| HP COMPAQ CQ43 2nd GEN D | 56000/= |
| HP 630 i3 | 66000/= |
| HP 630 i5 | 75000/= |
| HP PAVILION G6 i3 | 69000/= |
| HP PAVILION G6 i5 | 78000/= |
| DELL i3 | 69000/= |
| DELL i5 | 79000/= |
| DELL i7 | 99000/= |
| TOSHIBA i3 | 63000/= |
| DV6 15" i5 | 108000/= |
| DV6 14" i5 | 95000/= |
| HP BRANDED PC Doual core | 55000/= |

நளின் in மெகா Sales

உங்கள் தெரிவுக்கு முந்துங்கள்
hp DELL Authorised business Partner
Assembled Pc Doul core, i3, i5, i7 3 years Warranty
NALIN Information Technologies Pvt Ltd
4 GB Pen drive = 850/ 3 years Warranty
8 GB Pen drive = 1100/ 3 years Warranty
16 GB Pen drive= 1850/ 3 years Warranty
HSDPA Dongle = 3800/= = 6000/= Warranty
இலவசம்
Head Phone
Mouse
Cooler Fan
Kaspersky 2012
Luxan Plaza, Kasthuriyar Road, Jaffna. / 195/2, Parameswara Junction, Jaffna.
e.mail - nalin@nit.lk web - www.nit.lk T.P: 0212220838 / T.P: 0212221121 / 0777667975

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.06.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.